Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை.
சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.
30°c 28°c

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 238 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆடி 06, திங்கள் 22.07.2013

# ஈழத்துக்கான அரசியல் போரை கூட்டமைப்பு முன்னெடுக்கும்

## எச்சரிக்கிறது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

கொழும்பு, ஜூலை 22
"பொலிஸ், காணி அதிகாரங்களை நீக்காது அரசு வடமாகாணசபைத் தேர்தலைநடத்துமானால், அதைப் பயன்படுத்திக் கொண்டு ஈழத்தை உருவாக்குவதற்கான அரசியல் போரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுக்கும்" என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடமாகாணசபைத் தேர்தல், பொதுநலவாய மாநாடு ஆகியன முடிவடைந்த பின்னர் அரசமைப்பில் அரசு திருத்தங்களை மேற்கொள்ளும் என வெளியாகியுள்ள செய்திகள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,



"வடமாகாணசபைத் தேர்தலுக்குப் பின்னர் 13இலிருந்து பொலிஸ், காணி அதிகாரங்களை நீக்குவதென்பது முடியாத காரியமாகும். அரசின் முயற்சிக்குக் கூட்டமைப்பு நிச்சயம் தடங்கல் ஏற்படுத்திவிடும். எனவே, நல்ல நேரம் பார்த்துக்கொண்டிருக்காது நாட்டுக்கு அச்சுறுத்தலாக விளங்கும் மேற்படி அதிகாரங்களை நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

13 இல் மாற்றமின்றி தேர்தல் நடத்தப்படுமாயின், அது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என்பதுடன், தனி ஈழ முயற்சிக்கும் வழி வகுக்கும். ஆகவே, இந்தியாவைப் பற்றியோ அல்லது பொதுநலவாய மாநாடு குறித்தோ யோசிக்காது 13இல் இருந்து பொலிஸ், காணி அதிகாரங்களை நீக்கவேண்டும். சிங்கள மக்களின் நிலைப்பாடு இதுதான் என்பதை அரசு உணரவேண்டும் - என்றார். (ஙு-சி)

இந்தியா

பக். 06
தீவிரவாதிகளின் இலக்கு முக்கிய விமானத் தளங்கள்

உலகம்

பக். 07
தெற்காசியப் பாதுகாப்பில் இந்தியாவே முக்கிய சக்தி

விளையாட்டு

பக். 23
வெற்றியை நோக்கி இங்கிலாந்து

## கூட்டமைப்பு வேட்பாளர்களில் சித்தார்த்தனும், சங்கரியும்

யாழ்ப்பாணம், ஜூலை 22
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் எதிர்வரும் வடமாகாணசபைத் தேர்தலில் புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் யாழ். மாவட்டத்திலும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி கிளிநொச்சி மாவட்டத்திலும் போட்டியிடவுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண சபைக்கான அங்கத்துவ கட்சிகளின் ஆசனப் பங்கீடுகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. ஒவ்வொரு கட்சிகளும் தமது வேட்பாளர்கள் தொடர்பான விவரங்களை தயார் செய்துள்ளன.

அதனடிப்படையில் யாழ். மாவட்டத்தில் பொது வேட்பாளராக முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்ரன், புளொட் தலைவர் சித்தார்த்தன், தமிழரசுக் கட்சியின் துணைப் பொதுச் செயலர் சி.வி.கே.சிவஞானம், பாஷையூரைச் சேர்ந்த இ.ஆர்னல்ட், யாழ்ப்பாண வர்த்தக சங்கத் தலைவர் இ.ஜெயசேகரம், வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் பொ.கனகசபாபதி, சாவகச்சேரியைச் சேர்ந்த சட்டத்தரணி சயந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரனின் சகோதரர் சர்வேஸ்வரன், சூழலியலாளர் பொ.ஐங்கரநேசன், தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியைச் சேர்ந்த கஜதீபன் மற்றும் ப.தர்சானந், வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர் க.சிவாஜிலிங்கம், மாநகரசபை உறுப்பினர் க.விந்தன் ஆகியோரது பெயர்கள் பரிசீலனையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க திருகோணமலை மாவட்ட பொறுப்பாளராக இருந்த எழிலனின் மனைவி போட்டியிடுவார் என்று எதிர்

தொடர்ச்சி: பக்கம் 21

## கூட்டமைப்பின் ஆசனப் பங்கீடு இறுதிமுடிவு இன்று எட்டப்படும்

### நேற்றைய கூட்டத்திலும் இழுபறி

யாழ்ப்பாணம், ஜூலை 22
வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள கட்சிகளுக்கான ஆசனப் பங்கீடு விபரங்கள் வவுனியாவில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் இறுதிசெய்யப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இருப்பினும் நேற்றும் வவுனியா மாவட்டத்துக்கான ஆசனப் பங்கீடு தொடர்பில் இரு கட்சிகளின் இறுக்கமான நிலைப்பாட்டினால் முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பில் இறுதி முடிவு எட்டுவதற்காக இன்று மாலை யாழ். மாவட்டத்திலுள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

இதுவரை எட்டப்பட்ட முடிவுகளின் பிரகாரம் யாழ். மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சிக்கு 7 ஆசனங்

தொடர்ச்சி: பக்கம் 21

## உண்மையைக் கண்டறியும் குழு முள்ளிவாய்க்காலுக்கும் செல்லும்

கொழும்பு, ஜூலை 22
உண்மையைக் கண்டறிவதற்காக உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு இன்று இலங்கை வரும் பிரிட்டன் நாடாளுமன்றக்குழுவினர், இறுதிக் கட்டச் சமரில் மனிதப் படுகொலைகள் அரங்கேறிய முள்ளிவாய்க்கால் பகுதிக்கும் செல்லவுள்ளனர்.

அதேவேளை நாளை செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களுக்குச் செல்லும் மேற்படிக் குழுவினர் வடக்கு அரசியல் செயற்பாட்டாளர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் உள்ளிட்டோரைச் சந்தித்து முக்கிய பேச்சுகளில் ஈடுபடவுள்ளனர் என்றும் அறியமுடிகின்றது.

அத்துடன், கொழும்பில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்தித்தும் பிரிட்டன் குழுவினர் பேச்சுகளில் ஈடுபடுவார்கள் என்றும் தெரியவருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்து லண்டன் குழுபேச்சு நடத்தும் என கூறப்பட்டாலும் அது குறித்து இன்னும் உறுதியான தகவல்கள் வெளியாகவில்லை. சந்திப்புக்கான அழைப்பு தமது கட்சிக்கு இன்னும் கிடைக்கவில்லை என்று கூட்டமைப்புத் தகவல் தெரிவித்தன.

போருக்குப் பின்னரான இலங்கை அரசின் நல்லி

தொடர்ச்சி: பக்கம் 21

## எப்போதும் நான் '13' க்கு எதிர்ப்பே

### சொல்கிறார் பிரதமர்

கொழும்பு, ஜூலை 22
அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்துக்குத் தான் அன்றும் எதிர்ப்பு இன்றும் எதிர்ப்பு என்று பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"17 வயதிலேயே நான் அரசியலுக்குள் உள்வாங்கப்பட்டு விட்டேன். அத்துடன், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 13ஆவது அங்கத்தவ

தொடர்ச்சி: பக்கம் 21

## இராணுவ மேஜர் நேற்று அராலியில் மர்மச் சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 22
அராலி இராணுவ முகாமில் மேஜர் தர இராணுவ அதிகாரி ஒருவர் படுக்கையில் இருந்து நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த முகாமின் பொறுப்பதிகாரியும் அம்பன் பொலை, மாம்பிட்டி கலட்ட வீதியைச் சேர்ந்தவருமான மேஜர் ஹேரத் முதியான்சலாகே சமந்த ஹேரத் (வயது -38) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவர் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் முகாமுக்குள் படுக்கைக்குச் சென்றுள்ளார். நேற்றுக்காலை சிப்பாய் ஒருவர், மேஜருக்கு தேநீர் எடுத்துச் சென்றுள்ளார். அங்கு அவர் பேச்சுமூச்சின்றிக் கிடந்ததை கண்ணுற்ற குறித்த சிப்பாய் ஏனைய படைவீரர்களுக்கு இதுபற்றி அறிவித்தனர். உடனடியாக அவர் சங்கானை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது அவர் உயிரிழந்துவிட்டார் என்பது தெரியவந்தது.

அதனையடுத்து சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. வைத்தியசாலைக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். மேலதிக இழைய பரிசோதனைகளுக்காக உடற்கூறுகள் சில கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டன. (ங-4-78)

## வடக்கு தேர்தலை நிறுத்தக்கோரும் மனு மீதான விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 22
வடக்கு மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைக்குமாறு தடை உத்தரவு கோரி "சிங்கள தேசிய முன்னணி"யின் செயலாளரான ஜயந்த லியனகே மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை எதிர்வரும் ஓகஸ்ட் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.


மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ஸ்ரீஸ்கந்தராசா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த மனுவில் பிரதிவாதிகளாக தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

வடக்கில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை முழுமையாக அகற்றிவிடுதல், வட மாகாணத்திலுள்ள அனைத்து மக்கள் சமூகங்களின் செறிவை நியாயமான முறையில் வகுத்தல், 1972, 1977 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் வடமாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்துள்ள சிங்கள மக்களை மீளகுடியமர்த்துதல், 1990 ஆம் ஆண்டில் வடமாகாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களை மீளக்குடியமர்த்துதல் ஆகிய செயற்பாடுகள் நிறைவேற்றப்படும் வரையில் வடக்கில் தேர்தல் நடத்தப்படக்கூடாது என மனுதாரர் நீதிமன்றத்திடம் கோரியுள்ளார்.

சட்டத்தரணி டீ.வீரரத்னவின் அனுசரணையுடன் மனுதாரர் சார்பாக முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி எச்.பீ. குணசேகர இந்த மனுவை ஆராய்வதற்கு மனுதாரர் விருப்பம் கொண்டிருப்பதால் அது தொடர்பாக கால அவகாசம் ஒன்றினை வழங்குமாறு விடுத்திருந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிமன்று அது தொடர்பாக ஓகஸ்ட் 6ஆம் திகதி வரையில் கால அவகாசத்தை வழங்கியிருந்தது. (ஜ-22)

யாழ்.போதனா வைத்தியசாலையில் புதிதாக

## 350 மில்லியன் ரூபா செலவில் இருதய சத்திரசிகிச்சைப் பிரிவு



யாழ்ப்பாணம், ஜூலை 22
யாழ். போதனா வைத்தியசாலையில் இருதயக் கூறு, இருதய சத்திரசிகிச்சைப் பிரிவுக்கென 350 மில்லியன் ரூபா செலவில் கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்படவுள்ளது. விரைவில் இதற்கான பணி ஆரம்பமாகும் என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

இருதயக்கூறு, இருதய சத்திரசிகிச்சைப் பிரிவுகளை ஆரம்பிப்பது, அதற்கான கட்டடத் தொகுதியை நிர்மாணிப்பது தொடர்பில் சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுத்திருந்தோம்.

இந்த நிலையில் கட்டடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு சுவிஸ் நாட்டைச் சேர்ந்த அரச சாரா நிறுவனம் ஒன்று 350 மில்லியன் ரூபா பணத்தை வழங்க முன்வந்துள்ளது.

குறித்த பிரிவு, தற்போது விடுதியிலுள்ள நோயாளர்களுக்கு உணவு தயாரிக்கப்படும் சமையலறைக் கட்டடத் தொகுதி அகற்றப்பட்டு அந்த இடத்தில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான திட்டமிடல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

வைத்தியசாலையில் தற்போது இதய சிகிச்சைப் பிரிவு மாத்திரமே இயங்கி வருகிறது. சத்திர சிகிச்சை செய்ய வேண்டியேற்படின் தென்பகுதிக்கே நோயாளர்களைக் கொண்டு செல்ல வேண்டிய நிலை உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## விஞ்ஞான பீட பீடாதிபதியாக சிறிசற்குணராஜா

யாழ்ப்பாணம், ஜூலை 22
யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதியாக பேராசிரியர் சிறி சற்குணராஜா தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

முன்னர் விஞ்ஞான பீடாதிபதியாக இருந்த பேராசிரியர் க. கந்தசாமியின் பதவிக் காலம் நிறைவடைந்ததையடுத்து பேராசிரியர் சிறிசற்குணராஜா ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இவர் கணித புள்ளி விபரவியல் துறைத்தலைவராக பணியாற்றி வந்தார். மூன்று வருடங்களுக்கு ஒருதடவை பீடாதிபதி தெரிவு இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## மேம்படுத்தல் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 22
யாழ். வலயத்துக்கு உட்பட்ட வகை III ஐச் சேர்ந்த பாடசாலைகளை மேம்படுத்தல் தொடர்பான செயலமர்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

யாழ். வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்தச் செயலமர்வில் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களையும், ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கேட்டுள்ளார். (ஜ-4)

## நிலாமுற்றம் கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 22
நிலா முற்றம் '16' நடத்தும் சிறப்புக் கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை மாலை 5.30 மணி முதல் பிறவுண் வீதியில் அமைந்துள்ள நேசன் பொப்லர் றவல்ஸ் அன்ட் ரூர்ஸ் திறந்தவெளியரங்கில் இடம்பெறவுள்ளது. இதில் வடக்கின் அபிவிருத்தியில் கலாசாரப் பண்பாட்டு மரபியலின் தாக்கங்கள் என்ற தலைப்பில் கலந்துரையாடல் இடம்பெறும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஊடகவியலாளர்கள், சமூகவியலாளர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (ஜ-400)

# பொதுநலவாய மாநாட்டுக்குப் பின்னர் 13 இற்கு சட்டப்படி சமாதிகட்டும் அரசு

### இலங்கை – இந்தியக் கூட்டு நாடகம் அம்பலமாகும் என்கிறது ஐக்கிய சோஷலிஸக் கட்சி

கொழும்பு, ஜூலை 22
பொதுநலவாய மாநாடு முடிவடைந்த பின்னர் 13 ஆவது திருத்தத்துக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு சட்டரீதியாக சமாதிகட்ட எண்ணியுள்ளது என்றும், நவம்பருக்குப் பிறகு இலங்கை, இந்தியாவின் கூட்டு நாடகம் அம்பலத்துக்கு வரும் என்றும் ஐக்கிய சோஷலிஸக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது. வடக்கும், தெற்கும் இணைந்து ராஜபக்ஷ அரசை வீட்டுக்கு விரட்டியடிக்காவிட்டால் இந்த நாட்டில் எதிர்காலத்தில் பெரும் அழிவுகள் ஏற்பட வாய்ப்பிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

13 ஆவது திருத்தச்சட்ட விவகாரம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அக்கட்சியின் பொதுச் செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய மேற்கண்ட விடயங்களைத் தெரிவித்தார்.

''இந்தியாவின் ஆலோசனையின் பிரகாரம்தான் 13 இல் கைவைக்காது வடக்குத் தேர்தலை நடத்துவதற்கு அரசு முன்வந்துள்ளது. எனினும், வடக்குத் தேர்தல் பொதுநலவாய மாநாடு ஆகியன முடிவடைந்ததும் 13இற்கு அரசு நிச்சயம் முடிவுகட்டும். அதற்கான சட்ட ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. முதற்கட்டமாக பொலிஸ், காணி அதிகாரங்கள் பறிக்கப்படவுள்ளதுடன், ஏனைய அதிகாரங்களையும் பின்னர் பறித்தெடுப்பதற்கு அரசு திட்டம்தீட்டி வருகின்றது.

''அத்துடன், தமிழகத்தை சமாளிப்பதற்காகவே இலங்கையை மிரட்டுவதுபோல் இந்தியா படம்காட்டுகின்றது. நவம்பருக்குப் பின்னர் 13 விடயத்தில் இந்திய - இலங்கை கூட்டு நாடகத்தின் முகத்திரை கிழியும். அப்போது கூட்டுச்சதி அனைவருக்கும் அம்பலமாகும்.

அதேவேளை, மஹிந்த அரசின் ஆட்சி நீடிக்குமானால் இந்த நாட்டில் மேலும் பல பிரச்சினைகள் விஸ்வரூபமெடுக்கலாம். எனவே, வடக்கும், தெற்கும் இணைந்து இந்த அரசை வீட்டுக்கு அனுப்புவதே பிரச்சினைக்கு முதற்கட்டத் தீர்வாகும்'' - என்றும் அவர் கூறினார்.

## மஹியங்கனையில் தொடர்ந்தும் பதற்றம்

கொழும்பு, ஜூலை 22
பங்கரகம்மன்ன பிரதேசத்தில் தாம் நிம்மதியாக வாழ முடியவில்லை என மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். பங்கரகம்மன்ன பகுதியில் பள்ளிவாசல் தாக்கப்பட்டமை மற்றும் மூடப்பட்ட சம்பவங்களை அடுத்தே இந்தப் பதற்றம் நிலவுவதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

பங்கரகம்மன்ன பகுதியில் 700 இற்கும் அதிகமான முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. அண்மைக் காலமாக இந்தப் பகுதிகளில் மக்களை அச்சுறுத்தும் வகையிலான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. கடந்த சனிக்கிழமை இரவு தராவிஹ் தொழுகை நேரங்களில் எட்டு வாகனங்களில் வந்த பொதுபலசேனாவினர் ஊரைச் சுற்றி நோட்டமிட்டனர். எதிர்வரும் 2 ஆம் திகதி பொதுபலசேனாவினரின் கூட்டம் இந்தப் பகுதியில் இடம்பெறவுள்ளது.

இதனால் முஸ்லிம் மக்களுக்கு இந்தப் பகுதியில் பெரும் சிக்கல் நிலை தோற்றம் பெற்றுள்ளது என்கின்றனர்.

இந்த நிலையில் அங்குள்ள முஸ்லிம்கள் அவதானத்துடன் செயற்படவேண்டுமென பங்கரகம்மன்ன பள்ளிவாசல் நிர்வாகத்தினர் கேட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஜ-10)

## 1996 இற்குப் பின்னர் அரச வங்கி ஊழியருக்கு ஓய்வூதியம் இல்லை

### ஐ.தே.க. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 22
1996ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரச வங்கிகளில் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களுக்கு தற்போதைய அரசு ஓய்வூதியம் வழங்கத் தவறியுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க இராஜகிரியவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கேள்வி எழுப்பினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

''நாட்டில் இப்போதைய சூழ்நிலையில் அனைத்து துறைகளும் வீழ்ச்சியடைந்துள்ளன. ரூபாவின் பெறுமதி நாளுக்கு நாள் சரிந்து வருகிறது. இப்போது அமெரிக்க டொலருக்கு 134ரூபா செலுத்த வேண்டியுள்ளது.

''நான்கு பேர் அடங்கிய குடும்பத்தின் மாதச் செலவு 44,928 ரூபாவாக அதிகரித்துள்ளது. அதனால் எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் அரசு ஊழியர்களின் சம்பளம் 15,000 ரூபாவரை அதிகரிக்கப்பட வேண்டும்.

''ஏற்றுமதித்துறையில் 50% வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதி அறவிடும் போதும் அது மத்திய வங்கியில் வைப்புச் செய்யப்படவில்லை.

''இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தால் நாமல் ராஜபக்ஷ சென்று பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும் என கூறிவருகிறார். இதனை தொடர்ந்து செய்ய முடியாது.

''பஸ் ஊழியர்களை அச்சுறுத்தி அவர்களுடைய போராட்டத்தை கைவிட வைக்கின்றனர். அவர்களது பிரச்சினைக்கு தீர்வில்லை. விவசாயிகளின் உர பற்றாக்குறை பிரச்சினையும் மீனவர்களின் பிரச்சினையும் தீர்க்கப்படவில்லை'' எனக் குறிப்பிட்டார். (ஜ-சி)

## சாவகச்சேரி-தனங்களப்பு வீதியைப் புனரமைக்குக

தென்மராட்சி, ஜூலை 22
சாவகச்சேரி-தனங்களப்பு வீதி இன்னமும் புனரமைக்கப்படாதுள்ளதால் போக்குவரத்துச் சிரமம் ஏற்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

சுமார் நான்கு கிலோமீற்றர் நீளமான சாவகச்சேரி-தனங்களப்பு வீதி பல இடங்களில் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. அத்துடன் இந்த வீதியில் காணப்படும் எட்டு மதகுகளில் சில உடைந்த நிலையில் அவை மணல் போட்டு நிரப்பப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி ஊடாக சேவையில் ஈடுபடும் இ.போ.ச. மற்றும் தனியார் பஸ்கள் சாவகச்சேரி ஊடாகவே பயணம் மேற்கொள்கின்றன. இதுகுறித்து பாதிக்கப்பட்டுள்ள மக்கள் கருத்துத் தெரிவிக்கையில், யாழ்ப்பாணம்-மன்னார் வீதியின் பல இடங்களில் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்ற போதிலும் நான்கு கிலோமீற்றர் நீளமான குறித்த வீதியினைப் புனரமைக்க உரிய அதிகாரிகள் இன்னமும் நடவடிக்கை எடுக்கவில்லை. தென்மராட்சி தெற்குப் பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள ஆயிரத்து 500க்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் உட்பட பொதுமக்கள் சாவகச்சேரிக்குச் செல்வதற்கு இந்த வீதியில் பெரும் சிரமத்தின் மத்தியில் போக்குவரத்துச் செய்ய வேண்டியுள்ளது என்று தெரிவிக்கின்றனர். (ஜ-9)

## இந்திய மீனவருக்கு மீண்டும் விளக்கமறியல்

மன்னார், ஜூலை 22

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 21 இந்திய மீனவர்களுக்கு ஓகஸ்ட் 2 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்கள் 21 பேர் கடந்த மாதம் 6 ஆம் திகதி இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்துக் கொண்டிருந்தனர் என்றும் கடற்படையினர் அவர்களைக் கைது செய்து தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

தலைமன்னார் பொலிஸார் விசாரணைகளின் பின் மன்னார் நீதிமன்றில் முற்படுத்தியபோது விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அவர்கள் மீண்டும் வெள்ளிக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் மீனவர்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (வ-12)

## நுணாவில் ஏ-9 வீதியில் விபத்து; கணவன் சாவு; மனைவி படுகாயம்

### நேற்று மோ.சைக்கிளில் சென்றவேளை

தென்மராட்சி, ஜூலை 22

சாவகச்சேரி நுணாவில் ஏ-9 வீதியில் பொலிஸ் நிலையத்துக்குச் சமீபமாக காரும் - மோட்டார் சைக்கிளும் மோதியதில் மோட்டார் சைக்கிளோட்டியான கணவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவரது மனைவிக்கு கால் முறிந்ததுடன் படுகாயங்களுக்கு இலக்கானார்.

நேற்றுக் காலை இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் கிளிநொச்சி நகரைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை கணேசரத்தினம் (வயது-63) என்பவரே சாவடைந்தவர் ஆவார். இவரது மனைவியான கணேசரத்தினம் பரமேஸ்வரி (வயது-63) என்பவருக்கு கால் முறிந்ததுடன் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

கணேசரத்தினத்தின் சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

வாகன சாரதியை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்ததுடன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சியிலிருந்து காலையில் புறப்பட்ட கணவனும் மனைவியும் சாவகச்சேரியில் உள்ள தனியார் வைத்திய சாலையில் வைத்திய நிபுணரிடம் சிகிச்சை பெறுவதற்கு பதிவு செய்து விட்டு வெளிநாட்டில் உள்ள மகனுக்கு பொருள்கள் கொடுத்து விடுவதற்காக யாழ்ப்பாணம் சென்ற வழியிலேயே இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

### நல்லூர் பிரதேச செயலர் பிரிவில்

## தேசிய அ.அட்டை வழங்கும் 3 நாள்கள் நடமாடும் சேவை

### நாளை அரியாலை மண்டபத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 22

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான நடமாடும் சேவை நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் தொடர்ந்து மூன்று தினங்கள் இடம்பெறவுள்ளது.

குறிக்கப்பட்ட இடங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறும் இந்த நடமாடும் சேவையில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்டவர்கள் பங்குபற்றி விண்ணப்பிக்கலாம்.

இதற்கமைவாக நாளை செவ்வாய்க்கிழமை அரியாலை சித்தி விநாயகர் ஆலயம் முன்பாகவுள்ள அருளம்பலம் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ள நடமாடும் சேவையில் ஜே/89, ஜே/90, ஜே/91, ஜே/92, ஜே/93, ஜே/94, ஜே/95, ஜே/[illegible] வரையான கிராம சேவகர் [illegible]களைச் சேர்ந்தவர்களும்- ஜே/106/, ஜே/107, ஜே/108, ஜே/109 வரையான கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் பங்குபற்றலாம்.

நாளை மறுதினம் புதன்கிழமை கொக்குவில் மஞ்சவனம்பதி முருகன் ஆலய கல்யாண மண்டபத்திலும் நடமாடும் சேவை இடம்பெறும். எதிர்வரும் 25ஆம் திகதி வியாழக்கிழமை திருநெல்வேலி சேர்.பொன்.இராமநாதன் வீதி, சரஸ்வதி திருமண மண்டபத்திலும் நடமாடும் சேவைகள் இடம்பெறும்.

இந்த நடமாடும் சேவைகளில் பங்குபற்றவுள்ள பயனாளிகள் அந்தந்தப் பிரிவு கிராம சேவகருடன் தொடர்பு கொண்டு பிறப்பு, திருமணம் என்பவற்றைப் பதிவு செய்யாதோர் பதிவு செய்யப்படவில்லை அல்லது சேதம் என்ற சான்றிதழை கட்டாயம் பெற்றிருக்க வேண்டும் என்று நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் அறிவித்துள்ளார். (ஒ-14-7)

## மீள இயங்குகிறது ப.நோ.கூ.சங்க அளவெட்டி கிளை

யாழ்ப்பாணம், ஜூலை 22

ஏறக்குறைய மூன்று மாதங்களாக மூடப்பட்டிருந்த அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கத்தின் கிளை - 12 மீண்டும் கடந்த 8 ஆம் திகதி தொடக்கம் மக்களது பயன்பாட்டுக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது என்று சங்கத்தின் பொது முகாமையாளர் எஸ்.இராஜமோகன் தெரிவித்துள்ளார்.

குறித்த சங்கத்தின் முகாமையாளர் பதவிக்கு கடமையேற்பதற்கு உரிய ஆளணி இல்லாத காரணத்தால் கடந்த ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி கிளை-12 சங்கம் மூடப்பட்டது. குறித்த சங்கத்தில் ஒரு நாளில் 5 ஆயிரம் ரூபா வருமானம் பெறமுடியாத நிலையும் ஏற்பட்டது. இதன் காரணமாகவும் சங்கத்தில் முகாமையாளர் ஆளணி இல்லாத காரணத்தாலும் சங்கத்தை மூட வேண்டிய நிலைக்கு சங்க நிர்வாகம் தள்ளப்பட்டது.

இந்த நிலையில் பிரதேச மக்களது நன்மை கருதி இருக்கக்கூடிய ஆளணியைக் கொண்டு கடந்த 8 ஆம் திகதி தொடக்கம் மீண்டும் சங்கம் இயங்கி வருகிறது என்று அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கத் தலைவர் அறிவித்திருக்கிறார். (ஒ-14)

## வவுனியாவை வந்தடைந்த 12 ஜோதிலிங்கங்கள்

பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தால் இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட 12 ஜோதிலிங்கங்களும் நேற்று வவுனியாவை வந்தடைந்தன.

இந்த ஜோதி லிங்கங்கள் இரத பவனியாக கிளிநொச்சி மற்றும் குடாநாட்டு மக்களது தரிசிப்புக்கு வைப்பதற்கான ஒழுங்கமைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஒ-14-402)

# இவை ராணுவத்துக்குரிய காணிகளாம்

## மன்னார் மாவட்டத்தில் பல இடங்களிலும் அடையாளப்படுத்திக் காட்டும் பலகைகள்




மன்னார், ஜூலை 22

மன்னார் மாவட்டத்தில் உள்ள பல காணிகள் இராணுவத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த காணிகளை அடையாளப்படுத்தும் வகையில் ''இது இராணுவத்தினருக்கு உரிய காணி'' என தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் பெயர் பலகைகள் காணிகளில் நடப்பட்டுள்ளன.

மன்னார் -தலைமன்னார் பிரதான வீதி, மன்னார் சௌத்பார் பிரதான வீதி மற்றும் பனை மரக்காடுகள், அடர்ந்த காடுகளிலேயே காணி ஒதுக்கீடுகள் இடம்பெற்றுள்ளன.

அதிகளவான தனியார் காணிகளும் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

கடந்த போர் காலத்தில் அதுவும் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மன்னார் மாவட்டத்தில் இருந்து பல ஆயிரக்கணக்கான தமிழ்,முஸ்லிம் குடும்பங்கள் அகதிகளாக இந்தியாவுக்கும் ஏனைய இடங்களுக்கும் இடம்பெயர்ந்து சென்றிருந்தன.

அவர்களில் அநேகர் தற்போது மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்ப ஆரம்பித்துள்ளனர்.

இடம்பெயர்ந்து சென்றவர்களை விட அதிகரித்த எண்ணிக்கையுடையவர்களாக அவர்கள் மீண்டும் சொந்த மண்ணுக்கு வருகை தந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களை மீள் குடியேற்றம் செய்வதற்கு காணி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் தனியார், மற்றும் அரச காணிகள் இராணுவத்தினருக்கு ஒதுக்கப்பட்டு வருவதாக சமூக ஆர்வலர்களும் அரசியல் வாதிகளும் விசனம் தெரிவித்துள்ளனர். (ஒ-12)

## வலைப்பாடு மீனவர்கஞ்க்கு மீன்பிடி உபகரணம் வழங்கல்

பூநகரி, ஜூலை 22

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வலைப்பாடு கிராம மீனவர்களுக்கு வன்னி கரித்தாஸ் நிறுவனத்தினால் மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுவிஸில் இயங்கும் கரித்தாஸ் நிறுவனத்தின் நிதியுதவியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வாழ்வாதார நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தெரிவான வலைப்பாடு கிராமத்தில் 5 பயனாளிகளுக்கு தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் கடந்த வாரம் வழங்கப்பட்டன.

வலைப்பாடு கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் குருஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் படகு, வெளியிணைப்பு இயந்திரம், வலைகள் என்பன கரித்தாஸ் சுவிஸ் நிறுவன இணைப்பாளர் சுஸன்னாவினால் வழங்கப்பட்டன.

நிகழ்வில் கரித்தாஸ் இலங்கைப் பிராந்திய இணைப்பாளர் ஜே.அன்ரனி, கியூடெக்- கரித்தாஸ் வன்னி இயக்குநர் அருட்திரு. ஏ.ஜே. யாவிஸ் அடிகள், பூநகரி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் என்.கிருபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-135)

# நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு சண்டிலிப்பாயில் சுகாதாரப் பிரிவினர் பாய்ச்சல்

## இரு வீட்டு உரிமையாளர் மீது வழக்குப் பதிவு

வலி.தென்மேற்கு, ஜூலை 22

அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்ட தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு யாழ். சண்டிலிப்பாய் பிரிவில் ஆலயங்கள், பாடசாலைகள், பொது இடங்கள் உட்பட 6,536 நிலையங்கள் சுகாதார உத்தியோகத்தர்களினால் பார்வையிடப்பட்டுள்ளன.

இவற்றில் நுளம்புக் குடம்பிகள் உற்பத்தியாகி இருந்த இரு வீடுகள் கண்டறியப்பட்டு உரிமையாளர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் உள்ள 28 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் 7 வலயங்களாகப் பிரிக்கப்பட்டு ஒரு வார காலமாக சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நடவடிக்கையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், மருத்துவ மாதர்கள், சுகாதாரத் தொண்டர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொலிஸார் இணைந்து கொண்டனர்.

பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 6,536 நிலையங்களிலும் 1,163 நிலையங்களில் நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய சூழல் இருப்பது அவதானிக்கப்பட்டது. 27 வீடுகளில் நுளம்புக் குடம்பிகள் உற்பத்தியாகக் கூடிய சூழல் இருந்த போதிலும், குடம்பிகள் உற்பத்தியாகியிருந்த இரு வீட்டு உரிமையாளர்களுக்கும் எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (எ)

# விக்னேஸ்வரனின் நியமனத்தின் பின்னணியில் 2 நாட்டுத் தூதரகங்கள்

## புதிய தகவல் வெளியிடுகிறார் அமைச்சர் விமல்



கொழும்பு, ஜூலை 22
வட மாகாண முதலமைச்சர் வேட்பாளராக ஓய்வு பெற்ற நீதியரசர் விக்னேஸ்வரனையே நியமிக்க வேண்டும் என்றும் மாவை சேனாதிராசாவை நியமிக்க வேண்டாம் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் இரண்டு வெளிநாட்டுத் தூதரகங்களிலிருந்து அழுத் தம் கொடுக்கப்பட்டது என அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

கட்டடத் திணைக்களத்தில் ஜூலை வேலைநிறுத்தத்தின்போது தொழில்களை இழந்தவர்களுக்கு மாதாந்தம் ரூபா 5,000 ஊதியம் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வு கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்றது. அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கில் முதலமைச்சர் வேட்பாளராக தமிழரசுக் கட்சியின் மாவட்ட கிளைகள் ஊடாக ஏகமனதாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவையே நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால், அரசியல்வாதி அல்லாத மற்றும் வடக்கு மக்களோடு சம்பந்தமில்லாத முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரனையே நியமிக்கும்படி கொழும்பிலுள்ள 2 வெளிநாட்டுத் தூதுவர்கள் அலுவலகங்கள் இரா. சம்பந்தனுக்கு அழுத்தம் கொடுத்ததன் மர்மம் என்ன? கடந்த காலத்தில் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஆயுத அச்சுறுத்தலுக்கு முடிவுகட்டப்பட்டுள்ளது. 13 ஆவது திருத்தத்தை மேலும் சக்திமிக்கதாக மாற்றுவதற்கும் அதனூடாக மேலும் சட்டங்களைத் திணிப்பதற்கும் ஓய்வுபெற்ற நீதியரசர் விக்னேஸ்வரனே ஒரு சிறந்த வேட்பாளர் என்பது 2 வெளிநாட்டுத் தூதுவர் அலுவலகங்களினதும் பரிந்துரை ஆகும்.

நீதிபதியாக விக்னேஸ்வரன் பதவிவகித்த காலத்தில் பாக்கியசோதி சரவணமுத்துவால் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. அந்த வழக்குகளைச் சட்டத்தரணியாக இருந்த சுமந்திரன் வாதிடுவார். நீதிபதி விக்னேஸ்வரன் சுமந்திரன் சார்பாகத் தீர்ப்பை வழங்குவார். இதனால் சட்டத்தரணி சுமந்திரன் வழக்கில் வெற்றி கொள்வார்.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க காலத்தில் திவிநெகும திணைக்களம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சட்டத்தரணி சுமந்திரன் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். ஆனால், சுமந்திரன் வாதிடுவதற்கு முன்வைத்த கிராம மட்டத்திலான விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் போன்ற புதிய சரத்துகள் தற்போது திவிநெகும சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன. ஆகவே, இச் சரத்துகளால் திவிநெகும திணைக்களம் மாகாண சபை ஊடாகவே நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. இதிலிருந்து வடக்கு மாகாணசபை ஊடாக மாகாணசபைச் சட்டத்தை மேலும் வலுப்படுத்துவதற்கு விக்னேஸ்வரன் போன்ற நீதியரசர்களே வடமாகாண சபைக்கு முதலமைச்சர் பதவிக்குத் தேவையாக உள்ளனர் என்பது தெரியவருகிறது.

ஓய்வுபெற்ற நீதியரசர் விக்னேஸ்வரன் ஓய்வுபெறும் போது அவருக்கு முழுச்சம்பளமும் ஓய்வாக வழங்கப்படுகின்றது. அத்துடன், நீதிபதிகளுக்கு சம்பளம் உயரும்போது ஓய்வுபெற்ற நீதிபதிகளுக்கும் அது வழங்கப்படுகின்றது. இதனை ஏன் அரசு வழங்குகின்றதென்றால், ஓய்வுபெற்ற நீதிபதிகள் அரசியல் அல்லது நாட்டுக்குப் பங்கம் விளைவிக்காமல் கௌரவமான முறையில் இருப்பதற்கே. நான் தெரிந்த மட்டில் ஓய்வு பெற்ற நீதியரசர் ஒருவர் அரசியலுக்கு வந்திருப்பதென்றால் விக்னேஸ்வரன் மட்டுமே.

இவர் அதிகாரத்திலிருக்கும் போது இவர் வழங்கிய தீர்ப்புகளையும் நாம் மீளப் பரிசீலித்துப் பார்க்கவேண்டியுள்ளது. அதிலும் ஏதும் பக்கச்சார்புகள் இருக்கக் கூடும்.

இதேவேளை, மாவை. சேனாதிராசாவுக்கு குறித்த வெளிநாட்டுத் தூதுரகங்கள் மூலம், ''உமது பிள்ளைகள் வாழ்வது எமது நாட்டில். அவர்களை மீள இலங்கைக்கு அனுப்பவேண்டி வரும். உமக்கும் இந்த நாட்டுக்கு வரமுடியாமல் செய்து விடுவோம். முதலமைச்சர் வேட்பாளர் விக்னேஸ்வரனுக்கு விட்டுக்கொடுக்க வேண்டும்'' என்று அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளன.- என்றார்.

(ங-சி)

## சிப்பாய்கள் உட்பட 9 பேர் மாட்டினர்

கொழும்பு, ஜூலை 22
வாகனம் மற்றும் வாகன உதிரிப்பாக மோசடியில் ஈடுபட்ட முன்னாள் இராணுவச் சிப்பாய்கள் உள்ளிட்ட 9 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். ஒருகோடி ரூபாவுக்கும் அதிகம் பெறுமதியான வாகனம் மற்றும் வாகன என்ஜின் உள்ளிட்ட உதிரிப்பாகங்களை வெள்ளம்பிட்டி, அத்துருகிரிய முதலான பகுதிகளில் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட தேடுதலின் போதே இரு இராணுவச் சிப்பாய் உள்ளிட்ட 9 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள வாகனங்களைக் கடத்தியும், வாகன உதிரிப்பாகங்களைக் கொள்ளையடித்துச் செல்லும் குறித்த குழுவினர் மின்தெனிய பகுதியில் வைத்து அந்த வாகனங்களின் என்ஜின் உள்ளிட்ட உதிரப்பாகங்களை மாற்றி விற்பனையில் ஈடுபட்டுவந்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களுள் வாகன பழுது பார்க்கும் நிலைய உரிமையாளரும், நிலைய பணியாளரும் அடங்குகின்றனர்.


# கண்ணீர் அஞ்சலி



கோட்டைக்காடு மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் சுவிற்ஸர்லாந்தை வசிப்பிடமாகவும் மல்லாகம் சாளம்பை, முருகன் தேவஸ்தான ராஜகோபுர கட்டிட பணிக்கு முதல் நிதியை வழங்கியவருமான


## இராசையா உதயமனோகரன்

ஊற்றாகி எங்கள் ஊருக்கு
வேரானாய் மனோகரனே!
போற்றுகின்றோம் நின் பணியை
முருகன் கோபுரமும் எழமுதலானாய்
கற்றாகிப் போனாய் அவை
கண்குளிரக் காணாமல்
ஆற்றாது அழுகின்றோம்
அன்புடையாய் பெறுக முருகன் பாதம்!

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கோட்டைக்காடு,
மல்லாகம்.

பிரிவால் துயருறும்
சாளம்பை முருகன் இராஜகோபுர
திருப்பணிச் சபை.

அகில இலங்கை தமிழ் மொழித் திறன் எழுத்தாக்கப் போட்டியில் பண்ணாகம் மெய்கண்டான் மாணவியான க.வேல்விழி முதலிடம் பெற்று தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார். பதக்கம் வென்ற மாணவியுடன் பாடசாலை அதிபர் மற்றும் பொறுப்பாசிரியர்.


# கண்ணீர் அஞ்சலி



சின்னத்துரை நவரட்ணராஜா 19.07.2013 காலமானார்.

பொன் மலர்ந்த முகமும்
புன் சிரிப்பும் கொண்டவரே
மீளாத்துயரில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரோ
கலையாத நினைவுகளுடன் உதிரும்
கண்ணீர
கொண்டு அர்ச்சித்து உங்கள் ஆத்மா
சாந்தியடைய எம் கண்ணீர்த் துளிகளை
காணிக்கையாக்குகின்றோம்

உங்கள் பிரிவால் துயருறும்
கேதீஸ்வரநாதன் குடும்பம்
பாலாம்பிகை குடும்பம்
125,பருத்தித்துறை வீதி , நல்லூர் , யாழ்ப்பாணம்

## ‘திவிநெகும’வால் அதிகரிக்கும் முருங்கைக்காய் உற்பத்தி



வலி.வடக்கு, ஜூலை 22
திவிநெகும எழுச்சித் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் பெரியளவில் முருங்கைக்காய் உற்பத்தி காணப்படுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.
யாழ்.மாவட்ட கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் முதல் கட்டமாக அடுத்த வாரம் 70 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குச் சிறிய இன முருங்கைக் கன்றுகள் வழங்கப்படவுள்ளன.
இதற்கான பயனாளிகள் ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் கிராம அலுவலர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களால் தலா 35 பேர் வீதம் தெரிவு செய்யப்பட்டு முருங்கை மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன.
இதேவேளை தற்போது யாழ்ப்பாணம் சந்தைகளில் முருங்கைக்காயின் விலை மிகவும் அதிகரித்து ஐநூறு ரூபா முதல் எழுநூறு ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வரும் நிலையில் புதிய இன முருங்கைக் கன்றுகள் அறிமுகம் செய்யப்படுவதன் மூலம் சந்தையில் முருங்கைக்காயின் விலை அடுத்தாண்டில் பெரியளவில் விலை வீழ்ச்சிக்கு உள்ளாகும் நிலைமை ஏற்படும் என சந்தை வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.
தற்போதும் கூடத் தென்னிலங்கை மற்றும் வன்னியில் இருந்து முருங்கைக்காய் வராத சந்தர்ப்பங்களில் சந்தைகளில் முருங்கைக்காயின் விலை எண்ணூறு, தொளாயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்படுவதும் கூட சுட்டிக்காட்டக் கூடியதாகும். (வ-86)

## போட்டிப் பரீட்சை நடைமுறைகளை வட மாகாண சபை பின்பற்றுவதில்லை

### பரீட்சார்த்திகள் விசனம்

யாழ்ப்பாணம், ஜூலை 22
போட்டிப் பரீட்சைகளின் போது நடைமுறைப்படுத்தப்படும் தேசிய கொள்கைகளை வடமாகாண சபை பின்பற்றுவதில்லை என போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியோர் விசனம் தெரிவிக்கின்றனர்.
வடக்கு மாகாண சபையால் உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் நியமனம், தகவல் தொழில்நுட்ப ஆசிரியர் நியமனம், சிற்றூழியர்கள் நியமனம், பொது முகாமைத்துவ உதவியாளர்கள் நியமனம், ஆசிரிய ஆலோசகர் நியமனம் போன்றவை உட்பட வடமாகாண சபையின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்களில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பல்வேறு போட்டிப் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன.
இந்தப் போட்டிப் பரீட்சைகள் நடத்தப்பட்டு உரிய வெற்றிடங்கள் நிரப்பப்படுகின்ற போதும் பரீட்சையில் தோற்றியவர்களுக்கு அவர்கள் பெற்ற புள்ளிகள் அனுப்பி வைக்கப்படுவதில்லை. மேலும் போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்வதற்கான வெட்டுப் புள்ளிகளும் வெளியிடப்படுவதில்லை.
இந்த நடைமுறையினால் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியோர் தாம் பெற்ற புள்ளிகள் பற்றி அறிந்து கொள்ள முடியாத சூழ்நிலை காணப்படுவதுடன் இத்தகைய நியமனங்களின் போது நியாயத்தன்மை அற்ற சூழ்நிலை காணப்படுகிறது.
இலங்கைப் பரீட்சைத்திணைக்களத்தால் நடத்தப்படுகின்ற சகல போட்டிப் பரீட்சைகளின் போதும் பரீட்சார்த்திகள் பெற்றுக் கொண்ட புள்ளிகள் பற்றிய விவரங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தனித்தனியாக அனுப்பி வைக்கப்படுவதுடன் வெட்டுப் புள்ளிகளும் ஊடகங்கள் வாயிலாக தெரிவிக்கப்படுகின்றன.
வடக்கு மாகாணசபை மட்டும் ஏன் இந்த நடைமுறையைப் பின்பற்றுவதில்லை. எனவே எதிர்காலங்களிலாவது இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பின்பற்றும் நடைமுறையை வடமாகாண சபையும் பின்பற்ற வேண்டும் என பரீசார்த்திகளால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளன. (எ-410)

### வேதாள வெங்காய உண்மை விதை

## நாற்று மேடைக்கு பெரும் கிராக்கி

அச்சுவேலி, ஜூலை 22
வேதாள வெங்காய உண்மை விதை நாற்று மேடைக்கு கடும் கிராக்கி. மேடைகள் ஒவ்வொன்றும் 5 ஆயிரம் ரூபாவுக்கு மேல் விலை போவதால் நாற்று மேடைத் தொழிலில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு குறுகிய காலத்தில் (40 தினங்களில்) நல்ல வருமானம் கிடைத்துள்ளது. வெங்காய நாற்றின் விலை அதிகரிப்பால் தாம் நடுகை செய்வதற்குத் தயார் செய்த நாற்று மேடைகளையும் பல விவசாயிகள் விற்றுவிட்டனர்.
வேதாள வெங்காய உண்மை விதையைப் பயன்படுத்தி நாற்று மேடை தயார் செய்தல் தொல். அராலி, சுழிபுரம், வட்டுக்கோட்டை பகுதியில் கூடுதலான அளவு இந்த வருடம் மேற்கொள்ளப்பட்டது. ஒரு கிலோ உண்மை வெங்காய விதையைப் பயன்படுத்தி தயார் செய்யப்பட்ட நாற்று மேடையில் இருந்து 30 ஆயிரம் ரூபாவுக்கு மேல் வருமானம் பெறக் கூடியதாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதியில் இருந்தும் விவசாயிகள் வெங்காய நாற்று மேடைகளைக் கொள்வனவு செய்வதற்கு அராலி, வட்டுக்கோட்டை, சுழிபுரம் பகுதிக்குச் சென்றடைகின்றனர்.
நாற்று மேடைகளின் விலை திடீரென அதிகரித்ததை அடுத்து தமது தோட்ட நிலங்களில் நடுகை செய்வதற்கு தயார் செய்த நாற்று மேடைகளை நல்ல விலைக்கு விற்றுத் தீர்த்துவிட்ட விவசாயிகள் பலர் குறுகிய காலத்தில் வருவாயை ஈட்டியுள்ளனர்.
வெங்காய நாற்று மூலம் செய்கை பண்ணப்படும் வெங்காயப் பயிர் நோய்த் தாக்கம் இன்றி ஆரோக்கியமாக வளர்ந்து வருவதோடு தரமான விளைச்சலையும் கொடுத்திருப்பது வெங்காய நாற்றை பயன்படுத்தி நடுகை செய்வதில் விவசாயிகளை ஆர்வம் கொள்ளச் செய்துள்ளது.
வெங்காயகுமிழ்மூலம்செய்கைபண்ணப்படும் வெங்காய அறுவடை செய்வதற்கு 90 - 105 தினங்கள் வரை பராமரிக்க வேண்டும். நாற்று மூலம் நடுகை செய்யப்படும் வெங்காயத்தை 70 தினங்களில் அறுவடை செய்யக் கூடியதாக உள்ளது. இதனால் உற்பத்தி செலவும் 50 வீதத்தால் குறைவடைந்துள்ளது எனக் கூறப்படுகின்றது. (வ-11)

## ஆடிப் பௌர்ணமி தினவிழா இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 22
அகில இல்ங்கை திருமுறை மன்றத்தின் ஆடிப் பௌர்ணமி தின திருமுறைப் பெருவிழா இன்று திங்கட்கிழமை காலை 7 மணி தொடக்கம் யாழ்.சத்திரத்துச் சந்தி ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் 2013 ஆம் ஆண்டுக்கான ஆளுநர் விருது பெறும் கலாபூஷணம் சிற்றம்பலம் - சிவானந்தராசா, நாகலிங்கம், கமலநாதன் மற்றும் செல்வன் விஜய குமார சர்மா- வத்சாங்கித சர்மா ஆகியோர் இசை வல்லாளர் எனும் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.
தொடர்ந்து நாயன்மார் நால்வர் திருமுறைச் சுவடிகளுக்கு சோட சோபசாரப் பூசை, தேவாரப் பண்ணிசை மற்றும் சிறப்புச் சொற்பொழிவு என்பன இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (வ-400)

## ஊருக்கு வந்த வெளிநாட்டவரை தாக்கினார் காரைநகர் பெண்

வலி.வடக்கு, ஜூலை 22
வெளிநாட்டில் வசித்து கொண்டு இணையத்தளம் நடத்தும் ஒருவர் சொந்த ஊருக்கு வந்த வேளையில் பெண் ஒருவரால் தாக்கப்பட்ட சம்பவம் ஒன்று காரைநகர் பகுதியில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:
கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக கனடா நாட்டில் வாழ்ந்து வரும் குறித்த நபர் தனது சொந்த ஊரின் பெயரில் இணையத்தளம் ஒன்றை நடத்தி வருவதாகவும் இதில் தனது ஊரில் உள்ள ஒருவர் வெளிநாட்டில் வாழ்ந்து வருகிறார். அவரைப் பற்றி தனது இணையத்தளத்தில் தெரிவித்தமை தொடர்பாக ஊருக்கு வந்த வேளை குறித்த நபரின் மனைவி தனது கணவரைப் பற்றி பிழையான தகவலை இணையத்தளத்தில் வெளியிட்டதாக கூறித் தாக்கியுள்ளார்.
இதனைத் தொடர்ந்து ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் சம்பவம் தொடர்பாக விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (வ-86)

## பெருமைக்குரியவர் அதிபர் தியாகலிங்கம்

### யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை பழைய மாணவர் மணிவிழாவில் புகழாரம்



யாழ்ப்பாணம, ஜூலை 22
தனது சேவைக் காலத்தில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி பாடசாலையின் தரத்தை மேன்மைப்படுத்திய பெருமைக்குரியவர் அதிபர் தியாகலிங்கம். எதிர்பாராத பல மாற்றங்களைப் பாடசாலையில் ஏற்படுத்தியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.
இவ்வாறு தெரிவித்தார் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத் தலைவர் எஸ்.ரி.பி.இராஜேஸ்வரன்.
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் அதிபர் சு.தியாகலிங்கத்தின் மணிவிழாவும் சேவை நலன் பாராட்டு விழாவும் நேற்று முன்தினம் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வாழ்த்துரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது:
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் வளர்ச்சிப் பாதையில் கடமையாற்றிய அதிபர்களின் பங்கு பிரதானமாகவுள்ளது. அந்த வகையில் தியாகலிங்கம் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றியுள்ளார்.
பாடசாலையின் அபிவிருத்தி வளர்ச்சியில் மட்டுமல்லாது மாணவர்களது கல்வி வளர்ச்சியிலும் பங்காற்றியுள்ளார். எதிர்பாராத பல சேவைகளை அமைதியாக இருந்து நிறைவேற்றியுள்ளார். நாடாளாவிய ரீதியில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையை பிரசித்திப் பெறச் செய்த பெருமையும் இவருக்கு உண்டு என்றார்.
இந்த நிகழ்வில் பாடசாலையின் முன்னாள் அதிபர்கள், பேராசிரியர்கள், கல்வியியலாளர்கள், பாடசாலை நலன் விரும்பிகள் கலந்து கொண்டு வாழ்த்துரைகளைத் தெரிவித்தனர். இதன்போது ‘தியாக மலர்’ நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது. (வ-14)

## சேதமுற்ற வீதிகளைப் புனரமைக்க பரு.நகர சபை நடவடிக்கை

வடமராட்சி, ஜூலை 22
பருத்தித்துறை நகர சபைப் பகுதிக்குள் இதுவரை திருத்தப்படாத வீதிகள் யாவும் படிப்படியாக கொங்கிறீட் வீதிகளாக மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
இந்தத் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக சந்தி சிமா ஒழுங்கை 10 லட்சம் ரூபா செலவிலும் வளலாய் ஒழுங்கை 11 லட்சம் ரூபா செலவிலும், தட்டாதெரு ஒழுங்கை 14 லட்சம் ரூபா செலவிலும் சிமெந்து வீதியாக புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.
இந்த மூன்று வீதிகளும் புனரமைப்புக்கும் சபை நிதியே பயன்படுத்தப்படவுள்ளன.
ஏனைய வீதிகள் படிப்படியாக சிமெந்து வீதிகளாக மாற்றியமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (வ-8)



## சோதிடத்தால் வந்த சோதனை இளைஞர் தற்கொலை

கதக், ஜூலை 22

கர்நாடக மாநிலத்தில் பொறியிலாளர் ஒருவர் சோதிடத்தால் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அங்கு பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கர்நாடகாவின் கதக் மாவட்டத்தைச் சேர்ந்தவர் 23 வயதுடைய ஆனந்த். இவர் பெங்களூரில் பொறியியலாளராகப் பணிபுரிந்து வந்தார். பெங்களூர் அருகே வாடகை வீட்டில் வசித்து வந்த ஆனந்த் இரு தினங்களுக்கு முன்னர் பணிக்குச் செல்வதற்காக வீட்டில் இருந்து வெளியே வந்த போது காகங்கள் அவரை தலையில் தாக்கியுள்ளன.

தொடர்ந்து இரு நாள்கள் இவ்வாறு நடந்ததால் வருத்தமடைந்த ஆனந்த் சோதிடர் ஒருவரிடம் இது குறித்து விளக்கம் கேட்டுள்ளார்.

அதற்கு சோதிடர் "சனி பகவான் அவரை விரட்டுகின்றது. சனி பிடித்தால் விடாமல் தொடர்ந்து வீட்டில் கஷ்டங்களை கொடுக்கும். உன் தாய் தந்தையின் உயிருக்கே இது ஆபத்து" என்று பயமுறுத்தியுள்ளார்.

அவற்றைக் கேட்டுப் பயந்து போன ஆனந்த் இதுகுறித்துத் தனது தாய்க்கு தொலைபேசி மூலம் கூறியுள்ளார்.

இந்தநிலையில் ஆனந்தின் தந்தைக்குத் திடீரென உடல் சுகவீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட, தமக்குப் பிடித்துள்ள சனியின் பலாபலனே இது என்று மனமுடைத்து போன ஆனந்த் நேற்றுமுன்தினம் நள்ளிரவு வீட்டில் விஷம் குடித்துத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தால் அந்தப் பகுதி பெரும் சோகத்தில் மூழ்கியுள்ளது. (ற)

# தீவிரவாதிகளின் இலக்கு முக்கிய விமான தளங்கள்

## இந்திய உளவுத்துறை எச்சரிக்கை



சென்னை, ஜூலை 22

சென்னை விமான நிலையம் உட்பட இந்தியாவின் 7 விமான நிலையங்களைத் தாக்குதற்குதீவிரவாத அமைப்புகள் திட்டமிட்டுள்ளன என்று இந்திய உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

"டெல்லி, மும்பை, அகமதாபாத், சென்னை, பெங்களூர், ஹைதராபாத் மற்றும் குவஹாத்தி ஆகிய 7 நகரங்களில் உள்ள முக்கிய விமான நிலையங்களை தாக்கத் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர். சிறிய ரக விமானங்களை பயன்படுத்தி விமான நிலையங்களை தகர்க்க திட்டமிட்டுள்ளதுடன், பயணிகள் விமானத்தைக் கடத்தி தாக்குதல் நடத்தக் கூடும் என்றும் தகவல்கள் கிடைத்துள்ளன.

அனைத்து விதமான தாக்குதல்களை எதிர்கொள்ளும் வகையில் முக்கிய விமான நிலையங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகளை முன்னேடுக்க வேண்டும்" என்று உளவுத்துறை வெளியிட்டுள்ள தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

பீகாரில் புத்தகயா மகாபோதியில் தொடர் குண்டு வெடிப்புகள் இடம்பெற்றுள்ள நிலையில், உளவுத்துறையின் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதையடுத்து இந்தியாவின் முக்கிய விமான நிலையங்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் கூறப்படுகின்றது. (ற)

## வெடிகுண்டு மிரட்டல்; விப்ரோவில் பரபரப்பு

ஐதராபாத், ஜூலை 22

பெங்களூரில் அமைந்துள்ள பிரபல மென்பொருள் நிறுவனமான விப்ரோவின் அலுவலகத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளது என்று கிடைத்த தகவலை அடுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

எனினும் வெடிகுண்டு நிபுணர்கள் அங்கு அங்குலம் அங்குலமாக சோதனையிட்ட போதும் அங்கு வெடிகுண்டு எதனையும் கண்டு பிடிக்க முடியவில்லை.

தற்போது குறித்த தொலைபேசி அழைப்புக் குறித்து தீவிர விசாரணைகளில் இறங்கியுள்ளனர் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ற)

## நிவாரணங்களுக்கு தேவை ரூபா 39 ஆயிரம் கோடி

### நெருக்கடியில் உத்தரகாண்ட் மாநிலம்



பாட்னா, ஜூலை 22

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட உத்தரகாண்ட் மாநிலத்தை சீரமைக்க ரூபா 39 ஆயிரம் கோடி தேவைப்படும் என்று அந்த மாநில தலைமைச் செயலர் சுபாஷ்குமார் தெரிவித்துள்ளார்.

உத்தரகாண்ட் பெருவெள்ளத்தால் அந்தமாநிலமே உருக்குலைந்து போயுள்ளது. அந்த மாநில மக்களுக்கு உதவவும் 300 கிராமங்களில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் சுமார் ரூபா 39 ஆயிரம் கோடி நிதி தேவைப்படுகின்றது என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் குறித்த நிதி மாநில அரசிடம் பெறமுடியாத நிலையில், இந்திய மத்திய அரசு அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் சுபாஷ்குமார் கோரியுள்ளார்.

உத்தரகாண்ட் மாநிலத்திலேயே இந்துக்களின் புனித யாத்திரை தலங்கள் அதிகம் உள்ளன. அவற்றிலேயே அந்த மாநில வருவாய் தங்கியிருந்தது. எனினும் தற்போதைய அனர்த்தத்தில் புனிதத் தலங்கள் பல பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தநிலையில் உத்தரகாண்ட் மாநில அரசு கடும் நிதிச் சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## உலகின் வயது முதிர்ந்தவர் இந்தியாத் தாத்தாவே



புதுடில்லி, ஜூலை 22

இந்தியாவை சேர்ந்த பிறோஸ் உத் டின் மிர் என்பவர் உலகில் வாழ்ந்து வரும் மிகவும் வயதான மனிதர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

இவருக்கு தற்போது வயது 141. இவர் 4 திருமணங்களை செய்துள்ள இவருக்கு 10 குழந்தைகள் உள்ளனர்.

அரசால் அவருக்கு வழங்கப்பட்டுள்ள பிறப்புச் சான்றிதழின் அடிப்படையில் 1872 ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் திகதி அவரது பிறந்த தினமாகக் கருதப்படுகின்றது.

இவரின் நாலாவது மனைவி மிர்ஸாவுக்கும் இவருக்கும் எத்தனை வயது வித்தியாசம் தெரியுமா? 60 வயது வித்தியாசமாம். (ற)

## கூடங்குளம் மின்சாரம் தமிழகத்துக்கே நாராயணசாமி

சென்னை, ஜூலை 22

கூடங்குளத்தில் உற்பத்தியாகும் மின்சாரம் அனைத்தும் தமிழகத்திற்கே வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று மத்திய இணையமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"20 நாள்களில் 400 மெகாவாட் மின்உற்பத்தி செய்யப்படும். அது படிப்படியாக 1,000 மெகாவோட் மின் உற்பத்தியை எட்டும். கூடங்குளத்தில் உற்பத்தியாகும் மின்சாரம் அனைத்தும் தமிழகத்திற்கே வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது" என்று தெரிவித்தார் அவர். (ற)

# மதிய உணவில் எண்ணெய்க்குப் பதிலாக பூச்சிக் கொல்லி மருந்து

## பீகார் மாணவர் உயிரிழப்பு விவகாரம்; முதற்கட்ட விசாரணைகள் முடிவு



பாட்னா, ஜூலை 22

பீகாரில் அரச பாடசாலையில் 23 மாணவர்கள் உயிரிழந்தமைக்கு மதிய உணவில் பூச்சி கொல்லி மருந்து கலந்தமையே காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சரண் மாவட்டம் தர்மசதி கந்தவான் கிராமத்தில் உள்ள அரச பாடசாலையில் கடந்த 16ஆம் திகதி வழங் கப்பட்ட இலவச மதிய உணவை உட்கொண்ட மாணவர்கள் சிறிது நேரத்தில் மயங்கி விழுந்துள்ளனர். உடனடியாக மாணவர்கள் மருத்துமனையில் அனுமதிக்கப்பட்ட போதும் 23 மாணவர்கள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

தற்போது இந்தச் சம்பவம் குறித்து துரித விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது குறித்து தடயவியல் நிபுணர்கள் முதற்கட்ட விசாரணை அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளனர். அந்த அறிக்கையிலேயே உணவில் பூச்சி கொல்லி மருந்து கலந்துள்ளமை குறித்த தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

"மதிய உணவில் பூச்சி கொல்லி மருந்து கலந்திருப்பதற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன.

விலங்குகளின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் 'மோனோகுரோட்டோபாஸ்' என்ற பூச்சி கொல்லி மருந்தே உணவில் காணப்படுகின்றது. சமையலில் ஈடுபட்டவர்கள் சமையல் எண்ணெய்க்கு பதில் பூச்சி மருந்தை ஊற்றியிருக்கலாம் என்று கருதப்படுகின்றது." என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த பாட்னா நகர பொலிஸ் ஆணையாளர் ரவீந்திரகுமார், 'மதிய உணவில் பூச்சிகொல்லி மருந்து கலந்துள்ளமை குறித்து தடயவியல் அதிகாரிகள் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். அது குறித்து விரைவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம். பாடசாலையின் அதிபர் மீனாதேவி தொடர்ந்தும் தலைமறைவாகவே உள்ளார். அவரைக் கண்டு பிடிக்கும் நடவடிக்கையில் தனியானதொரு பொலிஸ் குழு இயங்குகின்றது.

'பாத்திரத்தில் எண்ணெயை ஊற்றியபோது கெட்ட நாற்றம் ஏற்பட்டது. அதுகுறித்து மீனாதேவியிடம் கூறினேன். ஆனால் அவர் அதனையே உபயோகிக்கச் சொன்னார்' என்று குறித்த பாடசாலையில் சமையல் செய்த பெண்மணி வாக்குமூலம் தந்துள்ளார். தற்போது மீனாதேவி மீது கவனக்குறைவு குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது." என்று தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் நாடு முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் பீகார் முதல்வர் நிதிஷ்குமார் இது குறித்து விரிவான விசாரணை நடத்துமாறு ஆணை பிறப்பித்துள்ளதுடன், பாடசாலைகளில் வழங்கப்படும் மதிய உணவின் தரத்தினை கண்காணிப்பதற்கு சிறப்புக் குழுவை அமைப்பது குறித்து இந்திய மத்திய அரசு திட்டமிட்டு வருகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## சுவருக்குள் சிக்கிய பெண் 7 மணி நேரத்தின் பின் மீட்பு

பீஜிங், ஜூலை 22
சீனாவில் இரண்டு சுவர்களுக்கு இடையே சிக்கிகொண்ட பெண் ஒருவர், 7 மணிநேர போராட்டத்துக்கு பின் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

சீனாவைச் சேர்ந்த பெண் ஒருவர், தனது வீட்டுக்கு விரைவாகச் செல்ல வேண்டும் என்ற எண்ணி மிகவும் ஒடுங்கிய பாதையை பயன்படுத்த முயன்றுள்ளார்.

அப்போது அதற்கு இடையில் சிக்கிகொண்டுவெளியேவரமுடியாது தவித்தார். அதனை பார்த்தவர்கள் உடனடியாக தீயணைப்பு படையினருக்கு தகவல் கொடுத்துள்ளனர். அதையடுத்து தீயணைப்பு வீரர்களின்7 மணிநேரப் போராட்டத்தின்பின்னர் குறித்த பெண் உயிருடன் மீட்கப்பட்டார்.(ற)



ஈராக்கிய தலைநகர் பக்தாத்தின் பல பகுதிகளில் இடம்பெற்ற தொடர் கார்க் குண்டுத் தாக்குதல்களில் 46 பேர் உயிரிழந்துள்ளனர். நோன்பு திறக்கும் சந்தர்ப்பத்தில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்கள், வர்த்தக வலயங்களான கராடா, சூத்ரா, டொபிச்சீ, பஹய்யா, ஸபார்னியா போன்ற பகுதிகளில் நடத்தப்பட்டுள்ளன. கடந்த ஏப்ரல் மாதம் முதல் இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்களில் மட்டும் 2 ஆயிரத்து 500 பேர் உயிரிழந்துள்ளனர். (ற)

## வியர்வையில் குடி தண்ணீர்

ஸ்டொக்கொலம், ஜூலை 22
கடல்நீரில் இருந்து குடிநீர் தயாரிக்கப்படுவது போன்று வியர்வையில் இருந்து குடிநீர் தயாரிக்கும் வழிவகையும் கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கான இயந்திரத்தை சுவீடனின் ஸ்டாக் ஹோமை சேர்ந்த ஆன்ட் ரஸ்ஹேம்மர் கண்டுபிடித்துள்ளார்.

இந்த இயந்திரம் அதி நவீன தொழில் நுட்பத்துடன் தயாரிக்கப்பட்டுள்ளது. வியர்வையுடன் கூடிய துணிகளை இட்டு இயந்திரத்தை இயங்க செய்ய வேண்டும்.


அவை சலவை இயந்திரங்களைப் போன்று வியர்வை துணியை முறுக்கி பிழிந்து, வடிகட்டிய சுத்தமான தண்ணீராக மாற்றித் தரும் வகையில் அந்த இயந்திரத் தயாரிக்கப்பட்டுள்ளது என்கிறார் ஹேம்மர். (ற)

## 3 செயற்கை கோள்களை நிலைநிறுத்தியது சீனா

பீஜிங், ஜூலை 22
மூன்று செயற்கை கோள்களை நேற்றுமுன்தினம் வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தியது சீனா.

இந்த செயற்கை கோள்கள் 'லாங் மார்ச்- 4சி' என்ற றொக்கெட் மூலம் தைவான் செயற்கைகோள் ஏவுதளத்தில் இருந்து விண்ணுக்குச் செலுத்தப்பட்டன.

அறிவியல் ஆராய்ச்சி மற்றும் விண்வெளி தொழில் நுட்பத்தை மேம்படுத்தும் வகையில், இந்த செயற்கைகோள்கள் செலுத்தப்பட்டுள்ளது என்று சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். 'லாங் மார்ச்' ரக றொக்கெட் தற்போது 179 முறையாக செயற்கைக் கோள்களை எடுத்துச் சென்று விண்ணில் நிலைநிறுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ற)



# தெற்காசியப் பாதுகாப்பில் இந்தியாவே முக்கிய சக்தி

## அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோ பிடன் கருத்து

வொஷிங்டன், ஜூலை 22
"தெற்காசியப் பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதி செய்யும் விடயத்தில் இந்தி யாவே முக்கிய சக்தியாகத் திகழ்கின்றது. அதை அமெரிக்கா மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றது" இவ்வாறு தெரிவித்துள்ளார் அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோ பிடன்.

ஜோ பிடன் இன்று இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், தெற்காசியப் பிராந்தியம் குறித்துக் கருத்து வெளியிடும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்;

"தென்கிழக்கு ஆசியாவில் பாதுகாப்பை உறுதி செய்வதுடன், பொருளாதார வளர்ச்சியிலும் இந்தியா முக்கிய பங்காற்றி வருகிறது. அந்தப் பிராந்தியத்தில் இந்தியா மேற்கொண்டு வரும் பணிகளை வரவேற்கிறோம்.

நிலம் மற்றும் கடல் வழிப் போக்குவரத்தையும், வர்த்தகத்தையும் மேம்படுத்த, பாராட்டத்தக்க வகையிலான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டு வருகிறது. எதிர்கால பொருளாதார மேம்பாட்டை கருத்தில் கொண்டு சில அடிப்படை விடயங்களில் தனது தேர்ந்தெடுக்கும் உரிமையை இந்தியா பயன்படுத்தி வருகிறது. அவற்றிலும் நாங்கள் அந்த நாட்டுடன் நேரடித் தொடர்பில் உள்ளோம்.



பாதுகாப்பு, தொலைத் தொடர்பு உள்ளிட்ட முக்கிய துறைகளில் அந்நிய நேரடி முதலீட்டுக்கான உச்சவரம்பை இந்தியா உயர்த்தியுள்ளதை வரவேற்கிறோம். சிவில் அணுசக்தி ஒத்துழைப்பு, இருதரப்பு முதலீடு தொடர்பான உடன்பாடு உள்ளிட்டவை குறித்து இந்தியாவுடன் பேசி வருகிறோம். கடந்த 13 ஆண்டுகளில் இருதரப்பு வர்த்தகம் 5 மடங்கு அதிகரித்துள்ளது" என்று தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்காவிலிருந்து புறப்பட்ட ஜோ பிடன், இன்று இந்தியாசெல்கின்றார். அமெரிக்காவின் துணை ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் பிடன் இந்தியா வருவது இதுவே முதல் முறை. (ற)

# உளவு பார்க்கின்றது சீன நிறுவனம் அமெரிக்க அதிகாரி குற்றச்சாட்டு

நியூயோர்க், ஜூலை 22
ஹுவேவி தொலைதொடர்பு நிறுவனத்தின் கருவிகள் சீனாவுக்காக உலகை உளவு பார்க்கின்றன. அதற்கான ஆதாரங்கள் உள்ளன என்று அமெரிக்கா சி.ஐ.ஏ. உளவு நிறுவனத்தின் முன்னாள் தலைவர்மைக்கேல்ஹேடென் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் சி.ஐ.ஏ. உளவு அமைப்பின் தலைவராக இருந்தவர் மைக்கேல் ஹேடென். இவர் அந்நாட்டு தேசிய பாதுகாப்பு அமைப்பின் தலைவராகவும் இருந்துள்ளார். இந்த அமைப்பின் தகவல்களைதான், முன்னாள் உளவு அதிகாரி எட்வேர்ட் ஸ்நோடன் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தி வருகிறார்.

இதுகுறித்து மேலும் கருத்துத் தெரிவித்த ஹேடென், "சீனாவைச் சேர்ந்த தொலைதொடர்பு நிறுவனமான ஹுவேவி உலகம் முழுவதும் தொலைதொடர்புத் துறைக்கு தேவையான கருவிகளை தயாரித்து வழங்கி வருகிறது. 1987ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்நிறுவனத்தின், தலைவர் ரென் ஜெங்பெய், சீன இராணுவத்தில் உயரதிகாரியாக பணியாற்றியவர்.

ஹுவேவி நிறுவனம் உலகம் முழுவதும் தன்னுடைய தொலைதொடர்பு கருவிகள் மூலம் கிடைக்கும் பல்வேறு




தகவல்களை சீன அரசுக்கு அளித்து வருகிறது. இதற்கு வலுவான ஆதாரங்கள் எங்களிடம் உள்ளன" என்று தெரிவித்தார்.

இதுகுறித்துக் கருத்து தெரிவித்துள்ள ஹுவேவி நிறுவனத்தின் சர்வதேச இணையப் பாதுகாப்பு அதிகாரியான ஜான் சப்போல்க், "எங்கள் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை கூறுவதே அமெரிக்க அதிகாரிகளுக்கு வேலையாகிவிட்டது. உலகில் 3இல் ஒருவர் எங்களுடைய தயாரிப்புகளை பயன்படுத்தி வருகின்றனர். இந்த நிலையில், எங்கள் நிறுவனத்துக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு பலமான ஆதாரம் இருப்பதாககூறும்மைக்கேல்ஹேடென் உடனடியாக அதை வெளியிட்டு நிரூபிக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் பிரிட்டன் தன்னுடைய இணையத் தளப் பாதுகாப்பை உறுதி செய்ய உத்தரவிட்டுள்ளது. மத்திய பிரிட்டனில் உள்ள பிரிட்டனின் இணைய சைபர் மையத்தை ஹுவேவி நிறுவனமே செயற்படுத்தி வருகின்றது. (ற)

## ஆடம்பரத் திருமணத்தால் பதவியிழந்த சீனத் தலைவர்

பீஜிங், ஜூலை 22
மகளுக்கு ஆடம்பரமாக திருமணம் நடத்திய சீன கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர், பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். சீனாவின் ஹீபி மாகாணத்தின் பிங்டிங்பாவ் நகர கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலராக இருந்தவர் யூ ஷ வாங். அண்மையில் அவரது மகளுக்கு 20 லட்சம் ரூபா செலவில் திருமணத்தை நடத்தப்பட்டிருந்தது.

சீனாவின் புதிய ஜனாதிபதி சி ஜின்பிங் கடுமையான சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில், கட்சியின் சிக்கன நடவடிக்கையை மீறி செயற்பட்டார் என்று யூ ஷ வாங் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தற்போது அவர் கட்சிப் பதவியில் இருந்து நீக்கப்பட்டதோடு, திருமணத்தின் போது கிடைத்த பணம் மற்றும் அன்பளிப்புக்களை திருப்பிக் கொடுக்கும்படியும் அவருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (ற)

## குருபூர்ணிமா

இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தால் குரபூர்ணிமாவை முன்னிட்டு விசேட நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு இல.17 மருதனார்மடம் வீதி உரும்பிராய் சந்தியில் அமைந்துள்ள நிலையத்தில் இடம்பெறும்.

இதன்போது பஜனை, குருகீதை வாசிப்பு, தீபாராதனை, பிரசாதம் வழங்கல் என்பன இடம்பெறும். (ஒ-14)

## நிறைமதி கலைவிழா

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம் நடத்தும் ஆடித்திங்கள் 'நிறைமதி கலைவிழா' இன்று திங்கள் காலை 9.00 மணிக்கு மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மண்டபத்தில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு வடமாகாண செயலாளர் சி.சத்தியசீலன் கலந்து கொள்வார். நடனம், குழு இசை, பல் கலாசார நடனம், வலய ஆசிரியர்களின் இன்னிசை கானம், நடனம் கீர்த்தனம், விசேட கூத்து, கலைஞர்கள் கௌரவிப்பு, மாணவர் ஆசிரியர்கள் கௌரவிப்பு ஆகிய நிகழ்வுகளும் நடைபெறும். (ஒ-35)

## புதிய யோகா வகுப்பு இன்று நல்லூரில்

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ்.யோக அரங்கத்தின் புதிய யோகா வகுப்புக்கான அறிமுக விழா இன்று திங்கட்கிழமை மாலை 4.30 மணியளவில் நல்லூர் ஆலயச் சூழலிலுள்ள அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மண்டபத்தில் அரங்கத்தின் இயக்குநர் எஸ்.உமாசுதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. அறிமுக விழாவில் யோகா போதனாசிரியர் வி. என். சிவா 'யோகா முறையில் ஆரோக்கிய வாழ்வை அமைத்தல்' என்னும் தலைப்பில் கருத்துரை வழங்கவுள்ளார்.

இதேவேளை செவ்வாய், வியாழன் மற்றும் வெள்ளி ஆகிய தினங்களில் அதிகாலை 5.30 மணி முதல் 6.30 மணிவரை இடம்பெறவுள்ள யோகா வகுப்புக்களால் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யோகா அரங்கம் கேட்டுக்கொண்டுள்ளது. (ஒ-400)

### 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
25.07.1942

மறைவு
22.07.2011

அமரர் கந்தையா
பிரேமராஜா (கந்தசாமி)

எத்தனை ஆண்டுகள்
சென்றாலும் அப்பாசு!
உங்கள் நினைவுகள்
எங்களை விட்டு என்றும் மறையாது

இல.6,
3ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
(31058) (3.6.11)
077 257 1288, 077 662 1906

## வேதவியாசர் ஜெயந்தி தினம்

வேதவியாசர் ஜெயந்தி தினமான இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் ஆச்சிரமத்தில் மாலை 5.00 மணிக்கு குருபூர்ணிமா குருபாதுஹா பூஜை நடைபெறவுள்ளது.

வேதவியாசரின் அஷ்டோத்தர சத நாம அர்ச்சனை, குருதேவரின் சதநாம அர்ச்சனை, பஜனை மற்றும் சத்சங்கம் என்பன இடம்பெறும். (ந)

### 6ஆம் மாத நினைவஞ்சலி

மண்ணில் மலராக
20.01.1962

விண்ணில் மதியாக
26.01.2013



திருமதி சற்குணராசா செல்வமலர்

இதயத் துடிப்பும் நீதானே - எங்களின்
இதழோரப் புன்னகையும் நீதானே.....

25, 6 ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(31123)(3.6.11)

குடும்பத்தினர்.

### 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
ஞானேந்திரம்
பார்த்தீபன்

திதி: சங்கடஹர சதுர்த்தி (26.07.2013)



தோற்றம்
11.12.1971

மறைவு
22.07.2008

ஆறாது ஆறாது
அழுதாலும் ஆறாது
தீராது தீராது - உன்
பிரிவு தீராது

"கற்பகவில்லா"
மீசாலை வடக்கு,
வேம்பிராய்.
(31106)(45.3.6)

என்றும் உன் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

## பதவியேற்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 22

மானிப்பாய் நகர லயன்ஸ் கழகத்தின் பதவியேற்பு நிகழ்வு அண்மையில் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது தலைவராக சி.நாகையா, செயலாளராக எஸ்.எல்.செபராசா, பொருளாளராக வி.கமலநாதன் ஆகியோர் பதவியேற்றுக் கொண்டனர். (எ-14)

## சமய சந்நிதிகளில்

குருநகர், ஜூலை 22

யாழ்ப்பாணம் பாண்டியன் தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவுக்கான ஆயத்த வழிபாடுகள் கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. நவநாள் ஆராதனைகள் தினமும் மாலை 5.00 மணிக்கு திருச்செபமாலை வழிபாட்டுடன் நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நற்கருணை வழிபாடும் மறுதினம் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு திருநாள் திருப்பலி யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெறும் என ஆலயத்தின் பங்குத் தந்தை வண.பிதா யேக்கப் நிக்கலஸ் அடிகளார் அறிவித்துள்ளார். (ந-51)

* * *

வவுனியா வேப்பங்குளம் சாமுண்டீஸ்வரி சமேத வைரவப் பெருமானது தீர்த்தத் திருவிழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. நாளை செவ்வாய்க்கிழமை பூங்காவனத் திருவிழா இடம்பெறும். (ந)

### 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி ஆறுமுகம்
அழகரத்தினம்
(அழகம்மா)

22.06.2013 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆ.சந்திரகுமார் (மகன்),
ஸ்ரீ.புஸ்பவதி (மகள்),
பா.ஸ்ரீனிவாசன் (வேந்தன்- மருமகன்)
ச.சித்திராதேவி (மருமகள்)
சாரதன், பிரீத்தி, பிரஷன் (பேரப்பிள்ளைகள்).

கோகுல வீதி,
கோண்டாவில்.
(31076) (3.6.11)

T.P- 021 205 3905, 075 626 8473,
077 615 3725

### மரண அறிவித்தல்கள்

**மனோன்மணி குமாரசாமி**



நவாலியைப் பிறப்பிடமாகவும், சித்தன் கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட மனோன்மணி குமாரசாமி (19.07.2013) வெள்ளிக்கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமியின் அன்பு மனைவியும், ஸ்ரீஸ்கந்தராசா, நிர்மலா, சியாமலா, ஸ்ரீனி வாஸ் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (24.07.2013) புதன்கிழமை சுவிஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சிவன்கோயிலடி,
சித்தன்கேணி.
(31131)(3.6.11)

தகவல்:
அ.பிறேம்

**செல்வன் பாலசுப்பிரமணியம் ஜீர்த்தனன் (கீர்த்தி)**



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் ஜீர்த்தனன் (19.07.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பாலசுப்பிரமணியம் (அப்பன்) - நித்தியகலா தம்பதியின் அன்பு மகனும், கிரிதரஸ், றஜிதா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், முத்தையா - அம்மாப்பிள்ளை, காலஞ்சென்ற வர்களான பொன்னுத்துரை தங்கம்மா ஆகியோரின் பேரனும், குணபாலசிங்கம், காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் குணசேகரம், ஞானசேகரம் ஆகியோரின் மருமகனும், ஞானகலா, கலாவாணி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (24.07.2013) புதன்கிழமை சுவிஸ் நேரப்படி ஒருமணிக்கு சுவிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நித்திலம், நியூட்டன்லைற்,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
077 620 4790,
021 321 2678 (ஈசு),
0041 787 457951 (சுவிஸ்).

தகவல்:
பாலசுப்பிரமணியம் (குடும்பம்),
முத்தையா (குடும்பம்).
(31130) (45.6.3)

## மெய்வன்மைப் போட்டி

நல்லூர் முத்தமிழ் முன்பள்ளியின் 22 ஆவது மெய்வன்மைப் போட்டி கோப்பாய் வியங்காடு இ.த.க. பாடசாலை முன்றலில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

முன்னாள் பொறுப்பாசிரியர் செல்வி சியாமளாதேவி சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் தேசியக்கல்வியியற் கல்லூரி இணைப்பாளர் பா.தனபாலன் கலந்து கொள்வார். (ந-21)

### மரண அறிவித்தல்

**விஸ்வலிங்கம் பொன்னுத்துரை**



யாழ். மாதகல் வில்வளையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Parisஐ வதிவிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் பொன்னுத்துரை அவர்கள் 18-07-2013 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம்-தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்-இராசம்மா தம்பதியரின் மருமகனும், இரத்தினேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், விக்ரர், விநோத், விதுஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சங்கரப்பிள்ளை, காலஞ்சென்ற செல்லத்துரை, சின்னத்துரை ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் Boulevard de Mnilmontant, 75011 Paris, France இல் செவ்வாய்க்கிழமை 23/07/2013, காலை 08.30 - 09.45 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகோதரர்கள், மைத்துனிமார்,
மைத்துனர்மார், பெறாமக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சி/10590) (10.6)

## கரித்தாஸ் – கியூடெக் அமைப்பால் அமைக்கப்பட்ட வீடுகள் கையளிப்பு



கொழும்புத்துறை, ஜூலை 22
மருதங்கேணி, செம்பியன் பற்றுப் பகுதிகளில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தால் 'கெடெக்' அமைப்பின் உதவியுடன் அமைக்கப்பட்ட 20 வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன. யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, கொழும்பு கரித்தாஸ் தேசிய நிறுவன இயக்குநர் அருட்திரு. ஜோர்ஜ் சிகாமணி அடிகள் கரித்தாஸ் கியூடெக் இயக்குநர் அருட்திரு. பேணாட் றெக்னோ அடிகள் ஆகியோர் கடந்த வாரம் இவ்வீடுகள் கையளிப்பு நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட தேசிய நிறுவன இயக்குநர் சிகாமணி அடிகள் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்; இறைவனின் படைப்பில் எல்லோரும் மனித மாண்புடன் வாழ வேண்டும் என்ற நோக்கில் துயர் துடைப்பதில் தேவையறிந்த சேவை புரிந்து வரும் இந்த நிறுவனத்தைத் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய தேடி வருவோர் அதிகமாக இருந்த போதும் உள்ள வளங்கள், உதவிகளைக் கொண்டு சாதி, இன, மொழி பேதம் கடந்து சேவையாற்றுவதற்கு இந்தக் குடியிருப்புத் திட்டம் நல்ல எடுத்துக்காட்டாகும்– என்றார். (வ-135)

## மீண்டும் இரவு ரோந்தை ஆரம்பிக்குக

### அதிகரிக்கும் திருட்டைத் தடுக்க மக்கள் கோரிக்கை



தென்மராட்சி, ஜூலை 22
சாவகச்சேரி நகர்ப் பகுதியில் கடந்த ஒரு வாரத்தில் தொடர்ச்சியாக திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதால் மீண்டும் இரவு ரோந்து சேவையை ஆரம்பிக்குமாறு நகர்ப் பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

கடந்த வாரம் நகர்ப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் உடைக்கப்பட்டு 26 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டன.

அதன் பின்னர் பெருங்குளம் சந்திக்கு அருகில் உள்ள வீட்டுக்குள் ஜன்னல் கம்பியை உடைத்து உட்சென்ற திருடர்கள் 3 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள், பணம் ஆகியவற்றையும் வெள்ளிக்கிழமை கற்குளிப் பகுதியில் வீட்டுக்காரரை கத்தி முனையில் பயமுறுத்தி பணம், நகை ஆகியவையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இவ்வாறான நிலைமை தொடராமல் இருக்க மீண்டும் இரவு ரோந்து சேவையை பொலிஸார் ஆரம்பிக்க வேண்டுமென மக்களும் வர்த்தகர்களும் கோரியுள்ளனர். (வ-9)

## விரைவில் அமையவுள்ள சிறுவர் பூங்கா

யாழ்ப்பாணம், ஜூலை 22
நல்லூர் கல்வியங்காடு பகுதியில் சிறுவர் பூங்கா ஒன்றை அமைக்க நல்லூர் பிரதேச சபை தீர்மானித்துள்ளது. பிரதேச சபை உறுப்பினர் ச.சுரேஸ்குமார் இது தொடர்பான பிரேரணையை சபையில் சமர்ப்பித்திருந்தார். சிறுவர் பூங்கா அமைப்பதுடன் பூதவராயர் குளத்தையும் அழகுபடுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் உறுப்பினர் ச.சுரேஸ்குமார் தெரிவித்தார். (வ-7)



# நடமாடும் சேவையை மீண்டும் நடத்துங்கள்

### தென்மராட்சிப் பகுதி மக்கள் கோரிக்கை

தென்மராட்சி, ஜூலை 22
தென்மராட்சி பிரதேச செயலகத்தால் கபே நிறுவனம் மற்றும் மனித உரிமைகள் நிலையம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட அடையாள அட்டை தொடர்பான நடமாடும் சேவையை மீண்டும் நடத்துமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சிவன்கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் சாவகச்சேரி, மட்டுவில் பிரதேசங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

பிற்பகலில் பெருமளவு மக்கள் கலந்துகொண்டதால் மண்டபம் நிறைந்த சனக்கூட்டமாகக் காணப்பட்டது. மாலை 4 மணியுடன் நிறுத்தப்படுமென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அங்கு கடமையிலிருந்தவர்கள் மாலை 5 மணிவரையும் கடமையாற்றிய போதிலும் பலர் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியவில்லை.

இதனால் விண்ணப்பங்களை சமர்ப்பிக்காதவர்களின் நலன்கருதி பிறிதொரு தினத்தில் நடமாடும் சேவையை நடத்துமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (வ-9)

## அட்டவணைப்படுத்தப்படாத பதவி விவரங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜூலை 22
யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் கடந்த டிசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வெற்றிடமாகக் காணப்பட்ட அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் விவரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கொன்ரன்ரைன் ஜக்சீல் சகல உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத்தின் பெயர், பதவிப் பெயர், ஆளணி விவரம், தற்போது வேலை செய்வோரின் பெயர், எண்ணிக்கை, வெற்றிடம் போன்ற விவரங்களை உடனடியாக ஈமெயிலில் அனுப்பி வைக்குமாறு கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ)

## கிராம அபிவிருத்தி சங்க தலைவர்களுக்கு 'சுவர்ண' விருது

தென்மராட்சி, ஜூலை 22
இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தினால் இலங்கையில் சிறப்பாக இயங்கும் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு 'அறிவகங்களின் அங்கீகாரம்' என்னும் 'சுவர்ண' விருதுகள் வழங்கவுள்ளன.

இந்த விருதுக்கு தெரிவு செய்யப்பட்ட கிராம அபிவிருத்தி சங்கங்களின் தலைவர்களுக்கான தேசிய மாநாடு எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் கல்கிசை மவுண்ட்லவேனியா ஹோட்டலில் நடத்தப்படவுள்ளன.

இந்த விருதுக்கு தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த மாநாட்டில் சங்கத்தின் தலைவரைப் பங்குபற்றுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-9)

## நல்லூர் பால கதிர்காம ஆடிவேல் திருவிழா ஊர்வலம் புதன்கிழமை



யாழ்ப்பாணம், ஜூலை 22
நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காமத்தின் ஆடிவேல் திருவிழா ஊர்வலம் நாளை மறுதினம் புதன்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 26 ஆம் திகதி இரவு 7 மணிக்கு மீண்டும் ஆலயத்தை வந்தடைவதுடன் நிறைவடையும்.

மூன்று தினங்கள் நடைபெறவுள்ள ஆடிவேல் ஊர்வலத்தின் முதல் நாளான புதன்கிழமை காலை 9 மணிக்கு கதிர்காமம் ஆலயத்தில் இருந்து புறப்படும் ஆடிவேல் தேர் பருத்தித்துறை வீதியூடாக முற்பகல் 11 மணிக்கு வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயத்தைச் சென்றடையும். அங்கிருந்து பி.ப 2 மணிக்கு யாழ். நகரின் முக்கிய வீதிகள் வழியாக வண்ணை சிவன் கோயிலை மாலை 6.30 மணிக்குச் சென்றடையும்.

2 ஆம் நாளான 25 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 .30 மணிக்கு வண்ணை சிவன்கோயிலில் இருந்து புறப்படும் தேர் காங்கேசன்துறை வீதி வழியாக நண்பகல் 12 மணிக்கு வண்ணை நாச்சிமார் ஆலயத்தைச் சென்றடையும்.

அங்கிருந்து மாலை 4 மணிக்குப் புறப்படும் ஊர்வலம் கொக்குவில் மஞ்சவனப்பதியை மாலை 6.30 மணிக்குச் சென்றடையும்.

மூன்றாவது நாளான 26 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு மஞ்சவனப்பதியில் இருந்து காங்கேசன்துறை வீதி, ஆடியபாதம் வீதியூடாக திருநெல்வேலி சிவகாமசுந்தரி ஆலயத்தை நண்பகல் 12 மணிக்குச் சென்றடையும்.

அங்கிருந்து மாலை 4.30 மணிக்கு ஆடியபாதம் வீதியூடாக இரவு 7 மணிக்கு மீண்டும் பாலகதிர்காமம் ஆலயத்தைச் சென்றடையும்.

ஊர்வலத்தில் இடம்பெறும் ஐராவதம், இடும்பன் ,நவவீரர் உருவங்களுடன் புதிதாக அமைக்கப்பட்ட அருணகிரிநாதரின் உருவச்சிலையும் இந்தமுறை இணைந்து கொள்ளவுள்ளது. (வ-7)

## செஞ்சிலுவைச் சங்க குறியீட்டை தகுந்தவர்கள் பயன்படுத்தவும்

### செஞ்சிலுவைச்சங்க யாழ்.மாவட்ட தலைவர் வேண்டுகோள்

வலி.வடக்கு, ஜூலை 20
யாழ்.மாவட்டத்தில் உள்ள பல சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் குறியீடான சிவப்பு அடையாளத்தைப் பாவித்து வருவதாகவும் இத்தகைய நடவடிக்கை பிழையான செயற்பாடாகும் எனவும் யாழ்.மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் கு.பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் வைத்தியர்கள் உட்பட வைத்திய சாலைகளில் கடமையாற்றும் பல்வேறு தரப்பினருடன் ஆயுள்வேத வைத்தியர்கள், பொதுமக்களும் கூட இத்தகைய செஞ்சிலுவைச் சங்கத்தின் குறியீடான சிவப்பு புள்ளடியை தமது வாகனங்களில் பாவிக்கின்றனர்.

இது தவறான செயற்பாடாகும் எனவும் இது தொடர்பாக உரிய தரப்பினருக்கு அறிவித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளதுடன் எதிர்காலத்தில் செஞ்சிலுவைச்சங்கத்தின் குறியீட்டை அதனுடன் தொடர்புடையவர்கள் தவிர ஏனையவர்கள் பாவிப்பதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் வேண்டுதல் விடுத்துள்ளார்.

தம்மை அடையாளப்படுத்துவதாக இருந்தால் மருத்துவ சேவையில் உள்ள வைத்தியர்கள் மற்றும் ஏனையவர்கள் பச்சை நிறத்தை உடைய அடையாளத்தையும் ஏனைய கால்நடை வைத்தியர்கள் மற்றும்அலுவலர்கள்நீலநிறத்தை உடைய அடையாளத்தையும் பயன்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார். (வ-86)

## கியுமெடிக்கா இலவச நடமாடும் சேவை

அச்சுவேலி, ஜூலை 22
ஆவரங்கால் விவேகானந்தா சனசமூக நிலையத்தில் கியுமெடிக்கா இலவச நடமாடும் சேவை நடைபெற்று வருகின்றது. ஆவரங்கால் விவேகானந்தா சனசமூக நிலையம் மற்றும் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் இந்த நடமாடும் மருத்துவ சேவை நடைபெற்று வருகின்றது.

வாராந்தம் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் இலவச நடமாடும் சேவையில் குழந்தைகள், முதியோர்கள், பெண்கள் தமது நோய்களுக்கான சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்கின்றனர். (வ-11)

## சிறைச்சாலைகள் தினத்தையொட்டி இரத்ததானம்




மட்டக்களப்பு,ஜூலை 22
சிறைச்சாலைகள் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு சிறைச்சாலையில் சனிக்கிழமை இரத்ததானம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.
இந்த நிகழ்வில் மட்டக்களப்பு சிறைச்சாலை அதிகாரிகளும், சிறைச்சாலையை சுற்றியுள்ள பொதுமக்களும் கலந்து கொண்டு இரத்த தானம் வழங்கினர்.
இரத்ததானம் கடமை நேரத்தில் உயிரிழந்த சிறைச்சாலை அதிகாரிகளின் ஆத்மா சாந்திக்காக நடைபெற்றது என்று மட்டக்களப்பு சிறைச்சாலை நலன்புரி உத்தியோகத்தர் ஆர்.சிறினிவாசன் தெரிவித்தார்.

# கூட்டமைப்பு இம்முறை வடக்குத் தேர்தலில் வெற்றியீட்ட நாமும் பங்களிப்போம்

### கிழக்கு மக்களுக்கு மாகாணசபை உறுப்பினர் அழைப்பு

திருகோணமலை,ஜூலை 22
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாண சபைத் தேர்தலில் அதிகப்படியான வெற்றியைப் பெற கிழக்கு மாகாண மக்கள் பங்காளிகளாக மாற வேண்டும்.வடக்கு மாகாண சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆளுவதன் ஊடாக கிழக்கு மாகாண சபை பலமடையும்.
இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரெத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
வடக்கு, கிழக்கு மாகாண சபையைப் பொறுத்த வரையில் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக மக்கள் பிரதிநிதிகளின் திட்டமிடலின்றி செயல்பட்டு வந்தது. எனினும் வெளிநாடுகளின் நிதி உதவியுடன் சமூக நலன் கருதிய நல்ல அதிகாரிகளின் திட்டமிடலூடாகவும் நிர்வாகத் திறமை காரணமாகவும், பல திணைக்களங்களின் நிர்வாகங்கள் திறன்பட செயற்பட்டு வந்தன.
ஆனால் இதற்கு எதிர்மாறாக ஒருசில அதிகாரிகள் செயற்பட்டு வந்ததும் உண்டு.
ஆனால் 13 ஆவது திருத்தச்சட்டம் என்ன நோக்கத்துக்காக கொண்டு வரப்பட்டதோ அந்த நோக்கம் முழுமை பெறவில்லை.
அரசின் உத்தரவின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட ஆளுனர், வெளிநாடுகளிலிருந்து பெறுகின்ற நிதியை சரியாக செயற்படுத்துகின்றோம் என்று வெளி உலகிக்குகாட்டிக் கொள்வதற்கான போலிப் பிரசாரத்தை மேற்கொண்டும் சில உயர் அதிகாரிகளுக்கு பதவி ஆசை காட்டி தமக்கு சார்பான செயற்பாட்டில் ஈடுபட வைத்ததும் உண்டு.
13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக வழங்கப்பட்ட அதிகாரங்களை முழுமையாக நடைமுறையாக்குவதற்கோ, மாகாண அமைப்பு முறை தொடர்பான மேலதிக உரிமைகளை பெறுவதற்கோ எந்த முயற்சிகளையும் ஆளுனர் மேற்கொள்ளவில்லை.
ஒருசில உயர் அதிகாரிகளும் இதற்கு உடந்தையாக தங்கள் பதவி பறிபோகும் எனும் அச்சத்துடன் செயற்பட்டு வந்தனர்.
எதிர்காலத்தில் வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆளும் தரப்பாக செயல்படும் போது எமக்கு கடந்த காலத்தில் ஏற்பட்ட இன்னல்களை சர்வதேச ரீதியாக அதிகார பலத்தடன் எடுத்துக் கூறுவதற்கு முடியும்.
வடக்கு,கிழக்கு இணைப்பு தொடர்பான செயல்பாட்டை வீரியத்துடன் முன்னெடுக்க முடியும்.
13ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள அதிகாரப் பரவலாக்கலுக்கான குறைபாடுகளை இனங்கண்டு நிவர்த்தி செய்யவதோடு தேவையான உரிமைகளைப் பெறுவதற்கு அரசுடன் பேரம் பேச முடியும்.
இவ்வாறான பல முன்னேற்றகரமான நடவடிக்கைகளை கிழக்கு மாகாண சபையிலும் மேற்கொள்ள முடியும்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



> 13ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள அதிகாரப் பரவலாக்கலுக்கான குறைபாடுகளை இனங்கண்டு தேவையான உரிமைகளைப் பெறுவதற்கு அரசுடன் பேசலாம்.

## அதிக மீன்கள்... மகிழ்ச்சியில் மீனவர்கள்...



களுவாஞ்சிக்குடி, களுதாவளை கடற்கரையில் சனிக்கிழமை காலை, கரைவலை மீன்பிடி ஊடாக பல லட்சம் பெறுமதியான சூரை மீன்கள் பிடிபட்டன. பிடிபட்ட மீன்களுடன் மீனவர்கள் சந்தோஷமாகக் காணப்படுகின்றனர்.

# தலைக்கவசத்தை அணியாத மாணவருக்கும் நடவடிக்கை

மட்டக்களப்பு,ஜூலை 22
மட்டக்களப்பு மாவட்டத்தில் தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிள்களின் பின்னால் அமர்ந்து செல்லும் பாடசாலை மாணவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்று மட்டக்களப்பு தலைமையக போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.
பாடசாலை மாணவர்கள் தலைக்கவசம் அணிய வேண்டும் என்ற சட்டம் நீண்ட நாள்களுக்கு முன்னர் பொலிஸாரினால் விடுக்கப்பட்டது.
ஆனால் அவற்றை பலர் உதாசீனம் செய்கின்றனர்.
இந்த நிலையில் தலைக்கவசம் அணியாது பயணிக்கும் பாடசாலை மாணவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம் என்று தலைமையக பொலிஸ் போக்குவரத்து பொறுப்பதிகாரி ஏ.எல்.ஹிதாயதுல்லாஹ் தெரிவித்தார். (ச)



> சட்டத்தைப் பலர் உதாசீனம் செய்கின்றனர். அதனால் வீதி விபத்துகள் அதிகம் ஏற்படுகின்றன.

# கிழக்கில் முறையற்ற ஆசிரியர் இடமாற்றம்

மட்டக்களப்பு,ஜூலை 22
கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் தீர்மானத்துக்கிணங்க கடந்த முதலாம் திகதி முதல் டிசெம்பர் மாதம் வரை சகல ஆசிரியர்களது இட மாற்றங்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளன.
எனினும் சில வலயங்களில் ஆசிரிய இடமாற்றங்கள் நடைபெற்றுவருவது குறித்து தமிழர் ஆசிரியர் சங்கம் கிழக்கு மாகாண ஆளுநருக்கு தெரியப்படுத்தியுள்ளது.
இதுகுறித்து சங்கம் ஆளுநருக்கு அனுப்பிவைத்துள்ள மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
இந்த இடமாற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.
கிழக்கு மாகாண கல்விய மைச்சின் செயலர் புஸ்பகுமார கடந்த முதலாம் திகதி முதல் டிசெம்பர் வரை சகல ஆசிரியர்களது இடமாற்றங்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறித்து கல்வி அமைச்சிலும் மாகாண கல்வி அலுவலகத்திலும் அறிவித்தல் பலகையிலும் காட்சிப்படுத்தியுள்ளார்.
அதனால் இடமாற்றம் கோரிப் போகும் ஆசிரியர்கள்குறித்த அறிவித்தலைப் பார்த்தபடி ஏமாற்றத்துடன் திரும்பவேண்டியேற்படுகிறது.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# மட்டு. மாவட்டச் செயலகக் கட்டடத்தை அரச பிரசாரப் பணிக்கு அபகரிக்கச் சதி


### தடுத்து நிறுத்தக் கோருகிறார் அரியம் எம்.பி.

மட்டக்களப்பு,ஜூலை 22
மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்குரிய கட்டடம் ஒன்றினை அரசியல் கட்சியின் பிரசாரப் பணிகளுக்காக அபகரிக்க மேற்கொள்ளப்படும் முயற்சியை தடுத்து நிறுத்த வேண்டும்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் மாவட்ட அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மட்டக்களப்பில் தபால் திணைக்களத்துக்கு அருகிலுள்ள 'பப்ளிக் கிளப் கட்டடம்' மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கு உரியதாகும்.
இந்தக் கட்டடத்தினை அரச சார்பு கட்சியொன்று தனது அலுவலகமாக பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.
கடந்த சில நாள்களாக அங்கிருக்கும் பொருள்களை அகற்றுமாறு பொலிஸார் அறிவுறுத்தி வருகின்றனர்.
அரசு ஊழியர்களின் பொழுது போக்கு இடமாகவுள்ள அந்த கட்டடத்தினை கட்சியொன்றின் பாவனைக்காக அபகரிக்க முயல்வதை ஏற்க முடியாது.-என்றார். (ச)



# பரீட்சை தினத்திலிருந்து 5 நாள்களுக்கு முன்னரே டியூசன் நடத்தத்தடை

## வர்த்தமானி வெளியானது



கொழும்பு,ஜூலை 22
ஜி.சீ.ஈ சாதாரண தரம், உயர்தரம், 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைகள் நடைபெறும் திகதியிலிருந்து ஐந்து நாள்களுக்கு முன்னரே டியூசன் வகுப்புக்கள், கருத்தரங்குகள் நிறுத்தப்பட வேண்டும் என்ற சட்டம் தொடர்பான அரச வர்த்தமானி அறிவித்தல் சனிக்கிழமை வெளியிடப்பட்டது.
கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய மூன்று பரீட்சைகளும் ஆரம்பமாகும் தினத்துக்கு ஐந்து நாள்களுக்கு முன்னிருந்து பரீட்சைகள் முடிவடையும் திகதி வரை டியூசன் வகுப்புக்கள், கருத்தரங்குகள், மீட்டல் வகுப்புக்கள் எதுவும் நடத்தக் கூடாது. அதேபோன்று, பரீட்சைகளுடன் தொடர்புடைய மாதிரி வினாத்தாள்கள் தயாரித்தல், அச்சிடல், பகிர்ந்தளித்தல் என்பன தண்டனைக்குரிய குற்றம் என்று குறித்த வர்த்தமானி அறிவித்தலில் அறிவிக்கப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ.எம். என்.ஜே.புஷ்பகுமார தெரிவித்தார். (ச)


# மகாநாயக்கர்களை விட கர்தினால்களுக்கு மரியாதை

## அரசைச் சாடுகிறார் பொது பலசேனாவின் தேரர்



கொழும்பு,ஜூலை 22
பௌத்த மதத்தின் மகாநாயக்க தேரர்களைவிட கிறித்தவத்தின் கர்தினால்களுக்கு அரசு அதிக மரியாதை வழங்குகிறது என்று பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசாரதேரர் குற்றம் சாட்டியுள்ளார்.
குருநாகல் மாவட்டத்தில் நடைபெற்ற பொது பல சேனா மாநாடு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
மாகாண சபைகளின் காணி, பொலிஸ் அதிகாரங்கள் நீக்கப்பட வேண்டும் என்று அண்மையில் மகாநாயக்க தேரர்கள் அரசிடம் கூட்டாக வேண்டுகோள் விடுத்திருந்தனர்.
எனினும் அதன் பின்னர் கிறித்தவ கர்தினால் ஒருவர் மாகாணசபை தேர்தல்களை நடத்தும்படி அரசிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். அவரின் வேண்டுகோளுக்கு ஏற்ப அரசு தற்போது மாகாண சபைத் தேர்தல்களை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.
இதன் மூலம் மகாநாயக்க தேரர்களின் வேண்டுகோளை அரசு உதாசீனம் செய்து அவர்களை அவமானப்படுத்தியுள்ளது.-என்றார். (ச)

> மகாநாயக்க தேரர்களின் வேண்டுகோளை அரசு உதாசீனம் செய்து அவர்களை அவமானப் படுத்தியுள்ளது.



கொழும்பு, சம்மாங்கோடு கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் ஆடிவேல் விழா சனிக்கிழமை ஆரம்பமாகி தேர் பவனி வந்தது. அலரிமாளிகையின் முன்றிலில் தேர் நிற்பதையும், ஜனாதிபதியின் பாரியாரான ஷிரந்தி ராஜபக்ஷவுக்கு ஆலய அறங்காவலரின் பாரியார் திருமதி சாரதா மாணிக்கவாசகம் மாலை அணிவிப்பதையும் காணலாம்.

# ஊழல் மோசடிகளில் ஈடுபடும் பொலிஸாருக்குத் தண்டனை

கொழும்பு,ஜூலை 22
ஊழல் மோசடிகளில் ஈடுபடும் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக கடும் தண்டனை விதிக்கப்படவுள்ளது.
ஊழல் மோசடிகளில் ஈடுபட்டு பொலிஸாரின் நன்மதிப்புக்குக் களங்கம் ஏற்படுத்தும் உத்தியோகத்தர்கள், அதிகாரிகளுக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இந்த விசாரணைகள் பொலிஸ் மா அதிபர் என்.கே. இளங்கக்கோனின் உத்தரவுக்கு அமைய ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவரின் தலைமையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
அண்மையில் முஸ்லிம் வர்த்தகர் ஒருவரை படுகொலை செய்த சம்பவத்துடன் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தனவுக்குத் தொடர்பு இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டதனைத் தொடர்ந்தே இந்த விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. (ச)

> நன்மதிப்புக்கு களங்கத்தை ஏற்படுத்தும் பொலிஸாருக்கு நடவடிக்கை.

# குற்றத்தை நிரூபித்தால் விலகுவேன்

## மேர்வின் அதிரடி



கொழும்பு,ஜூலை 22
நீதிமன்றம் என்னை ஏதோ ஒரு குற்றத்துக்கு குற்றவாளி என்று தீர்மானித்தால், களனியில் இருந்து மட்டுமன்றி அரசியலில் இருந்து விலகி விடுகிறேன் என்று அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.
களனி – உப்புவர்ண விஷ்ணு ஆலயத்தில் சனிக்கிழமை நடைபெற்ற அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.
எனது அரசியல் வாழ்க்கை களனி ஆசனத்திலேயே நிறைவுபெற வேண்டும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

# இலங்கையில் எயிட்ஸ் தீவிரம்

## கடந்த ஆறு மாதங்களில் 16 பேர் சாவு




கொழும்பு,ஜூலை 22
இலங்கையில் தீவிரமாக பரவத் தொடங்கியிருக்கும் எயிட்ஸ் நோயால் இந்த ஆண்டு 16 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு போர் மற்றும் வெளிநாட்டு தொண்டு நிறுவனங்களின் படையெடுப்பு என்பனவற்றால் அண்மைக் காலங்களில் எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.
இந்தநிலையில் இந்த ஆண்டின் முதல் 6 மாத காலப் பகுதியில் நாட்டில் 16 பேர் எயிட்ஸ் நோயினால் உயிரிழந்துள்ளனர் என்று எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் ஒழிப்பு வேலைத்திட்டப் பணிப்பாளர் வைத்தியர் சிசிர லியனகே தெரிவித்தார்.
இதேவேளை இந்த 6 மாத காலப்பகுதியில் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளான 90 பேர் இனம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 7 குழந்தைகளும் உள்ளடங்குகின்றனர் என்று அவர் கூறினார். (ச)

# நோன்புப் பெருநாளை முன்னிட்டு அரச ஊழியருக்கு 7 இல் சம்பளம்

கொழும்பு,ஜூலை 22
நோன்புப் பெருநாளை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் உள்ள சகல முஸ்லிம் அரச ஊழியர்களுக்கும் எதிர்வரும் 7 ஆம் திகதி சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று திறைசேரி சகல அரச திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளது.
நோன்புப் பெருநாள் எதிர்வரும் 9 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளதால், ஜனாதிபதி இதற்கான உத்தரவை திறைசேரிக்கு வழங்கியுள்ளார். அதற்கமைய தேவையான நிதி ஒதுக்கீடு சகல அமைச்சுக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.



தற்போது சகல அரச நிறுவனங்களிலும் சகல முஸ்லிம் உத்தியோகத்தர்களுக்கும் பெருநாள் முற்பணம் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ச)

# தேர்தல் கடமையில் ஈடுபட மாட்டோம்

## இராணுவம் தெரிவிப்பு



கொழும்பு,ஜூலை 22
தேர்தல் கடமையில் பொலிஸார் கோரிக்கை விடுத்தால் தவிர, வேறு வழிகளில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடப்போவதில்லை என்று இராணுவம் அறிவித்துள்ளது.
இராணுவத்தினர் சிவிலியன் நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதில்லை.
எனினும் போர் நிறைவுக்குக் கொண்ட வந்த போதிலும் இன்னமும் பிரிவினைவாத சக்திகளின் செயற்பாடுகள் தொடர்கின்றன.
சில தரப்பினர் பிரிவினைவாத நோக்கங்களை முன்னிலைப்படுத்தி வருகின்றனர்.
இவ்வாறான நடவடிக்கைகள் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வழியமைக்காது.
குழப்ப நிலைமைகளை கட்டுப்படுத்த பொலிஸாருக்கு உதவிகள் வழங்கப்படும் என்று இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய தெரிவித்தார். (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பாட்டும் நானே பாவமும் நானே என்ற போக்கால் நட்டம் யாருக்கு...?

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள் தமது மனுக்களை, இந்த மாதம் 25 ஆம் திகதிக்கும் அடுத்த மாதம் முதலாம் திகதிக்கும் இடையில் தாக்கல் செய்ய வேண்டும் என்று தேர்தல் திணைக்களம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

மத்திய மற்றும் வட மத்திய மாகாண சபைகளுக்குத் தேர்தல் நடைபெற உள்ள போதிலும், வடக்குத் தேர்தல் குறித்தே நாட்டின் அனைத்து மக்களினதும் கவனமும் எதிர்பார்ப்பும் குவிந்துள்ளன.

அவற்றை விடவும், அனைத்துலக நாடுகளின் அதிக கவனத்தையும் வடக்குத் தேர்தலே பல பரிமாணங்கள், எதிர்பார்ப்புகள் சார்ந்து ஈர்த்துள்ளது. ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் வடக்குத் தேர்தல் சார்பான தமது பல வகை உதவிகள், ஊக்குவிப்புகள் குறித்து கருத்துக்களை வெளியிட்டுள்ளன.

இலங்கையின் தேசிய நல்லிணக்கத்தில், வடமாகாண சபைத் தேர்தல் ஒரு மைல் கல் என்றும், அங்கு ஜனநாயகத்தைப் பலப்படுத்தும் தேர்தல் நடைமுறைகளுக்கு நிதி உதவி வழங்கப்படும் என்றும் ஜப்பானிய அரசு அறிவித்திருப்பதனை விசேடமாகக் குறிப்பிட்டுக் கூறலாம்.

இதேவேளை, வடக்கு மாகாணசபைத் தேர்தலை நியாயமானதாகவும் சுதந்திரமானதாகவும் நடத்துவதன் மூலமே பாதிப்புற்ற சமூகங்களிடையே நம்பிக்கையைக் கட்டி எழுப்ப முடியும் என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளமையும் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

வடக்குத் தேர்தலை நியாயமானதாக நடத்துவதன் மூலமே, பாதிப்புற்ற , சமூகங்களிடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்ப இயலும்.

எதிர்க்கட்சிகள் சுதந்திரமான முறையில் தேர்தல் பிரசாரம் செய்யக்கூடிய அளவுக்கு சூழல் அமைய வேண்டும். தேர்தல் காலத்தில் எந்தவகை சார்ந்த அழுத்தமோ, அச்சுறுத்தலோ இருக்கக் கூடாது. தேர்தல் நேர்மையாகவும் சுதந்திரமாகவும் நடத்தப்பட வேண்டும்.

மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் வெளியிட்ட கருத்துக்களுக்கு அப்பால், வடக்கே வந்து சென்ற ஐரோப்பிய ஒன்றிய முக்கியஸ்தர்களின் அவதானிப்புகளும், அவை மூலமாக எழுந்த நிலைப்பாடுகளும் கூர்ந்து நோக்கப்பட வேண்டியவை.

• வடக்கில், அரச பொது நிர்வாக விடயங்களில் படையினரின் தேவையற்ற தலையீடு, தொடருமானால் பொருளாதார ரீதியான முதலீடுகளைப் பாதிக்கும்.

பொது நிர்வாக விடயங்களில் படையினரின் அளவுக்கு அதிகமாக உள்ளதை அவதானிக்க முடிகிறது.

• குடியியல் நிர்வாகம் சார்ந்த பணிகள் பொலிஸாரிடமே ஒப்படைக்கப்பட வேண்டும்.

வடக்கில் பொருளாதார அபிவிருத்தி சார் செயற்பாடுகளில் படையினர் ஈடுபடுவது குறித்து ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளின் எதிர்மறையான (Negative) கருத்துக்கள் கூர்ந்து நோக்கப்பட வேண்டியவை.

• அது வடக்கின் பொருளாதார வளர்ச்சியை பெரிய அளவில், நேரடியாகவே பாதிப்பது மட்டுமன்றி, நாட்டின் பொருளாதாரத்தையும் பாதிக்கும் என்று சுட்டிக் காட்டி உள்ளார்கள்.

பொருளியல் சார் நோக்கில், காலப்போக்கில் பலப்பல பாதிப்புக்களை உண்டாக்குவது மட்டுமன்றி, நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையவல்ல, அனைத்துலக வர்த்தக ஒப்பந்தங்களை இழப்பதற்குக் காலாக அமையலாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் வர்த்தகத்துறை வளர்ச்சிக்குப் பெரும் குந்தகம் விளைவிக்கும் என்று கருதப்படும் படையினர் ஊடான வர்த்தக நடவடிக்கைகள், இப்போதைக்கு ஆரம்பத்தில் வடக்கில் ஊக்குவிக்கப்பட்டால், காலப்போக்கில் அது நாடு முழுவதற்கும் இயல்பாகவே பரவும் என்று கொள்வது தப்பன்று.

எதுவோ–

வடக்கில் மட்டுமன்றி, நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இராணுவ முகாம்கள் உள்ளன. வெளிநாட்டுச் சக்திகளை மகிழ்வித்து, நாட்டின் பாதுகாப்பினை நெருக்கடிக்கு உள்ளாக்க முடியாது என்று அரச சார்பில் வியாக்கியானம் கூறப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

பாட்டும் நானே பாவமும் நானே என்ற போக்கில், அரசின் செயற்பாடுகள் அமைந்தால், அவை தொடர்ந்ததால், மில்லேனியம் சகாப்தத்தில் நாடு காலூன்றுவது மிகக் மிகக் கடினம் என்பதனையும் அதிகாரத்தில் உள்ளவர்கள் மறக்க முனையலாமோ....?

# மாகாண சபை தேர்தல் முடிவுகள் பொதுநலவாய மாநாட்டின் வெற்றிக்கு அடிகோலும்

*சண்டேரைம்ஸ் கட்டுரையிலிருந்து*

■ கோகுலன்

கடந்த வெள்ளிக்கிழமையன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கூடிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு எதிர்வரும் மாகாண சபைகள் தேர்தல் தொடர்பாக கொள்கை அடிப்படையிலான பல தீர்மானங்களை முடிவு செய்தது.

அவைகளில் ஒரு தீர்மானம் என்னவென்றால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் எந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும் தேர்தல் நடைபெறவிருக்கும் எந்த மாகாணத்திலும் போட்டியிடலாகாது என்பதாகும் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

இந்தத் தீர்மானமானது ஈ.பி.டி.பியின் தலைவரும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவுக்கு எதிரான நேரடித் தாக்குதலாகும் என்று கருதலாம். வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது மட்டுமல்ல வடமாகாண சபைக்கான முதலமைச்சர் வேட்பாளராகவும் போட்டியிட அவர் விருப்பம் கொண்டிருந்தார். எனவே அவ்வாறு போட்டியிடுவதாயின் தேவானந்தா அமைச்சர் பதவி உட்பட நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் விட்டு விலக வேண்டும். வடமாகாண சபைத் தேர்தலில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுக்கு ஒருசில வரையறுக்கப்பட்ட ஆசனங்கள் மட்டுமே குறிப்பிட்ட சில தொகுதிகளுக்கு வழங்கப்படும் என்று தெரிகின்றது.

உண்மையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைவர்களால் அவர்கள் மீது திணிக்கப்பட்டுள்ள நம்பிக்கை இல்லாத் தீர்மானம் என்றுதான் இதைச் சொல்ல வேண்டும்.

வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முதலமைச்சர் வேட்பாளராக தெரிவு செய்துள்ள உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் பெரும்பாலும் வெற்றி பெறுவார் என்றே கருதப்படுகின்றது. வருட முற்பகுதியில் இது பற்றி கேள்வியுற்ற ஜனாதிபதி அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவிடம் விவரம் கேட்டிருந்தார். நாணயக்காராவின் புதல்வர் நிர்மலன் காந்தன் விக்னேஸ்வரனின் மகளைத் திருமணம் முடித்துள்ளார்.

நாணயக்கார அதுபற்றி ஆராய்ந்து தெரிவித்த தகவலில் அவ்வாறு ஏற்பாடு ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை என்று குறிப்பிட்டிருந்தார்.

### வீரவன்சவின் கண்டுபிடிப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்களின் கருத்துக்களை வழமையாக பிரதிபலிப்பவரான தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்ச கருத்து தெரிவிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் தெரிவு கொழும்பிலுள்ள இரண்டு ராஜதந்திர தூதரகங்களினாலேயே செய்யப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார். இவ்வாறு அவர் கூறியிருப்பது அமெரிக்கா மற்றும் இந்திய தூதரகங்களையே என்று அந்தக் கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன. மாகாண சபைக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்காக நேற்று முன்தினம் வவுனியாவில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கூடியது. அந்தக் கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் இந்தியாவுக்குச் சென்று திரும்பியதன் பின்னர் இந்தக் கூட்டம் நடைபெற்றது. வீரவன்ச கடந்த வாரமும் செய்திகளில் அடிபட்டிருந்தார். காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு பகிரப்படுமானால் தாம் தமது அமைச்சர் பதவியை துறப்பார் என்று கடந்த மாதம் கூறியிருந்தமையே இதற்குக் காரணம். இருந்தபோதிலும் அவர் இப்போது , தங்கள் பிரசாரங்களின் காரணமாகவே நாடாளுமன்ற தெரிவுக் குழு நியமிக்கப்பட்டது என்றும் அந்த நோக்கத்தை தாங்கள் அடைந்துவிட்டார்கள். அதனால் பதவி விலக வேண்டிய அவசியம் இல்லையென்றும் கூறி வருகிறார். இந்த அமைச்சர் தான் 2010 ஆம் ஆண்டு ஜுலை மாதம் இறக்கும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டவர். இலங்கையின் போர் குற்றங்கள் தொடர்பாக ஐ.நா.வின் செயலாளர் நாயகம் நிறுவிய நிபுணர் குழுவை கலைக்கக் கோரி அந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. உண்ணாவிரதத்தை அடுத்த நாளே முடித்துக் கொண்டார் அமைச்சர். நிபுணர் குழு தொடர்ந்து ஆய்வுகளை நடத்தி இலங்கை மீது வெறுப்பூட்டும் அறிக்கையொன்றை வெளியிட்டது.

### யு.என்.பிக்குள் சமரசம்

குருணாகல ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர அரச தரப்புக்கு தாவி விடுவார் என்று பேச்சடிபட்டபோதும் அவருக்கு அரச தரப்புக்கள் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருந்தது. சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவிக்கையில்; கட்சி மாறுவதற்கு ஆயத்தமாகி வரும் ஒருவருக்கு வடமேல் மாகாண சபை முதலமைச்சர் பதவி வழங்கப்படலாகாது. அவ்வாறு கட்சி மாறிய ஒருவர் அரச தரப்புக்கு பலத்த பாதக நிலைமையை ஏற்படுத்தியுள்ளார் என்று தெரிவித்துள்ளார். அமைச்சர் சபை உறுப்பினர் ஒருவரையே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இன்னும் பலர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். அவர்கள் பெரிதும் சாதி பீதியில் அக்கறை உள்ளவர்கள். இந்த சூழ்நிலையில்தான் ஜயசேகர ஐ.தே.கவின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவரின் ஆதரவுடன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து ஒருவருக்கு ஒருவர் என்ற முறையில் மனம்விட்டு பேசியுள்ளார். இந்தச் சந்திப்பின் போது தாம் எல்லா வகையிலும் ஓரம் கட்டப்படுவதாகவும் குருநாகல் மாவட்டத்தில் அதிகப்படியான விருப்பு வாக்குகள் பெற்றுள்ள தாம் கட்சியில் அங்கீகரிக்கப்படாமல் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். அவர் தெரிவித்துள்ள குறைகள் பற்றி கவனிக்கப்படும் என்று தெரிவித்துள்ள விக்கிரமசிங்க, ஜயசேகராவை கட்சியில் தொடர்ந்து விசுவாசமாக பணியாற்றும்படியும் கேட்டுக் கொண்டுள்ளார்.

மூன்று மாகாண சபைகளுக்கும் நடக்கவிருக்கும் தேர்தல் முடிவுகள் நவம்பரில் நடைபெறவிருக்கும் பொதுநலவாயத் தலைவர்கள் மாநாட்டின் வெற்றிக்கு முன்னோடியாக அமையும் என்று கருதப்படுகின்றது.

இந்த மாநாட்டின் மூலம் நாட்டுக்கு அதிக பட்ச நன்மைகளைப் பெற்றுக்கொள்ள நாம் முயன்று வருகிறோம் என்று அமைச்சர் ராஜபக்ஷ க்ஹறியிருக்கின்றார்.

வரப்போகும் பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டில் தமது நாட்டு ஊடகவியலாளர்களுக்கு தடையிருக்கக் கூடாதென்ற வகையில் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் அலிஸ்டயார் பேர்ட் கருத்து வெளியிட்டிருக்கும் பின்னணியில் இலங்கை அமைச்சரின் கருத்தும் வெளியாகியுள்ளது.

பிரிட்டிஷ் தமிழ் கொன்சர் வேடிவ் இரவு விருந்தில் அமைச்சர் பேசும்போது இதை தெரிவித்திருந்தார். அந்த விருந்தில் இலங்கை போர் தொடர்பான சர்ச்சைக்குரிய ஆவணப்படங்களை வெளியிட்ட கலம்மக்றே, இலங்கையில் ஒரு சமயம் பி.பி.சி. நிருபராக இருந்துள்ள பிரான்சஸ் ஹறிசன் மற்றும் சனல்-4 ஊடகவியலாளர்கள் ஜொனதன் மில்லர் ஆகியவர்களும் கலந்து கொண்டிருந்துள்ளார்கள். மக்றேவும் ஹறிசனும் சமீப காலத்தில் ஜனாதிபதியின் ஊடகப்பிரிவின் முன்னாள் தலைவரும் இப்போது நியூசவுத்வேல்சில் துணைத் தூதுவராக இருப்பவருமான பந்துல ஜயசேகரவுடன் டுவிட்டரில் இலங்கை பற்றிய சொற்போரில் ஈடுபட்டிருந்தவர்கள்.

### மாநாட்டுக்கு பிரிட்டிஷ் ஊடகத்தினர்

பொதுநலவாய மாநாட்டு விடயங்களை சேகரிப்பதற்கு மக்றோ, மில்லர் மற்றும் ஹறிசன் ஆகியவர்கள் அனுமதிக்கப்படுவார்களா என்று அமைச்சர் பேர்ட்டிடம் கேட்டபாது, சமீப காலத்தில் டுவிட்டரில் இடம்பெற்றுள்ள வாதங்கள் மற்றும் கொழும்பிலிருந்து எமது உயர் ஸ்தானிகரகம் அனுப்பிய அறிக்கைகளையும் பின்னணியாகக் கொண்டு பொதுநலவாய செயலகத்திடம் நாங்கள் கேள்வி எழுப்பியுள்ளோம். செயலகம் இலங்கை அரசிடம் கேள்வி எழுப்பியுள்ளது. அதன் வாயிலாகத்தான் கொழும்பிலுள்ள அரச முக்கியஸ்தர்கள் அறிக்கைகள் மூலமும் அதிகாரபூர்வ பிரகடனங்கள் மூலமும் பொதுநலவாய மாநாட்டுக்கு பிரிட்டிஷ் ஊடகவியலாளர்கள் செல்வதில் தடையில்லை என்று அறிவித்திருக்கிறார்கள் என்றார். பொதுநலவாய மாநாட்டுக்குச் செல்லும் பிரதமர் டேவிட்ட கெமரோனுடன் கூடிய வரை ஏராளமான ஊடகவியலாளர்கள் செல்வார்கள் என்றும் அமைச்சர் பேர்ட் கூறினார்.

சில வாரங்களுக்கு முன்னர் பிரிட்டிஷ் பிரதமர் கெமரோன் பிரிட்டிஷ் எம்.பி. ஒருவருக்கு எழுதியிருந்த கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்திருந்தார்.

பொதுநலவாய நிறுவனமானது ஜனநாயகம், சுதந்திரம் மற்றும் சட்டப்பூர்வமான ஆட்சி என்ற விழுமியங்களுக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அமைப்பாகும், இந்த விழுமியங்களை நிலை நிறுத்தும்படியாக உறுப்பு நாடுகள் நவம்பர் மாநாட்டிலும் அதற்கு இடையில் வரும் காலங்களிலும் இலங்கையை வற்புறுத்துவார்கள் என்று நான் நம்புகின்றேன். நானும் முழுமையாக அவ்வாறு செய்ய தீர்மானித்துள்ளேன் என்று குறிப்பிட்டிருந்தார். ★

# 'நெற்கபே'யில் காலத்தைச் செலவிடும் மாணவர் கவனிக்க வேண்டியது பெற்றோரின் கடமை

மேனன்

மாற்றங்கள்தான் மனித வாழ்க்கை " என்பார்கள். அதனடிப்படையில் ஏற்படும் பல வாழ்வியல் மாற்றங்கள் எமது சந்ததிக்குச் சாதகமான அம்சங்களையும் உருவாக்கியுள்ளன. அதே வேளை பாதகமான அம்சங்களையும் உருவாக்கி வருகின்றன. இதில் ஒன்று தான் தற்போது எமது சமூகத்தில் நிலவும் நெற்கபே மோகம்.

இன்று குடாநாடு உட்பட பல இடங்களில் ஏராளமான பாடசாலை மாணவர்கள் பல மணி நேரத்தை நெற்கபேக்களில் செலவு செய்கின்றார்கள். எமது வாழ்வியலில் இது இன்று ஓர் மிகப்பெரிய பிரச்சினையாக தலைதூக்கியுள்ளது. இது தொடர்பாக அனைவரும் சிந்திக்க வேண்டிய தேவை மேலோங்கியுள்ளது. இல்லையேல் எமது இளைஞர்கள் மத்தியில் ஏற்படும்சீரழிவுகளை யாரும் தடுக்க முடியாத நிலை தலைதூக்கும். பாடசாலைக்கு செல்வதென்று கூறிவிட்டு இடைநடுவே உடைமாற்றிக் கொண்டு நெற்கபேக்கு செல்லும் மாணவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். பிரத்தியேக வகுப்புக்குச் செல்வதாகக் கூறிவிட்டு நெற்கபேக்குள் முதல் வகுப்பு நேரத்தைக் கழித்துவிட்டு மற்றைய வகுப்புக்குச் செல்லும் மாணவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். பாடசாலைத் தேவைக்காக அல்லது பிரத்தியேக வகுப்புத் தேவைக்காக எனப் பெற்றோரிடம் பணத்தைப் பெற்று நெற்கபேக்குக் கட்டணம் செலுத்தும் மாணவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்கள் இணையத் தளங்களைத் தமது அறிவியல் தேடல்களுக்குப் பயன்படுத்துகிறார்களா? விளையாட்டுக்கள் தொடர்பான தகவல்களைப் பெற, போட்டிகளை பார்த்து ரசிக்க பயன்படுத் துகின்றார்களா? அல்லது அதிசயங்களை பார்ப்பதில் ஈடுபாடு காட்டுகின்றார்களா அல்லது ஆபாசப் படங்களில் மூழ்கிவிட்டார்களா? எதுவுமே புரியாத நிலை பெற்றோருக்கு ஏற்பட்டுள்ளது. சில பெற்றோர்களுக்குத் தமது பிள்ளைகள் நெற்கபேக்குப் போவதே தெரியாது. சில பெற்றோருக்கு எதற்கு அங்கு போகின்றார்கள்?, அங்கு என்ன பார்க்கலாம் என்பதெல்லாம் தெரியாது. இவ்வாறு பெற்றோர்கள் இருட்டினுள் வாழ பிள்ளைகள் வெளிச்சத்தில் விடிவைத் தேடிதவறானபாதையில் பயணிக்க முயல்கின்றனர்.

### ஆபாசப் படங்கள் பார்ப்பது தவறா?

இந்தக் கேள்வி வளர்ந்தோர் மட்டத்தில் வாதப்பிரதிவாதங்களை உண்டு பண்ணலாம். மேலைத்தேச நாடுகளில் கலாசார எல்லைகளைத் தாண்டிப் பிள்ளைகள் பலதையும் பத்தையும் கண்டு கேட்டு அனுபவப்படுவதால் தான் உணர்வுகளுக்கு அப்பால் உயிரோட்ட முன்னேற்றங்களைப் பெறுகின்றனர். கட்டுப்படுத்தல்கள், மட்டுப்படுத்தல்கள் இன்மையால்தான் தூரதேச அறிவியலைச் சிந்திக்கின்றனர் என்பது ஒரு தரப்பால் முன்வைக்கப்படும் வாதம்.

கட்டுப்பாடின்றி, திறந்து விடப்படும் எண்ணங்களால்தான் தீர்மானங்கள் பிறக்கின்றன என்றெல்லாம் வாதிடுவோரும் உள்ளனர். ஆனால் அது சிறு வயதினர்க்கு பொருந்தாதென்பதைப் பெற்றோர்கள் புரிந்து கொள்ள வேண்டும். 18 வயதுக்குப் பின்பு தான் ஒரு பிள்ளை சமூக எதிர்பார்ப்புக்களை, வாழ்வியற் போக்குகளை உணர ஆரம்பிக்கின்றது. எது சரி, எது பிழை, எது எமது சமூகத்தால் ஏற்றுக் கொள்ளக்கூடியது, எது ஏற்றுக்கொள்ள முடியாதது என்பதையெல்லாம் அறிய ஆரம்பிக்கின்றது. சமூகத்துடன் வாழும் நாம் சமூகம் விதிக்கும் எல்லைக்குள்ளும் வாழ வேண்டும் என்கின்ற எண்ணம் மேலெழ ஆரம்பிக்கின்றது. எமது மனித வாழ்க்கை சமநிலைத் தராசு போன்றது. சமூக அந்தஸ்து, சமூக கௌரவம் என்பன ஒருபுறம் இருக்க ,மறுபுறம் உணர்வுகள், மோகங்கள், ஆசைகள் இருக்கும். சமூக அந்தஸ்து, கௌரவம் என்கின்ற நிலை கனதியாகின்றபோது உணர்வுகளின் வெளிப்பாடு மட்டுப்படுத்தப்படும். சமூக அந்தஸ்து, கௌரவம் என்பவற்றின் பெறுமதி மனதளவில் குறையும்போது மோகங்கள், விருப்புக்கள் கனதியாகின்றன. இதன் விளைவுகள் விபரீதமாகின்றது.

ஆகவே இந்த சமூக அந்தஸ்து, கௌரவம் எனும் பெறுமானம் மனதளவில் உருவாகாத சிறுவயதில் உணர்வுகளை, மோகங்களைத் தூண்டும் ஆபாசப்படங்களை பிள்ளைகள் பார்க்கும்போது தடைக்கற்கள் எதுவுமின்றி தடம்புரள வாய்ப்புண்டு. நினைத்ததைச் செயற்படுத்த பிள்ளைக்கு எதுவும் தடையிராது. ஆகவே சிறுவயதில் இதனைப் பார்ப்பது சரியெனநியாயப்படுத்த முடியாது.

### திசை மாற்றத்தை எப்படித் தடுப்பது?

இன்றைய பெற்றோருக்கு பிள்ளை வளர்ப்பு என்பது பெரும் சவாலாக உள்ளதை எவரும் மறுக்க முடியாது. பொருளாதாரத்துக்காக போராட வேண்டிய தேவையொருபுறம், சுய முன்னேற்றத்துக்காக போராட வேண்டிய நிலை ஒருபுறம், பிள்ளைகளின் முன்னேற்றத்துக்காக போராட வேண்டிய கடமை ஒருபுறம். இவ்வாறான போராட்டங்கள் மலிந்த குடும்ப வாழ்வியலாக தற்கால வாழ்வியல் முறை மாறியுள்ளது. எதிலும் துன்பம், எதிலும் போராட்டம், எதிலும் போட்டி என்று அந்தரத்தில் ஆடும் பூமியாக குடும்ப வாழ்வு மாறிவிட்டது. இது தவிர்க்க முடியாத ஒன்று. இதில் மாற்றத்தை அவரவரே கொண்டு வர வேண்டும் என்பது ஒருபுறமிருக்க இவற்றினிடையே பிள்ளைகளின் இத்தகைய சீர்கேட்டுச் செயற்பாட்டை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பது மிகப் பெரிய பிரச்சினையே. ஆனால் கட்டுப்படுத்தியே ஆக வேண்டும் என்பது இன்றைய கட்டாய தேவையாகின்றது. துன்பங்கள், துயரங்களை சுமந்து பிள்ளைகளை வளர்க்கின்றோம். எதற்காக? சீரான நன்மதிப்புக் கொண்ட பிரஜைகளாக எமது பிள்ளைகள் வளர வேண்டும் என்பதற்காகவே. அப்படியானால் எப்படி இதைக் கட்டுப்படுத்துவது? நெற்கபேக்கு அறிவியல் தேவைக்காக பிள்ளைகள் போக வேண்டிய கட்டாய தேவை ஏற்பட்டால் அவர்களுடன் குடும்பத்தில் ஒருவர் கூடச் செல்லுங்கள். இதற்காக நீங்கள் உங்கள் நேரத்தை ஒதுக்கியே ஆக வேண்டும். ஏனெனில் பிள்ளைகளின் வாழ்க்கை தொலைந்து போவதற்கு இடமளிக்க முடியாதல்லவா? பாடசாலைக்கு இடையிடையேசென்றுபிள்ளைகளின் பாடசாலை வரவை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். பிள்ளைகளின் பிரத்தியேக வகுப்புக்களுக்குரிய நேர அட்டவணையை உங்கள் வசம் வைத்திருங்கள். பிரத்தியேக வகுப்புக்களுக்குச் செல்லும் நேரம், வரும் நேரங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். விளையாட்டு, சுற்றுலா போன்ற மனமாற்ற செயற்பாடுகளை இடர்களின் மத்தியிலேனும் உருவாக்கிக் கொள்ளுங்கள். கலைத்துறை சார் ஈடுபாடுகளை உருவாக்கி வையுங்கள். வாய்ப்பாட்டு மற்றும் வாத்தியக்கருவி அல்லது நடனம், நாடகம் போன்ற துறைகளில் ஈடுபாட்டுடன் பிள்ளைகள் வளர வழிகாட்டுங்கள். இந்தப் பிரச்சினையிலிருந்து விடுபட இந்த வழிமுறைகளை நீங்கள் பரீட்சித்துப் பார்த்தேயாக வேண்டும்.

### சமூகப் பொறுப்புள்ளோர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையென்ன?

நெற் கபேக்களில் உள்ள கணினிப் பெட்டகங்கள் மூடப்பட்டு இருக்கக்கூடாது. திறந்து விடப்பட வேண்டும் என பல தடவைகள் கோரப்பட்டும் கூட இதுவரை அது நடைமுறைக்கு வரவில்லை. வியாபாரம் என்பது அடுத்தவர் வயிற்றில் நெருப்பை மூட்டி பிழைப்பதல்ல. தொழில் தர்மத்தை மறந்து ஆற்றும் தொழில்கள் என்றும் நிலைக்காது என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். சமூகப் பொறுப்பு என்பது ஒவ்வொருவருக்கும் உண்டு என்பதை சகலரும் புரிந்து செயற்பட வேண்டும். எமது சமூகம் பல இழப்புக்களின் மத்தியில் இருந்து தற்போதுதான் மீண்டெழுந்து வருகின்றது. யாழ். மாவட்ட மாணவ சமுதாயத்தின் கல்வித்தரம் பெரிய பின்னடைவுக்கு சென்று தற்போதுதான் மீண்டெழுந்து வருகின்றது .கிளிநொச்சி உட்பட வன்னிப்பிரதேச கல்வித்தரம் சற்று உயர்ந்து வருகின்றது. இதற்கு உலை வைத்து விடாதீர்கள். தயவு செய்து பொறுப்புடன் செயற்பட்டு கோரிக்கைகளை நிறைவேற்றுங்கள் . இது இன்றைய கட்டாய தேவையாகும்.

கோரிக்கைகளை ஏற்றுப் பொறுப்புடன் செயற்படாத நெற்கபே உரிமையாளர்களுக்கு எதிராக உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது. இல்லையேல் சீரழிவுகள் அதிகரிப்பை உடன் தடுக்க முடியாது. இது சிறு பிள்ளைகளின் மன நிலைகளுடன் தொடர்புபட்ட விடயம் . சீரழிவுகளை அளவிட முடியாது. சீர் குலைவுகளைக் கணிப்பிட முடியாது என்பதை தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். பாடசாலை ஆசிரியர்கள், பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்கள் தற்போதைய இக்கட்டை உணர்ந்து பெற்றோருடன் இடைத்தொடர்பை அதிகரித்து மாணவர்களது வரவை உறுதிப்படுத்த வேண்டும். ஆபாசப் படங்கள் மூலம் வரும் ஆபத்துக்கள் எமது சந்ததியையே சாகடித்துவிடும் என்பதை மறந்து விடாதீர்கள்.

# சமூக மேம்பாட்டுக்கு உழைத்தவர் 'மில்க்வைற்' கனகராசா

எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி
அகில இலங்கை காந்தி சேவா சங்கம்

**மில்க்வைற் க.கனகராசா அவர்களின் 15 ஆவது நினைவு தினம் இன்றாகும். அதனை முன்னிட்டு இந்தச் சிறு கட்டுரை பிரசுரமாகிறது.**



சேவையை தனது மதம் ஆக்கிக் கொண்டவர் காந்தியடிகள். சேவையின் மூலமாகவே கடவுளை அடைய முடியுமென்று நம்பியவர் அவர். உழைப்பே உயர்வுக்கு வழி என்று நிரூபித்துக் காட்டியவர் மகாத்மா. அவர் வழியில் செய்யும் தொழிலை தெய்வமாகவும் கடமையை கண்ணாகவும் மதித்து வாழ்ந்தவர் க.கனகராசா என்ற சிவதர்மவள்ளல். தனது தந்தையாருக்குப் பின்னர் மில்க்வைற் நிறுவனத்தை நடத்தி வந்த அவர் காந்தி மகான் மீது அளவு கடந்த பக்தி கொண்டவராக விளங்கியதோடு மகாத்மாவின் நிர்மாணத் திட்டங்கள் போன்று சமூக மேம்பாடு கருதி பல வேலைத் திட்டங்களை தனி மனிதனாக நின்று செயற்படுத்தி வந்தார். க.சி.குலரத்தினம் அவர்களை கௌரவ ஆசிரியராகக் கொண்டு மில்க்வைற் வெளியீடாக கனகராசா வெளியிட்டு வந்த 'மில்க்வைற்' செய்தி மாத இதழ்களில் காந்தியின் வாழ்வில் இடம்பெற்ற சம்பவங்களைப் பிரசுரித்து வந்தமையும் காந்தியடிகளின் படத்தோடு அவரின் பொன்மொழிகளை பிரசுரங்களாக வெளியிட்டு மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் வழங்கி வந்தமையும் தனது அலுவலக மேசையில் காந்தி விளக்கமளிக்கின்ற மூன்று குரங்குப் பொம்மைகளை வைத்திருந்தமையும் காந்தியடிகளின் சீடராணபூமிதான இயக்கத்தின் பிதாமகர் வினோபாபாவேயின் சிந்தனைகளைத் தொகுத்து வெளியிட்டு வந்தமையும் க.கனகராசா காந்திய சிந்தனையில் மூழ்கியிருந்தார் என்பதற்கு ஒரு சில உதாரணங்களாகும்.

கந்தையாபிள்ளை- மீனாட்சிப் பிள்ளை தம்பதிகளுக்கு 1927 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்த கனகராசா ஒரு சிறந்த சமூகத் தொண்டராக விளங்கினார். பனை அபிவிருத்தி, மரம் நடுதல், கல்வி விருத்தி, சமய அபிவிருத்தி, சிரமதானம் போன்ற இன்னோரன்ன சமூக நலத்திட்டங்களை யாழ். குடாநாட்டில் மாத்திரமன்றி நாட்டின் ஏனைய பகுதிகளிலும் மேற்கொண்டு வந்தார். முக்கியமாக பனை விதைகளைச் சேகரித்து நடுகை செய்து பனைவளம் காப்பதற்கு முயற்சி எடுத்து வந்தமையால் 'கற்பகதரு நாயகர்' என்ற சிறப்புப் பட்டம் அவரைச் சேர்ந்தது.

அமெரிக்காவில் வெளியாகும் மார்குயிஸ் வரிசை நூலில் 1982 -1983 ஆம் ஆண்டு உலகப்பெரியார்கள் அட்டவணையில் கனகராசாவின் பெயரும் இடம்பெற்றிருந்தமை அவர் சேவைக்கு ஒரு சான்றாகும். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தனது ஆத்மசாந்திப் பிரார்த்தனை உரையில் மில்க்வைற் அதிபர் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.


''மக்கட் சமுதாயத்துக்குப் பயன்படக்கூடிய நற்பிறவியைப் பெற்றவர் அமரர் கனகராசா. காப்பன காத்து கடிவன கடிந்து தன் வாழ்வை ஒழுங்கான பாதையில் அமைத்துக் கொண்டவர் இவர். எந்த நேரமும் இறை நாமமும் , புன்சிரிப்பும் ,கவரக்கூடிய முறையில் இவருக்கென்று அமைந்தவையாகும். தொழில் அதிபர் என்ற முறையில் இந்தப் பெரியாரை நான் மதிக்கவில்லை. பண்பான உள்ளமும் ,பழுத்த மனத்து அடியவர் தொடர்பும் இந்தப் பெரியாரிடம் காணப்பட்டதையே நான் வெகுவாகப் பாராட்டுகின்றேன். தமிழகத்துக்கும் காசி யாத்திரைக்கும் அங்கு நடைபெற்ற சைவ மாநாடுகளுக்கும் இவர்தம் பாரியாருடன் வருகை தந்ததும் திருக்கேதீஸ்வரம், கிளிநொச்சி குருகுலம் ஆகிய புனித தலங்களுக்கு இவர்களோடு யாத்திரை செய்ததும் எனக்குப் பசுமையான நினைவுகளைத் தருகிறது. எமது பயணம் எந்த விதத்திலும் வீண் வார்த்தைகள் பேசாத அருட் பயணமாக அமைந்ததை எண்ணிப் பார்க்கிறேன். தனது தாயிலும் மேலாக என்னை மதித்த பெருந்தகை. நல்லதை எண்ணி நல்லதைச் சொல்லி நல்லதை நம்மத்தியில் செயலாற்றியவர் இவர்''

கனகராசாவின் சமூக பணிகளைக் கௌரவித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 2000 ஆம் ஆண்டு கௌரவ கலாநிதிப்பட்டத்தை தேகாந்த நிலையில் வழங்கிப் பெருமைப்படுத்தியது. காந்திய வாழ்வியலின் பல அம்சங்களை தன் வாழ்வில் பின்பற்றி வாழ்ந்த அன்னாரின் மறைவு தினத்தை அகில இலங்கை காந்தி சேவா சங்கம் ஒவ்வோர் ஆண்டும் நினைவு கூர்ந்து வருகிறது. 1981 ஆம் ஆண்டு மில்க்வைற் வெளியீடாக வெளியிடப்பட்ட ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் செய்தருளிய ப்ரச்நோத்ர ரத்ன மாலிகா (வினா-விடை) இன்றைய தினம் சோ.க.தம்பிப்பிள்ளை அவர்களால் மறுபதிப்பு செய்யப்பட்டு அமரரின் நினைவாக வெளியிட்டு வைக்கப்படுகின்றது.

# வாழ்க்கை

## 14 ஒரு வரைபடம்





■ நிவேதிதா மோகன்.

இலங்கை செல்வதற்காக விமான நிலையத்தை அடைந்த நிலாவால் அவளது கண்ணீரை கட்டுப்படுத்தவே முடியவில்லை. எல்லாவற்றையும் மறந்துவிட்டு இனி அம்மாவோடு சந்தோஷமாக இருக்கலாம் என்று கண்களை இறுக்கமாக மூடிக்கொண்டாள்.

8 மணி நேர சோகத்தோடு நிலாவின் பயணம் முடிவடைந்தது. மாலை 4 மணியளவில் இலங்கையை அடைந்த நிலா விமான நிலையத்தை விட்டு வெளியே வந்து அவளது அம்மாவைத் தேடினாள். உடனே நிலாவின் பின் பக்கத்தில் இருந்து யாரோ அவளைக் கட்டிப் பிடித்தனர். திடுக்கிட திரும்பிப் பார்த்த நிலாவின் கண்ணில் இருந்து ஆனந்தக் கண்ணீர் வந்தது. கட்டிக் கொண்டிருக்கும் தம்பியையும், தங்கச்சியையும் அழைத்துக் கொண்டு அவளது அம்மாவை நோக்கி ஓடிப்போய்க் கட்டிக்கொண்டாள். பின் எல்லோரோடும் சந்தோஷமாக வீடு சென்றாள். வீட்டுக்குச் சென்றதும் நிலாவின் அம்மா, தம்பி, தங்கை என எல்லோரும் நிலா வைத் தூக்கி வைத்துக் கொண்டாடினார்கள். பின், நிலா அவர் களுக்கு வாங்கி வந்த பொருள்களை பாசமாகப் பகிர்ந்து கொடுத்தாள். நிலா வந்த கொஞ்ச நேரத்திலேயே அவளைப் பார்க்க அந்த மொத்த ஊரே வந்து விட்டது. எல்லோரும் நிலாவின் அழகையும் அவளது குணத்தையும் கண்டு வியந்தனர். நிலாவின் பழைய தோழர்கள் எல்லோரும் நிலாவை வரவேற்றனர். இப்படியே அந்த இரவை கழித்தாள் நிலா. மறுநாள் காலை ஏழு மணிக்கெல்லாம் நிலாவின் நண்பர்கள் அவளின் வீட்டுக்கு வந்து விட்டனர். சுமார் எட்டு மணிக்கு எல்லோரும் கோயிலுக்குச் செல்லத் தயார் ஆனார்கள். எல்லோரும் அழகான சேலையில் கோயிலுக்குப் போனார்கள். ஆனால் அவ்வளவு கூட்டத்திலும் நிலாவின் அழகும், அவளது சிகப்பும் வெள்ளையும் சேர்ந்த சேலையும் எல்லோரின் கவனத்தையும் அவள் பக்கம் இழுத்தது. அங்கு கோயிலை சுற்றிக்கொண்டு வருகையில் ஒரு சிறு குழந்தை பெற் றோர்களைத் தொலைத்துவிட்டு தவித்துக் கொண்டிருந்தது. உடனே அழுது கொண்டிருந்த அந்த குழந்தையைத் தூக்கி ஏன் செல்லம் அழுறீங்கள்? என்று கேட்க, அந்தக் சின்னக் குழந்தை அம்மாவைக் காணேல.. என்றவுடன் , அந்தக் குழந்தையுடன் பேசிக்கொண்டே அவளது பெற்றோர்களைத் தேடினாள் நிலா. கடைசியாக எதையோ பறி கொடுத்தது போல ஒரு தாய் எதையோ தேடுவது போல தெரிந்தது. உடனே நிலா அவர்களிடம் ஓடிச் சென்று இது உங்களோட குழந்தையா? என்று கேட்க அந் தத் தாயின் முகம் மலர்ந்தது. அந்தக் குழந்தையை வாங்கி முத்த மழை பொழிந்தாள்.
அந்தக் குழந்தையும் சிரிக்கத் தொடங்கியது. உடனே அந்தக் குழந்தையின் தாய்
நீங்க நல்லா இருக்கனும் என்றார். எப்படியாவது நிலாவை தனது, கணவனிடம் காட்ட வேண்டும் என்று அந்தப் பெண் தவித்தாள். நிலா அவளது பூஜையை முடித்துக் கொண்டு கோயிலுக்குப் பின்னால் இருக்கும் அருவி அருகே வந்து மனதில் உள்ள சோகத்தை மறந்து இளைப்பாறினாள். நீங்க இங்க தான் இருக்கிறீங்களா? என்று ஒரு குரல். திரும்பிப் பார்க்கையில் அது அந்தக் குழந்தையின் தாய். பின் அந்தப் பெண், நில்லுங்க என்னோட கணவர் இப்ப வந்து விடுவார், நிலாவுக்கு ஐஸ்கிறீம் வாங்கப் போய் விட்டார் என்றதும் நிலா உங்க குழந்தைக்குப் பெயர் நிலாவா? என்று வியந்து கேட்க அந்தத் தாய் ஆம் ! என்னோட கணவர் வைத்த பெயர். அவருக்கு நிலா என்றால் உயிர் என்றாள். உடனே நிலா மனதுக்குள்ளேயே அப்பா! என்னோட பெயரையும் யாருக்கோ பிடிச்சிருக்கு! என்று நினைத்தாள். திடீரென அந்தத் தாய் இதோ என் கணவர் வந்து விட்டார் என்றதும், நிலா ஆவலாய் திரும்பிப் பார்த்தாள். அவரைப் பார்த்த அடுத்த விநாடியே நிலாவுக்கு தூக்கி வாரிப் போட்டது. அவனுக்கும் அதே நிலை தான். அவன் வேறு யாரும் இல்லை ஆதவ். நிலாவும் ஆதவும் பேச்சு மூச்சின்றி நின்றனர். இவர்கள் இவ்வாறு திகைத்து நிற்கையில் அந்தக் குழந்தை எங்கோ ஓடத் தொடங்கியது. உடனே அந்தக் குழந்தையைப் பிடிக்க அந்தப் பெண்ணும் ஓடினாள்.

உடனே ஆதவ், நிலா ! எப்படி இருக்கிறிங்கள்? என்று கேட்க நிலா ஒன்றுமே கூறாமல் வெறும் தலையை மட்டும் நன்றாக இருக்கிறேன் என்று தெரிவிக்க அசைத்தாள். நிலாவின் தலை அசைப்பிலேயே நிலாவின் கோபம் புரிந்தது. உடனே ஆதவ் என் மனைவி வருவதற்கு முன்னால் நான் நடந்தவற்றை சொல்லி விடுகிறேன் என்று கூறிவிட்டு நடந்த கதையை சொல்லத் தொடங்கினாள். நிலாவும் பொறுமையாக கேட்கத் தொடங்கினாள். உன்னுடைய அம்மா என்னுடன் பேச வேண்டும் என்று கூறியவுடன் நான் அடுத்த நிமிடமே உன்னுடைய வீட்டுக்கு ச் சென்றேன். அப்போது நீ பாடசாலையில் இருந்தாய். வீட்டுக்குச் சென்று உன்னுடைய அம்மா என்னிடம் பேசியது எல்லாமே நமது காதலை பிரிப்பது போலவே இருந்தது. உடனே நான் கோபத்தில் உங்களால் முடிந்தால் எங்கள் காதலை பிரிக்கும் படி சவால் விட்டுவிட்டு சென்றேன். அப்போது உன் அம்மா என்னிடம் நீ உண்மையாக காதலிப்பதாக இருந்தால் ஒரு வாரத்துக்கு உன்னோடு பேச வேண்டாம் என்றார். நானும் எமது காதலை நம்பி பேசாமல் இருந்தேன். ஆனால்அதற்கிடையில் உன் அம்மா பொய் புகைப்படங்களைத் தயார் செய்து உன் மனதை மாற்றி உன்னை வெளிநாடு அனுப்பி வைத்துவிட்டார். கடைசியாக நீ போவதற்கு முன்னால் நடந்தவற்றைக் கூறலாம் என்றுதான் விமான நிலையம் வந்தேன். ஆனால் நீ நிற்காமல் சென்று விட்டாய். அதற்கு பிறகு தான் எனது குடும்பத்தார் கல்யாணியை எனக்கு திருமணம் செய்து வைத்தனர். உன் நினைவு என்னோடு எப்பவும் இருக்க வேண்டும் என்பதற்காக தான் என் குழந்தைக்கு உன் பெயர் வைத்தேன் என்று நடந்தவற்றை கண் கலங்கியவாறே கூறி முடித்தான். இவை எல்லாவற்றையும் கேட்டு சந்தோஷப்பட்டாள் நிலா. காரணம் ஆதவ் நிலாவை திருமணம் செய்திருந்தால் நிலா இறந்தவுடன்அவன் கஷ்டப்பட்டிருப்பான். ஆனால் இப்போது அவனது சந்தோஷமான நிலையைக் கண்டு சந் தோஷம் கொண்டாள். பின், நிலாஉன்னோட மனதுக்கும் எல்லாம் நல்லதாகத் தான் நடந்தது, நடக்கும் என்று கூறிக் கொண்டிருக்கையில் கல்யாணியும் அவளின் குழந்தையும் வந்தார்கள். பின், கல்யாணி நிலாவிடம் தப்பா நினைக்க வேண்டாம் ஒரு நாளை எங்கள் வீட்டுக்கு விருந்துக்கு வாருங்கள் என்று அழைத்தாள். நிலாவும் அதற்கு ஒப்புக் கொண்டு கோயிலில் இருந்து வீடு திரும்பினாள். (தொடரும்)



# பெண்களும் சவால்களும்

> போர்க் குற்றங்களில் இருந்து பெண்களையும் சிறுவர்களையும் பாதுகாக்க வேண்டு மெனில், ஐ.நா மனித உரிமை ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டுள்ள உலக நாடுகளும், ஐ.நா சபையும் இணைந்து செயல்பட்டு ஒரு போர்க்குற்ற தடுப்பு தீர்மானத்தை உருவாக்கி, அதை மீறும் நாடுகளை தண்டிக்கும் பொறுப்பையும் மேற்கொண்டால் தான் முடியும்.

உரிமைப் போராட்டங்களின் மூலம் பெண்கள் பெரும் முன்னேற்றம் அடைந்து, பல துறைகளில் பெருமை சேர்த்திருந்தாலும், உலகத்தின் பல்வேறு இடங்களில் பெண்கள் இன்னும் பின்தங்கியே உள்ளனர் என்பது கவலைக்குரிய விடயம்தான்.

பொருளாதார நிலையில் பின்தங்கிய இடங்களில் பெண்கள் வறுமையினாலும் ஆணாதிக்க சிந்தனை வாதிகளாலும் முடக்கி வைக்கப்பட்டுள்ளனர். வறுமையினால் வாடும் பெண்களுக்கு உரிமைகளை மட்டும் வழங்கினால் போதாது - அதனுடன் பொருளாதார வளர்ச்சிக்கு ஏதுவாக கல்வி, தொழிற் பயிற்சி போன்றவைகளும் வழங்கப்படவேண்டும். சில சமூகங்களில், இனம், மதம், சாதி போன்ற காரணங்களினாலும் பெண்கள் முன்னேற்றம் அடையாமல் இருக்கின்றனர்.


கடந்த் இருபது வருடங்களில் உலகெங்கிலும் இனம்-மதவாத போர்கள் மூண்டுள்ளன. இத்தகைய போர்களில் சிறுவர்களும் பெண்களும் பல்வேறு வகைகளில் தாக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக, பெண்களின் உயிருக்கும் உடலுக்கும் உத்திரவாதம் இன்றி போய்விட்டது. மனித உரிமைகளுக்கப்பால் போர் முறை கட்டுப்பாடுகளுக்குப் புறம்பாக இன்றைய போர்களை ஆதிக்க வெறி கொண்ட அரசுகள் நடத்துகின்றன. இந்தச் சூழலில் போர்க் குற்றங்களினால் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியிருப்பவர்கள் பெண்களும் சிறுவர்களும்தான். இதில் மிகவும் வருத்தப்பட வேண்டிய விடயம், இத்தகைய போர்க் குற்றம் புரியும் அரசுகளை ஐ.நா சபை தகுந்த முறையில் தட்டிக் கேட்காமலும் தண்டிக்காமலும் விடுவதுதான். போர்க் குற்றங்களில் இருந்து பெண்களையும் சிறுவர்களையும் பாதுகாக்க வேண்டுமெனில், ஐ.நா மனித உரிமை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டுள்ள உலக நாடுகளும், ஐ.நா சபையும் இணைந்து செயல்பட்டு ஒரு போர்க்குற்ற தடுப்புத் தீர்மானத்தை உருவாக்கி, அதை மீறும் நாடுகளை தண்டிக்கும் பொறுப்பையும் மேற்கொண்டால் தான் முடியும். இது நடக்கும்வரை, ஆண்களுக்கு நிகராக உரிமைகளைப் பெற்ற பெண்கள், அந்த உரிமைகளை உணர முடியாமல் அசுர அரசுகளின் ஆயுதங்களினால் மாண்டு போகும் அவல நிலையைத் தான் காண நேரிடும்.

## குடிதண்ணீர்த் திட்டம்

அக்கராயன், ஜூலை 22
கிளிநொச்சி காந்தி கிராமத்தில் குடிதண்ணீர்த் திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
காந்தி கிராமத்தின் நிலத்தடி நீர் உவரடைந்து வருவதன் காரணமாக குடிதண்ணீருக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையில் குடிதண்ணீர்த் திட்டமொன்று இங்கு நடைமுறைப்படுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-18)

## ஆனந்தபுரம் அ.த.கவுக்கு புதிய மாடிக் கட்டடம்

புதுக்குடியிருப்பு, ஜூலை 22
புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் அ.த.க. பாடசாலைக்கு சுமார் 20 மில்லியன் ரூபா செலவில் புதிய மாடிக் கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.
இறுதிக்கட்டப் போர் அனர்த்தங்களின் போது குண்டு வீச்சுத் தாக்குதலில் இலக்காகி இந்தப் பாடசாலைக் கட்டடங்கள் தரைமட்டமாக்கப்பட்டன.
இதனை அடுத்து புதுக்குடியிருப்புப் பகுதியில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டதனைத் தொடர்ந்து தற்காலிக கொட்டகைகளில் பாடசாலையின் கற்றல் செயற்பாடுகள் இடம்பெற்று வந்தன. இந்த நிலையில் யுனிசெவ் நிறுவனம் புதிதாக மேல்மாடிக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு 17.5 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளதுடன், முள்ளியவளை 'பாசிக்' அமைப்பு 3 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.
இக் கட்டடத்தின் அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை வித்தியாலய அதிபர் எஸ்.கனகரட்ணம் தலைமையில் இடம்பெற்றது.
புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் ஐ.பிரதாபன், முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.இராஜ்குமார் மற்றும் யுனிசெப் பிரதிநிதிகள் பாடசாலைக் கட்டடத்தின் அடிக்கல்லை நட்டு வைத்தனர். (க-400)



தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையை பொலிஸ் அத்தியட்சகர் லக்சிறி விஜயசிங்க தலைமையிலான பொலிஸ் அதிகாரிகள் பார்வையிடுகின்றனர். (க-12)

## போக்குவரத்து நெருக்கடிக்குள் பூநகரிப் பாடசாலைகள்

பூநகரி, ஜூலை 22
கிளிநொச்சி கல்வி வலயத்திலேயே போக்குவரத்து நெருக்கடியை அதிகம் எதிர்கொள்ளும் நிலையில், பூநகரிக் கோட்டம் விளங்குகின்றது.
பூநகரிக் கல்விக் கோட்டத்தில் அமைந்துள்ள பாடசாலைகள் நீண்டதூரம் உள்வாங்கிய இடங்களில் அமைந்துள்ளன. இதனால் மாணவர்களும், ஆசிரியர்களும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டிய நிலையில் உள்ளனர். ஆனால் உரிய போக்குவரத்து வசதிகள் இல்லாததால் இவர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
குறிப்பாக பூநகரியின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள பாடசாலைகளில் கற்கும் மாணவர்களும், கற்பிக்கும் ஆசிரியர்களும் பெரும் போக்குவரத்து சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
இங்குள்ள வினாசியோடையில் அமைந்துள்ள பாடசாலை தொடர்ச்சியாகப் பேக்குவரத்து இடர்களை எதிர்கொண்டு வருகின்றது.
கண்டாவளை கல்விக் கோட்டத்தைப் பொறுத்தவரையில் கல்லாறு, மயில்வாகனபுரம், பிரமந்தனாறு ஆகிய பகுதிகள் பெரியளவில் போக்குவரத்து இடர்களை எதிர்கொண்டுள்ளன.
கிளிநொச்சி மேற்கிலுள்ள பாடசாலைகளிலும் போக்குவரத்து நெருக்கடி காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# இந்திய வீட்டுத் திட்டம் எமக்கும் வேண்டும்

## வன்னிவிளாங்குளம் மக்கள் கோரிக்கை

மாந்தை, ஜூலை 22
மாந்தை கிழக்கு பிரதேசத்தில் சர்வோதயத்தினால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள அரை நிரந்தர வீடுகள் ஒரு வருட காலத்தினுள் சேதமடைந்துள்ளதால் இந்திய வீட்டுத் திட்டத்தில் தங்களையும் இணைத்துக் கொள்ளுமாறு பாதிக்கப்பட்டவர்கள் அதிகாரிகளைக் கோரியுள்ளனர்.
வன்னிப் பெரு நிலப்பரப்பில் இடம்பெற்ற போர் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் இவர்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டனர். இவர்களின் வீடுகள் யாவும் அழிந்த நிலையில் இவர்களுக்குப் பொது நிறுவனங்கள் தற்காலிக வீடுகளையும் அரை நிரந்தர வீடுகளையும் அமைத்துக் கொடுத்தன.
மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் வன்னி விளாங்குளம் கிராமத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட 17 குடும்பங்களுக்கு சர்வோதயத்தினால் அரை நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. இந்த வீடுகள் ஒரு வருட காலத்தினுள் சுவர்களில் வெடிப்பு ஏற்பட்டுச் சேதமடைந்துள்ளதுடன் மழை காலத்தில் மழை நீர் வீட்டுக்குள் செல்வதால் மக்கள் நிம்மதியாகத் தூங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். பணவசதி உள்ளவர்கள் தமது வீடுகளைத் திருத்தியமைத்துள்ளனர்.
ஆனால் பண வசதியில்லாத எட்டுக் குடும்பங்கள் தமது சேதமடைந்த வீடுகளிலேயே தங்கியுள்ளன. இந்த நிலையில் பாதிக்கப்பட்டுள்ள இந்தக் குடும்பங்கள் இந்திய வீட்டுத் திட்டத்தில் தங்களையும் இணைத்துக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியுள்ளார்கள். (க-115)

> **மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் வன்னி விளாங்குளம் கிராமத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட 17 குடும்பங்களுக்கு சர்வோதயத்தினால் அரை நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.**

## செயற்பாட்டுக் கண்காட்சி ஸ்கந்தபுரம் பாடசாலையில்



அக்கராயன், ஜூலை 22
பத்து பாடசாலைகள் பங்கு கொண்ட தரம் 5 மாணவர்களுக்கான செயற்பாட்டுக் கண்காட்சி ஒன்று ஸ்கந்தபுரம் இல.1 பாடசாலையில் கடந்த 17 ஆம் திகதி நடைபெற்றுள்ளது.
பாடசாலை அதிபர் திருமதி வ.விமலேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகரான திருமதி த.லோகநாதன் கலந்து கொண்டதுடன் கண்காட்சியை ஆரம்பித்தும் வைத்தார்.
இந்தக் கண்காட்சியில் வன்னேரிக்குளம் மகாவித்தியாலயம், ஸ்கந்தபுரம் இல.1 பாடசாலை, ஸ்கந்தபுரம் இல.2 பாடசாலை, அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம், ஆனைவிழுந்தான் அ.த.க. பாடசாலை, ஐயனார்புரம் அ.த.க., கண்ணகைபுரம் அ.த.க., யூனியங்குளம் அ.த.க., கோணாவில் அத.க., ஊற்றுப்புலம் அ.த.க., ஆகிய 10 பாடசாலைகளில் தரம் 5 இல் கல்வி கற்கும் மாணவர்களும் வகுப்பாசிரியர்களும் கலந்து கொண்டனர்.
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை இலக்காகக் கொண்டு இந்தக் கண்காட்சி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## மாணவர்களை ஏற்றிச் செல்லாத பஸ்கள்

அக்கராயன், ஜூலை 22
அக்கராயனிலிருந்து கோணாவில் ஊடாக காலை வேளைகளில் சேவையில் ஈடுபடும் பஸ்கள் பாடசாலை மாணவர்களை ஏற்றிச்செல்வதில்லையென நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், கரைச்சிப் பிரதேச செயலர் ஆகியோரிடம் பெற்றோர் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.
காலை 7.30 மணிக்குப் பயணிக்கும் பஸ்கள் கிளிநொச்சி செல்லும் மாணவர்களை ஏற்றுவதில்லையெனவும் இதற்கு சன நெரிசலைக் காரணம் காட்டுவதாகவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.
இதனால் அக்கராயனில் இருந்து கிளிநொச்சி வரை பாடசாலை பஸ் சேவையை நடத்துமாறு பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
(க-18)

## மந்தகதியில் இடம்பெறும் குளத்தின் புனரமைப்பு வேலைகள்

அக்கராயன், ஜூலை 22
துணுக்காய் அம்பலப்பெருமாள் குளத்தின் புனரமைப்பு வேலைகள் மந்தகதியில் இடம்பெறுவது தொடர்பாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.
இந்தக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக இடம்பெற்று வருகின்றது. ஆனால் இந்த வேலைகள் யாவும் மந்தகதியில் இடம்பெற்று வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.
கடந்த மாரி காலத்தின் போது இந்தக் குளத்தின் அணைக்கட்டு வேலைகள் அரைகுறையான நிலையில் இருந்ததன் காரணமாக குளம் உடைப்பெடுக்கும் அபாயமும் ஏற்பட்டது.
ஆனால் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் எடுத்த துரித நடவடிக்கை காரணமாக குளம் உடைப்பெடுக்கும் ஆபத்து தவிர்க்கப்பட்டது.
இந்த நிலையில் குளத்தின் புனரமைப்பு வேலைகளைத் துரிதமாக மேற்கொண்டு பூர்த்தி செய்யுமாறு கிராம மக்கள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
(க-18)



## ஏற்று நீர்ப்பாசனத்தை ஏற்படுத்துமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூலை 22
முல்லைத்தீவு மாந்தைகிழக்கு சிராட்டிகுளம் பகுதியில் ஏற்று நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய விவசாயப் பிரதேசங்களில் ஒன்றாக சிறாட்டிகுளம் காணப்படுகிறது. இங்குள்ள பறங்கியாற்றினை அண்டிய பகுதியில் தரமான மிளகாய்ச் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது 27 விவசாயிகள் மிளகாய்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.
இதனை மேலும் ஊக்குவிக்கும் வகையில் பறங்கியாற்றில் இருந்து ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் ஒன்றை ஏற்படுத்தித் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
(க-6)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** குடும்பத்தினரின் எண்ணங்களை பூர்த்தி செய்ய வேண்டும் என்று நினைப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி பாராட்டுவார்.

**இடபம்:** புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். விவாதங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் உள்ளவர்கள் யாரும் தன்னைப் புரிந்து கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள். சிறுசிறு அவமானம் ஏற்படக் கூடும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பணிப்போர் வந்து நீங்கும்.

**மிதுனம்:** நீண்ட நாளாக மனதிலிருந்து வந்த குழப்பங்களுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். சகோதர வகையில் மகிழ்ச்சி கிடைக்கும். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**கடகம்:** காரியங்களை முடிப்பதிலிருந்த தடுமாற்ற நிலை மாறும். பயணங்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும். கோபம் தணியும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார்.

**சிங்கம்:** பரபரப்புடன் காணப்படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து எளிமையாக வாழ விரும்புவீர்கள். உடன் பிறந்தவர்களுடன் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும்.

**கன்னி:** பணம் தேவையான அளவு இருக்கும். நண்பர்களின் ஒத்துழைப்பால் சில காரியங்களை முடிப்பீர்கள். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

**நாளை**

ஆடி-07 செவ்வாய்க்கிழமை 23.07.2013
திதி: பிரதமை மு.இ.10.28 வரை
நட்சத்திரம்: உத்தராடம் மு.ப. 07.48 வரை
சுபநேரம்: 10.32 - 12.02 வரை
இராகுகாலம்: 03.02 - 04.32 வரை

**துலாம்:** பணப்பற்றாக்குறை நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். அரசால் ஆதாயம் உண்டு. யோகா, தியானம் இவற்றில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்.

**விருச்சிகம்:** நீண்ட நாளாக தள்ளிப் போன காரியங்கள் இன்று முடியும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். மனக்குழப்பங்கள் விலகும்.

**தனுசு:** அநாவசிய பேச்சைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களைச் சார்ந்திருக்க வேண்டாம். முக்கிய விடயங்களை நீங்களே நேரடியாகச் சென்று செய்வது நல்லது. உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் ஈகோ பிரச்சினை வந்து நீங்கும்.

**மகரம்:** எடுத்த வேலைகளை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். உடல் அசதி, சோர்வு வந்து நீங்கும். பணப்பற்றாக்குறையைச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதத்தை தவிர்க்குக.

**கும்பம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தெளிவான முடிவுகளால் தொல்லைகள் நீங்கும். பேச்சால் தடைப்பட்ட காரியங்களை முடிப்பீர்கள். இளவயது நண்பர்களைச் சந்திப்பீர்கள்.

**மீனம்:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். நட்பு வட்டாரம் விரிவடையும். குடும்பத்தினரின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | 1 | |
| | 8 | 6 | | | | 3 | | |
| | 4 | | 5 | 3 | 9 | 8 | 7 | 6 |
| 6 | | 4 | 7 | | | | | 5 |
| | 5 | 2 | | 4 | | 7 | 6 | |
| 9 | | | | | 3 | 2 | | 4 |
| 4 | 6 | 8 | 3 | 7 | 2 | | 5 | |
| | | 9 | | | | 6 | 3 | |
| | 7 | | | | | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 7 | 9 | 1 | 4 | 3 | 2 | 8 | 6 |
| 4 | 2 | 6 | 7 | 5 | 8 | 3 | 9 | 1 |
| 3 | 8 | 1 | 9 | 6 | 2 | 7 | 4 | 5 |
| 6 | 1 | 7 | 5 | 2 | 4 | 8 | 3 | 9 |
| 8 | 3 | 5 | 6 | 9 | 7 | 1 | 2 | 4 |
| 2 | 9 | 4 | 8 | 3 | 1 | 6 | 5 | 7 |
| 7 | 6 | 3 | 4 | 8 | 9 | 5 | 1 | 2 |
| 9 | 5 | 2 | 3 | 1 | 6 | 4 | 7 | 8 |
| 1 | 4 | 8 | 2 | 7 | 5 | 9 | 6 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்
01.12.1933

ஆண்டவன் அடியில்
22.06.2013

## திருமதி சரவணமுத்து பூமணி
(சரவணை)

நாள்கள் கழிந்தாலும் அன்னையே உம் நினைவுகள்
எம்மைவிட்டு அகலாது.
மனமலர்ச்சியுடன் முகம் மலர்ந்து தோன்றும் உம்
வதனத்தையும் மறக்க முடியாது
முத்தான பேச்சும் பாசத்தின் சொத்தும் பகிர்ந்து
கொள்ளும் தன்மையும்.......
எப்படியம்மா எம்மால் மறக்க முடியும்! முடியாது

எமது அன்புத் தாயார் - குடும்ப விளக்கு அணைந்த செய்திகேட்டு விரைந்தோடி வந்து எம்மோடு இணைந்து துயர் பகிர்ந்த அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். இன்று (22.07.2013) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
கணக்கர் வளவு,
கந்தரோடை, சுன்னாகம்.

குடும்பத்தினர்.

(சி/10548) (45.6.3)

# எட்டாவது ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் முருகேசு மீனாட்சி
(சரஸ் - கரம்பொன் மேற்கு)

திதி: பூரணை 22.07.2013

தோற்றம் 10.08.1928
மறைவு 21.07.2005

வலிகள் நிறைந்த வாழ்க்கைப் பயணத்திலே
மறந்திட நினைக்கும் எண்ணங்கள் பல,
ரணங்கள் தாங்கி இதயம் மரத்த போதிலும்
இனிமை ஊட்டிடும் உன்னுடனான தருணங்கள்

உம் ஆத்மா அடங்கியது உண்மைதான் - ஆனால்
உம் அன்பும் அரவணைப்பும் இன்றும்
எம் மூச்சுக்காற்றில் கலந்து - இவ்வுலகில்
எமக்காய்த் துடிப்பதை உணர்கிறேன் - அம்மா....

அர்த்தமற்று இருந்த எம் வாழ்வில்
ஒளி விளக்காய் வெளிச்சம் தந்தாய்
இருளாய் இருந்த எம் கனவில்
உதிரத்தால் வர்ணம் தீட்டினாய் - அம்மா.

மறைந்தவுடன் மறந்து போகும் உறவா இது?
மறந்தால் நாம் மனித குலமாவோமா அம்மா!!
எத்தனை கவிதைகள் நான் வரைந்தாலும்
எண்ணிலடங்கா உன் பெருமையை உரைக்கத்தான்
முடியுமா அம்மா!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பற்குணராஜா அம்பிகாதேவி (மகள்)

குடும்பத்தினர்.

134, 4ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(C10591)(3.5.6)

திருவடி நிலை சம்புநாத ஈஸ்வரத்தில்

# 21 அடி சிவனின் தியான சிலைக்கு அடிக்கல் நடப்பட்டது

வலி வடக்கு, ஜூலை 22
இலங்கையிலேயே மிகவும் பழைமையான சிவாலயமான சம்பில்துறை திருவடிநிலை சம்புநாத ஈஸ்வரத்தில் சிவ பெருமானின் 21 அடி உயரமான தியானசிலையொன்று நிறுவப்படவுள்ளது. சிவ தொண்டன் அமைப்பால் நிறுவப்படவுள்ள சிலைக்கான அடிக்கல் நடும்விழா ஆடிப்பறப்பு தினத்தன்று இடம்பெற்றது. மேற்படி ஆலய குரு முதல்வர் நரசிங்க சித்தர் சுவாமிகள் தலைமையில் அடிக்கல் நடும் விழா இடம்பெற்றது.



நாட்டிலுள்ள சிவாலயங்களில் மிகவும் பழைமையான இந்த ஈஸ்வரம் பொன்னாலை-கீரிமலை வீதியில் திருவடிநிலை தீர்த்தக்கரைக்கு சமீபமாக பிரதான வீதியில் அமைந்துள்ளது. புராதன காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்று விளங்கிய இந்த ஈஸ்வரம் காலத்துக்கு காலம் இடம்பெற்ற கடல்கோள்களால் அழிவடைந்த நிலையில் வீதியை நோக்கியிருந்த நுழைவாயில் ஆலயம் மட்டுமே தற்போது எஞ்சியிருக்கின்றது.

இந்துக்களின் புனித பூமியாக உள்ள இந்த ஆலயத்தை மீண்டும் வழிபாட்டிடமாக மாற்றும் நோக்கத்துடனும் புராதனஈஸ்வரத்தைப் அழிய விடாமல் பாதுகாக்கும் நோக்கத்துடனுமே இந்த ஆலயத்தில் சிவபெருமானின் மிகப் பெரிய தியான சிலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சிவதொண்டன் அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு மேலும் தெரிவித்ததாவது:
நாட்டில் வாழ்கின்ற மக்களிடையே இந்து மத சிந்தனைகள் பலவீனமடைந்து செல்வதாகவும் இதனாலேயே சமூகங்களிடையே அநீதிகள் தலைதூக்குவதாகவும் சிவதொண்டன் அமைப்பு கவலையடைந்துள்ளது.
இந்த நிலையில், மாதகல், பண்டத்தரிப்பு, சாந்தை, பாண்டவெட்டை, சுழிபுரம், காட்டுப்புலம், பொன்னாலை, மூளாய் போன்ற பிரதேசங்களில் வசிக்கும் மக்களிடையே ஆன்மிக சிந்தனைகளை வளர்க்கும் செயற்பாட்டின் முதற்படியாகவே சம்புநாத ஈஸ்வரத்தில் குறித்த தியான சிலை நிறுவப்படவுள்ளது.
கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்த சிலைக்கான அடிக்கல் நடும் விழாவில் சிவதொண்டன் அமைப்பு, சிவத்தமிழ் மானிட வியல் கழகம், இந்து மகா சபை, சிவ மங்கையர் அமைப்பு, கல்வி சுகாதார மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.
இலங்கையிலுள்ள சிவ தொண்டர்களின் உதவியுடனேயே இந்த சிலை நிறுவும் பணி ஆரம்பக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள சிவ தொண்டன் அமைப்பு இந்த அறப்பணிக்கு உதவிசெய்ய விரும்புபவர்கள் சிவதொண்டன் அமைப்பின் பொருளாளர் அ.சிவானந்தன் என்பவருடன் தொடர்புகொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-86)

## பாடசாலை உணவு நடைமுறை தொடர்பாக ஆளுநர் அலுவலகத்துக்கு முறைப்பாடுகள்

அச்சுவேலி, ஜூலை 22
வடபகுதி பாடசாலைகளில் உணவு சமையல் நடைமுறை மற்றும் விநியோகம் தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு பிள்ளைகளின் பெற்றோர் மற்றும் நலன் விரும்பிகள் மூலம் முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.
இதனால் மாணவர்களின் உணவு வழங்கல் விடயத்தில் கூடிய சிரத்தை செலுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருப்பதாகவும் இது தொடர்பாக கிடைக்கப்பட்ட புகார்களுக்கு சம்பந்தப்பட்ட பாடசாலை நிர்வாகத்திடம் விளக்கங்கள் கோரப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.
சமகால சூழ்நிலையில் மாணவர் விடயத்தில் எதிர்பாராத நிகழ்வுகள் ஏற்படாமல் தடுப்பதற்கு ஏதுவாக முன்கூட்டியே உசார் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
''வடபகுதி பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கல் விடயத்தில் இது வரை காலமும் உணவுக்கு பயன்படுத்தப்படும் அரிசி, பருப்பு, மரக்கறி விடயத்தில் தெரிவிக்கப்பட்ட வந்த புகார்கள் முறைப்பாடுகள் என்பனவற்றை முற்றாக இல்லாமல் செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.அதிகாரிகள் குழு திடீர் பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

## அறங்காவலர் சபையால் உதவிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 22
நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் அறங்காவலர் சபையால் சிறுவர் இல்லம் மற்றும் மருத்துவசேவை உடைய இருவருக்கும் நன்கொடை உதவிகள் வழங்கப்பட்டன.
திருநெல்வேலி கலாசாலை வீதியில் அமைந்துள்ள சைவச் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஆடைகள் தைக்கக் கூடிய 75 மீ்வைகளும் மற்றும் சிறுநீர் மாற்றுச் சிகிச்சை பெறவேண்டிய ஒருவருக்கும், கண் பரிசோதனையற்ற ஒருவருடைய சிகிச்சைக்கு என தலா 50 ஆயிரம் ரூபா நிதியுதவிகளையும் நேற்று முன்தினம் வழங்கி வைத்துள்ளது. (வ-7)

மக்கள் இன்னல்களை எதிர்கொண்டாலும்


# மீள்குடியமர்வு முக்கியமாகும்

யாழ். ஆயர் தெரிவிப்பு

கொழும்புத்துறை, ஜூலை 22
மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்ள நேர்ந்தாலும் தமது சொந்த இடத்தில் மீளக்குடியமர்தல் என்பது மிக முக்கியமானதாகும். தனது குடும்பம் தனது வீடு எனும் நிறைவான ஆறுதல் அமைதிக்கு நிகர் எதுவுமில்லை என்று யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்தார்.
யாழ்.தெல்லிப்பழை வீமன்காமம் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு கரித்தாஸ் – கியூடெக் நிறுவனத்தினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட 23 வீடுகளை கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே யாழ். ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
கரித்தாஸ் – கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்திரு. பேணாட் றெக்னோ அடிகள் தலைமையில் அண்மையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஆயர் மேலும் தெரிவித்ததாவது:
திட்டங்களை செயற்படுத்தி வரும் கரித்தாஸ் – கியூடெக் நிறுவனம் இந்தப் பகுதி மக்கள் குடும்பமாக நிம்மதியுடன் வாழப் புதிய வீடுகளைக் கட்டி கையளிப்பதையிட்டு பெருமகிழ்வு கொள்கிறேன்.
இந்த உதவிகள் உரிய பயனாளிகளுக்கு கிடைப்பதில் மன நிறைவு கொள்கிறேன். இந்தப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும். – என்றார்.
இந்த நிகழ்வில் கொழும்பு கரித்தாஸ் தேசிய நிறுவன இயக்குநர் அருட்திரு. ஜோர்ஜ் சிகாமணி அடிகள் கிராம அலுவலர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-135)

# முட்டை இடும் இன கோழிக் குஞ்சுகளுக்கு 'பஞ்சம்'

அச்சுவேலி, ஜூலை 22
முட்டை இடும் இன கோழிக் குஞ்சுகளுக்கு விலை அதிகரித்துள்ளது.
யாழ்.மாவட்டத்தில் ஒரு கோழிக் குஞ்சு 155 ரூபா வரை விற்கப்படுகின்றது. அத்துடன் தரமான கோழிக்குஞ்சுகளுக்கு பற்றாக்குறை நிலவுகின்றது.
முட்டை இடும் இன கோழிக் குஞ்சுகள் (வெள்ளை/ மண்ணிறம்) முழுமையான வெளி மாவட்டத்தில் உள்ள கோழிப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டே யாழ். மாவட்டத்துக்கு எடுத்து வரப்படுகின்றன.
கடந்த ஜூன் மாதம் வரை



95 ரூபா முதல் 105 ரூபா வரை விலை போன கோழிக் குஞ்சு ஒன்றின் விலை திடீரென அதிகரித்து 140 ரூபாவுக்கு மேல் 155 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.
அதுவும் குறிப்பிட்ட தொகையே பெறக் கூடியதாக உள்ளது. இதனால் பண்ணையாளர் தேவையான அளவை பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
யாழ்.மாவட்டத்தில் கோழி முட்டையின் விலை 10 ரூபா வரை குறைவடைந்த காலச் சூழலில் கோழி வளர்ப்பால் நட்டத்தை முற்றாக கைவிட்ட பலர் முட்டை விலை அதிகரித்திருப்பதால் மீண்டும் கோழிப் பண்ணைத் தொழிலில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.
தற்போது கோழி முட்டை ஒன்றின் சில்லறை விலை 15 ரூபாவாக உள்ளது.
கோழிப் பண்ணைத் தொழிலில் வருடத்தின் பின் அரையாண்டு காலப்பகுதியில் புதிய கோழிக் குஞ்சுகளை பண்ணையில் இணைத்துக் கொள்வதால் முட்டைக் கோழிக் குஞ்சுகளின் விலை அதிகரித்துள்ளது எனக் கூறப்படுகின்றது.
கடந்த காலங்களில் யாழ். மாவட்டத்தில்கோழிக் குஞ்சு சந்தைப்படுத்தலில் மிக மந்த நிலை காணப்பட்டதால் திடீர் அதிகரிப்புக்கு ஏற்ப கோழிக் குஞ்சுகளின் தொகை அதிகரிப்பதற்கு விரும்பாத நிலையில் யாழ்.மாவட்ட முகவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கோழிக் குஞ்சுகள் கிடைப்பதால் அவர்கள் பங்கீட்டு அடிப்படையில் முற்பதிவு மேற்கொண்டவர்களுக்கு கோழிக்குஞ்சுகளை வழங்கிவருகின்றனர். (வ-11)

## அபராதம்

தென்மராட்சி, ஜூலை 22
மீசாலை மேற்குக் கொட்டாம் பிட்டிப் பகுதியில் சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த சுன்னாகம் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
சாவகச்சேரி மதுவரி நிலையத்தினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (வ-9)

## லொறியிலிருந்து தவறி வீழ்ந்தவர் காயம்

லொறியிலிருந்து நித்திரை கொண்டவர் தவறி வீழ்ந்து காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று நள்ளிரவு ஒரு மணியளவில் கொடிகாமம் பகுதி ஏ-9 வீதியில் இடம்பெற்றது.
கொடிகாமம் கெற்பேலியைச் சேர்ந்த அன்ரன் சுரேஸ் (வயது-22) என்பவர் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (வ-9)

## வலிகாமம் கிழக்கிலுள்ள கலைஞர் விவரம் திரட்டல்

அச்சுவேலி, ஜூலை 22
வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள கலைஞர்களின் விவரங்களை உள்ளடக்கிய நூல் ஒன்றை பிரதேச பண்பாட்டுப் பேரவை வெளியிடவுள்ளது. நூலில் சேர்த்துக் கொள்வதற்கு கலைஞர்கள் தொடர்பான தகவல்கள் திரட்டப்படுகின்றன.
வலி.கிழக்கு பிரதேச பண்பாட்டுப் பேரவையின் பொதுக் கூட்டத்தில் ஒரு மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைய இந்த ஏற்பாடு நடைபெற்றுவருகின்றது.
இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் சார் நிலையில் பணி செய்த மற்றும் பணி செய்து கொண்டிருக்கும் கலைஞர்களின் விவரங்கள் தகவல் நூலில் உள்ளடக்கப்படவிருப்பதால் அது தொடர்பான விவரங்களை சம்பந்தப்பட்ட கலைஞர்கள் மற்றும் கலைஞர்களின் உறவினர்கள் நலன் விரும்பிகள் உடனடியாக அனுப்பி வைக்குமாறு வலி.கிழக்கு பண்பாட்டு பேரவை அறிவித்துள்ளது.
கலைஞர்கள் சுய விவரங்கள் மற்றும் அவரது கலைச் சேவைக்காலம், அவர் பணி புரியும் துறைசார் நிலையில் வெளியிட்ட ஆக்கம், அரங்கக்கலை வடிவங்களை குறிப்பிட்டு சுருக்கம் தெளிவாக ஏ-4 தாளில் ஒருபக்கத்துக்கு எழுதி 'கலை விவரம் பிரதேச செயலகம் கோப்பாய்' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு பிரதேச செயலர் எம்.பிரதீபன் அறிவித்துள்ளார். (வ-11)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**பெயர் மாற்றம்** உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயைச் சேர்ந்த விமலசேனா கோபாலசிங்கம் ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து விமலசேனா மயூரன் என பெயர்மாற்றி சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
வி.மயூரன்.
(31129)(3.6.45)

# மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் அட்டூழியங்களுக்கு முடிவில்லையா?

**கேட்கிறார் அஸாத் சாலி**

கொழும்பு,ஜூலை 22

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் முஸ்லிம்களுக்கு எதிரான அட்டூழியங்களுக்கு முடிவே கிடையாதா? என்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலி கேள்வி எழுப்பியுள்ளார்.

மஹியங்கனை மஸ்ஜியதுல் அரபா மூடப்பட்டமையை கண்டித்து அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பள்ளிவாசல் மூடப்பட்டமையை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

பள்ளிவாசல் தாக்குதல் குறித்து முஸ்லிம் அமைச்சர்கள் மௌனம் காப்பது ஏன்? முஸ்லிம்களுக்கு இக்கட்டான சோதனைக் காலம் தொடங்கியுள்ளது.

எனவே அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா இது குறித்து அவசரமாக ஆராய்ந்து உரிய வழிகாட்டலை வழங்க வேண்டும். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-10)



குறைந்த விலையில் சொகுசான பயணம்
கொழும்பு - சென்னை - கொழும்பு
சேவை Rs. 14,000/- upwards
Up to 31.07.13
திங்கள், புதன்,வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில்
✓ Baggage allowance 37 kgs.
✓ Complementary Meals provided
✓ Groups fares offer only over 10 passengers.
AIR - INDIA express
Contact for further information: www.airindiaexpress.in
World of Hayleys
47, Stanley road, Jaffna
Ph: 021 2221878, 0777730818

# மேல் மாகாணத்தில் விரியன் பாம்புகள்



கொழும்பு,ஜூலை 22

மேல் மாகாணத்தில் கோப்பி விரியன் பாம்புக் கடிகளுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதனால், மக்கள் விழிப்புணர்வுடன் இருத்தல் அவசியம் என்று இலங்கையின் முன்னணி விலங்கியல் நிபுணர் என்ஸ்லம் டி சில்வா கேட்டுள்ளார்.

கிராம புறங்களையே பெரும்பாலும் தமது வசிப்பிடமாகக் கொண்டுள்ள விரியன் பாம்புகள் அநேகமாக கோப்பித் தோட்டங்களில் கோப்பி இலைகளின் மேல் சுருண்டு காணப்படும்.

இந்தப் பாம்புகள் வேறு இடங்களில் இருந்துவரும் காய்கறிகள், பழங்கள், விறகு, பூச்சாடிகள், வாழை இலைகள், வாழைக் குலைகள் ஆகியவற்றுடன் கொழும்புக்கு வருகின்றன என்று அவர் தெரிவித்தார்.

அதிக நச்சுத்தன்மை கொண்ட கோப்பி விரியன்கள் மனிதர்களைத் தீண்டினால் பெரும் ஆபத்து நேரிடலாம் என்று அவர் குறிப்பிட்டார் (ச)

> **விரியன் பாம்புகள் அநேகமாக கோப்பித் தோட்டங்களில் கோப்பி இலைகளின் மேல் சுருண்டு காணப்படும்.**

வடக்கின் இளைஞர் யுவதிகளுக்கோர் வரப்பிரசாதம்!!
தவறவிடாதீர்கள்!
ஜப்பான் வீசா
வயது எல்லை 18 - 35
■ முதன் முறையாக ஜப்பான் நாட்டில் கல்விபயில, தொழில் ஒன்றைச் செய்வதற்கான அரிய வாய்ப்பு... மாதவருமானம் 250,000/= முதல் 300,000/= வரை
■ ஜப்பான் நாட்டில் 50 கல்வி நிலையங்களைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பு...
■ 2 வருட கற்கை வீசா மற்றும் தொழில் வாய்ப்பு...
நவம்பர் மாத இறுதிக்குள் எல்லா ஆயத்தங்களும் பூர்த்தி
27.07.2013 அன்று காலை 09.00 மணிக்கு
யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இலசவ கருத்தரங்கு
ஜப்பானிய கல்வி நிறுவக அதிகாரிகளுடனான நேரடி சந்திப்பு
உங்கள் அனைத்துக் கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்குமான அவர்களின் விளக்கங்கள்...
27ஆம் திகதி அன்றே நுழைவுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்படும்.
[Spot Admission & Enrolement]
தரகர்கள் அற்ற சிறந்த நேரடிச் சேவை
AKIKO JAPANESE LANGUAGE & TRAINING CENTER (PVT) LTD.
No.51/2, Old Camp Road, Dalugama, Kelaniya.
Web: www.akiko.lk E-mail: akiko.shermila@gmail.com
தொடர்புகளுக்கு:
தர்ஷினி - 077 445 2087 (யாழ்ப்பாணம், வட பிராந்தியம்)
ஸ்ரீதரன் - 077 193 8290 (கொழும்பு)
அனுமதி இலவசம் Entrance free

மணமகள் தேவை
இந்து கௌரவ குடும்பம் U.K. இல்P.R. உடைய 1983 சித்திரை துலாம்ராசி, 62 கிரகபாவம், செவ்வாய் இல்லை. 5'3'', BSc, MSc, PHD இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி அழகான, மணமகனை விட 5 வயது இளமையான மணப்பெண் தேவை. இந்து, கிறிஸ்தவ மணமக்கள் தேவைக்கு அணுகவும்.
தொடர்பு: சிவாலய சர்வதேச திருமண நிலையம், கல்லூரி வீதி, பூந்தோட்டம், வவுனியா.
தொ.பே. 077 969 4009, 024 490 7956
E.Mail: Shivaalaya@Yahoo.com



பிரான்சிஸ் வின்சன் டீ போல்
(முன்னாள் உபதலைவர், நகரசபை பருத்தித்துறை, தலைவர், கிராம அபிவிருத்தி சங்கம், பருத்தித்துறை - கிழக்கு)
அவர்களின் 75ஆவது அகவையையும், 50 வருடப் பொதுச்சேவையையும் பாராட்டிக் கௌரவிக்கும்
மாபெரும் பாராட்டுவிழா
காலம் : இன்று (22.07.2013) திங்கட்கிழமை மாலை 3.30 மணி
இடம் : பருத்தித்துறை நகரசபை மகாநாட்டு மண்டபம்
தலைவர்
சிவா. கிருஷ்ணமூர்த்தி J.P
(தலைவர், வடமராட்சி வடக்கு பிரதேச செயலக மூத்த பிரஜைகள் பேரவை)
முதன்மை விருந்தினர்
வணக்கத்துக்குரிய பிதா.யஸ்ரின். ஞானப்பிரகாசம் அடிகளார்
(குருமுதல்வர்-யாழ் மறை மாவட்டம்)
கௌரவ விருந்தினர்கள்
வைத்திய கலாநிதி. ஆ. கேதீஸ்வரன்
(பணிப்பாளர், வட பிராந்திய சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்)
திருமதி உஷா சுபலிங்கம்
(உதவி பிரதேச செயலர், பருத்தித்துறை)
அருட்திரு ஜெரோம்.செல்வநாயகம் அடிகளார்
(அதிபர். புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்)
பேராசிரியர் மா. நடராஜசுந்தரம்
(ஓய்வுநிலை பீடாதிபதி, வணிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
பேராசிரியர் நா. ஞானக்குமாரன்
(முன்னாள் பீடாதிபதி, கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)
வைத்திய கலாநிதி கே.கே. சிவராமன்
(பொது வைத்திய நிபுணர், ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை)
நடன நிகழ்ச்சிகள்
ஏற்புரை : திரு.பி.வின்சன் டீ போல்
நன்றியுரையாளர் : திரு.அ.மை.இராஜ்குமார் - விழாக்குழுச் செயலாளர்
அனைவரையும் அன்புக்கரம் நீட்டி அழைக்கின்றோம். -விழாக்குழு-
(C10593)(10,6,3)

Wanted Medical (Sales) Representative
மருத்துவ உபகரணங்கள், மருந்து வகைகள் இறக்குமதி செய்து விநியோகிக்கும் வர்த்தக ஸ்தாபனத்துக்கு மேற்குறிப்பிட்ட பதவிநிலைக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் பணியாற்ற விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்.
★ விண்ணப்பிப்பவர் வயதெல்லை 20-35 ஆகவும் A/L விஞ்ஞானப் பிரிவில் மூன்று பாடங்களில் சித்தியுடன் சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.
★ அடிப்படைச் சம்பளத்துடன் மேலதிக ஊக்க, போக்கு வரவு கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
நேர்முகத்தேர்வு: (24.07.2013) புதன், (25.07.2013) வியாழன், (26.07.2013) வெள்ளி ஆகிய நாள்களில் இடம்பெறும்.
கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.
MEDCON (PVT) LTD
NO: 218, 1/1, HOSPITAL RODA, JAFFNA.
EMAIL: MEDCONJEEVA@GMAIL.COM
MOBILE: 0770124415, 0717943439 (31126) (10,6,3)

வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் அதி விஷேட குறைந்த கட்டணங்கள்.
மருந்துப்பொருட்கள், கடலுணவு, மற்றும் எண்ணெய் வகைகள் என்பனவும் அனுப்பிக்கொள்ளலாம்.
உங்கள் வீடுகளுக்கு வந்து பொருட்களை ஏற்று வெளிநாடுகளில் ஒப்படைக்கும் விசேட சேவை.
குறைந்த நிறையுடைய பொதிகளுக்கும் விஷேட கட்டணச்சலுகை.
மிக குறைந்த கட்டணத்தில் அதி விரைவு சேவை எம்மிடம் மட்டுமே
சகல நாடுகளுக்குமான விமானப்பயணச்சீட்டுக்களையும், இணைந்தசேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.
இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். Tel : 021 222 6113
ARRUL GLOBAL EXPRESS
International Courier & Cargo Service

## பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 22
இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் பிரான்பற்று தொழிற்பயிற்சி நிலையத்தால் வீட்டு மின்னிணைப்பு, முக அலங்காரம் ஆகிய பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
ஆர்வமுடைய விண்ணப்பதாரிகள் தமது சுய விவரக் கோவையை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னதாக இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை முல்லையடி பிரான்பற்று எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-14)

## மனைப் பொருளியலும் அழகியலும் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

அச்சுவேலி, ஜூலை 22
கோப்பாய் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் நடத்தப்படும் மனைப் பொருளியலும் அழகியலும் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
பயிற்சி இலவசமாக வழங்கப்படுவதோடு பயிற்சிக்கு தோற்றுவோருக்கு நாளாந்தம் 100 ரூபா வீதம் ஊக்குவிப்புக் கொடுப்பனவும் மாதாந்தம் வழங்கப்படவுள்ளது.
கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் நடைபெறும் ஊக்குவிப்பு உதவுதொகையுடன் கூடிய இலவச மூன்று மாத பயிற்சி நெறி ஓகஸ்ட் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.
பயிற்சியில் இணைந்து கொள்ள விரும்பும் 18 வயதுக்கும் 35 வயதுக்கும் உட்பட்ட வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவை வதிவிடமாகக் கொண்ட பெண்கள் உடனடியாக தமது விண்ணப்பங்களைத் தமது பிரிவு கிராம அலுவலர் ஊடாக அனுப்பிவைக்குமாறு பிரதேச செயலர் எம்.பிரதீபன் அறிவித்துள்ளார். (வ-11)

## நெடுங்குளம் குடியிருப்பு வீதிகளை புனரமைக்குக

நெடுங்குளம் பிள்ளையார் கோயிலடிக் குடியிருப்புப் பகுதிக்கு வீதிகளை அமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இந்தப் பகுதியில் வீட்டுத் திட்ட உதவியுடனும் சுயமாகவும் அமைக்கப்பட்ட வீடுகளில் 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன.
ஆயினும் போக்குவரத்தை மேற்கொள்ள வசதியாக வீதிகள் செப்பனிடப்படவில்லை. இந்தப் பிரதேசம் மணற்பாங்கான இடமாகையால் வாகனங்கள், சைக்கிள்கள் ஓட்டிச் செல்வதில் பல கஷ்டங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது.
எனவே நெடுங்குளம் வீதியில் இருந்து இந்தக் கிராமத்துக்கு மத்தியில் செல்லும் பிரதான வீதியையும் உள்ளக வீதிகளையும் செப்பனிட வேண்டும் என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ந-135)

# சீரான பஸ்சேவையை வழங்கி உதவுங்கள்

### பூநகரிப் பகுதி மக்களின் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூலை 22
பூநகரிப் பிரதேசத்திற்கான பஸ் சேவையை சீராக வழங்குமாறு அந்தப் பகுதி மக்கள் உரிய தரப்பினர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.
கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலிருந்து பூநகரிக்கும் பூநகரியூடாகவும் நடத்தப்பட்டு வரும் பஸ்களின் சேவைகள் போதாமல் இருப்பதால் பயனாளிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். தமது தேவைகளுக்கு அவசரமாகச் செல்ல வேண்டியவர்களும்கூட பஸ் கிடைக்காததால் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுவதாகத் தெரிய வருகின்றது. அப்படிக் காத்திருந்த போதிலும் வீதியில் வருகின்ற பஸ்கள் பயணிகள் நிறைந்த நிலையில் வருவதால் சிரமங்களுக்கு மத்தியிலேயே பயணிக்க முடிகின்றது.
இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டும், இடைநிறுத்தப்பட்டும் உள்ளதாலும் தனியார் பஸ்கள் குறைந்தளவில் சேவையில் ஈடுபடுவதாலும் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். உரிய தரப்பினர் இதில் கவனம் செலுத்தி பூநகரி மக்களின் போக்குவரத்துக்கு உதவுமாறும் பூநகரிப் பிரதேச சபையின் தவிசாளர் உட்பட மக்கள் பலரும் கோரிக்கை விடுத்துள்ளார்கள். (க-426)

## யாழ்.பல்கலையில் இப்தார் நிகழ்வு



யாழ்ப்பாணம், ஜூலை 22
யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இருபது வருடங்களுக்கு பின்னர் ஸபாப் அமைப்பின் ஏற்பாட்டில் புனித ரம்ழான் இப்தார் நிகழ்வு அமைப்பின் தலைவர் எம்.சர்ஜுன் தலைமையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் விஞ்ஞான பீட பீடாதிபதி எஸ். சற்குணராஜா, கலைப்பீட சிரேஷ்ட பதிவாளர் கே.ஞானபாஸ்கரன், சிரேஷ்ட விரிவுரையாளர் கே.தபோதரன், யாழ். கல்வி வலய உத்தியோகத்தர் அப்துல் ஜலீல், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் வருகை நேர விரிவுரையாளர் பைஸர் உட்பட அனைத்துப் பீட மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளும் அதிதிகளாக கலந்து கொண்டனர். ஹிரா அத் ஓதலுடன் ஆரம்பமான நிகழ்வு சொற்பொழிவு இப்தார் ஆகியவற்றுடன் நிறைவுற்றது. அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த இருநூறு வரையான மாணவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-10)

### வலி.கிழக்கு பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட

# இலக்கியப் போட்டி முடிவுகள்

அச்சுவேலி, ஜூலை 22
வலி.கிழக்குப் பிரதேச செயலக கலாசாரப் பிரிவினால் பாடசாலை மாணவர் மட்டத்தில் நடத்தப்பட்ட இலக்கியப் போட்டியின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் வெற்றி பெற்ற விவரம் வருமாறு:

**பாலர் பிரிவு கவிதைப்போட்டி**
1ஆம் இடம்-க.கவிதரன்- கோப்பாய் நாவலர் வித்தியாலயம்,2ஆம்இடம்-சிகவிஸ்ணா- அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி, 3ஆம் இடம்- அ.நிதுஷா, இ.ஜனனி- அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி

**உறுப்பெழுத்துப்போட்டி**
1ஆம் இடம்- ஜி.சஸ்மிதா- அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி, 2ஆம் இடம்- பா.ஆரணி - அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி, 3ஆம் இடம்- சி.தேனுஜா- நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை, யு.திவானி- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்

**கனிஷ்ட பிரிவு கட்டுரைப்போட்டி**
1ஆம் இடம்- ர.திக்ஸிகா- இடைக்காடு மகா வித்தியாலயம்,2ஆம்இடம்-கோ.சஜானி- இடைக்காடு மகா வித்தியாலயம், 3ஆம் இடம்- சி.விதுஷா- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்

**கவிதைப்போட்டி**
1ஆம் இடம்- கோ.சுஜானி- இடைக்காடு மகா வித்தியாலயம், 2ஆம் இடம்-சி.நிவேதிகா- இடைக்காடு மகா வித்தியாலயம், 3ஆம் இடம்-சி.விதுஷா- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், ந.வரணி- இடைக்காடு மகா வித்தியாலயம்

**கவிதை பாடல்**
1ஆம் இடம்-தே.சுமிந்தன்- கோப்பாய் நாவலர் வித்தியாலயம், 2ஆம் இடம்-பா.கமலினி- கோப்பாய் நாவலர் வித்தியாலயம், 3ஆம் இடம்- த.லயிதா, பி.பார்கவி- கோப்பாய் நாவலர் வித்தியாலயம்

**சிரேஷ்ட பிரிவு**

**கவிதைப்போட்டி**
1ஆம் இடம்- மா.கிரிசாந்- இடைக்காடு மகா வித்தியாலயம்,2ஆம்இடம்-செ.வேலோசா- இடைக்காடு மகா வித்தியாலயம், 3ஆம் இடம்-வ.வபிஸணன், க.பவிதா- கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

**கட்டுரைப்போட்டி**
1ஆம் இடம்- ம.ஆரபி- இடைக்காடு மகா வித்தியாலயம், 2ஆம் இடம்-கு.நிவேதிகா- இடைக்காடு மகா வித்தியாலயம்

**சிறுகதை ஆக்கம்**
1ஆம் இடம்- க.தர்சிகா- இடைக்காடு மகா வித்தியாலயம், 2ஆம் இடம்-உ.அஜித்குமார்-கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

**நாட்டார் பாடல் கவிதைப் பாடல்**
1ஆம் இடம்- கி.பிரியங்கா- கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, 2ஆம் இடம்-ச.பிரியங்கா- கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

**கவிதை நயத்தல்**
1ஆம் இடம்- ஜெ.ஜெஸ்ரிக்கா- கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

**திறனாய்வு**
1ஆம் இடம்- த.தீபிகா- இடைக்காடு மகா வித்தியாலயம், 2ஆம் இடம்- இ.ஜெயப்பிரியா- கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி (ந-11)

## புகைத்தல் தின போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு பரிசளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 22
சர்வதேச புகைத்தல் தினத்தை முன்னிட்டு கல்வியங்காடு சமுர்த்தி வங்கியின் சமுர்த்தி செயலணி நடத்திய விசேட வினாவிடைப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு கல்வியங்காடு சமுர்த்தி வங்கி முகாமையாளர் என். சிவகுமார் தலைமையில் மேற்படி வங்கியில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.
இந்த நிகழ்வில் தலைமையக முகாமையாளர் ரி.தயாகரன், சமுர்த்தி அபிவிருத்தி உதவியாளர் ஆர்.ரகுநாதன் இணைப்பாளர் ஆர்.கேதாரநாதன், நல்லூர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ப.தமிழ்மாறன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை வங்கி முகாமையாளர் என். சிவகுமார் மற்றும் விருந்தினர்கள் வழங்கிக் கௌரவித்தனர். (வ-7)

## மாணவருக்கு நடைபெற்ற கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 22
தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் தரம் ஐந்து புலமைப் பரிசில் கருத்தரங்கு நேற்று முன்தினம் புதன்கிழமை தீவக வலயத்திலும் தென்மராட்சியிலும் நடைபெற்றது.
தீவக வலயத்தில் வேலணை மத்திய கல்லூரியில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நெடுந்தீவு கோட்டம் தவிர்ந்த ஏனைய கோட்டங்களைச் சேர்ந்த 255 மாணவர்களும் 43 ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். மாதிரி வினாத்தாள், கற்றல் கையேடு மும்மொழிகளிலும் கருத்தரங்கில் வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வில் கலந்து கொள்ளாத நெடுந்தீவு கோட்ட மாணவர்களுக்கு ஆரம்பக் கல்வி உதவிப் பணிப்பாளர் ஆசிரிய ஆலோசகரின் துணையுடன் நடத்தப்படவுள்ளதாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர். எஸ். ஜோண் குயின்ரஸ் தெரிவித்தார். (வ-7)

# சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய கலை வடிவங்களை பயன்படுத்த வேண்டும்

### ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் பேச்சு

அச்சுவேலி, ஜூலை 22
''சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய ஆற்றுகை கலை வடிவங்களைப் பயன்படுத்தி சமகால சமூகப் பிறழ்வுகள் மற்றும் கலாசாரச் சீர்குலைவுகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இது காலத்தின் கட்டாயம் என்பதைக் கருத்தில் கொண்டு கலைஞர்கள் தமது பணி முன்னெடுப்புக்களை தொடர வேண்டும்'' என்று கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் தெரிவித்தார்.
யாழ். அச்சுவேலி விஜயநாதன் குழுவினரின் வில்லிசை அரங்கேற்றம் அச்சுவேலி உலவிக்குளம் சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு தலைமை தாங்கி உரையாற்றும் போதே விரிவுரையாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:
கலாபூஷணம் சின்னமணி கணபதிப்பிள்ளை தனது கலையுலக வாரிசுகளிடம் தனது வில்லிசைக் கலையை கையளிக்கும் நிகழ்வாக பெருமை பெறுகின்றது இந்த அரங்கேற்ற நிகழ்வு. கலைஞர்கள் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். அவர்கள் மறைவதில்லை. வில்லிசைக்கு சின்னமணி என்பது சர்வதேச ரீதியில் நிரூபிக்கப்பட்டுள்ளது. அவரது கலைப்பணியைத் தொடர முன் வந்திருப்பவர்கள் அவரது பெயருக்கும் புகழுக்கும் மேலும் பெருமை சேர்க்க வேண்டும்.
சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தவல்ல ஆற்றுகைக் கலையாக வில்லிசையைக் கையாள வேண்டும். படித்தவர்கள் முதல் பாமரர் வரை இந்தக் கலையால் ஈர்க்கப்படுகின்றனர். வில்லிசையில் கதை உரைக்கும் போது சமூகப் பிறழ்வுகள் பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டும்.
வில்லிசைக் கலையில் தமிழகத்தைக் காட்டிலும் எங்கள் மண் சார்ந்த கலைஞர்களுக்கு உலக அரங்கில் வரவேற்பு அதிகம். கலாவிநோதன் சின்னமணி இந்தக் கலையின் அடையாளமாக எங்கள் மண்ணில் திகழ்கின்றார். அவர் நோயுற்று இருந்தாலும் வாழுங் காலத்திலேயே தனது கலையுலக வாரிசுகளை பிரகடனப்படுத்தி அரங்கேற்றி வைப்பது ஆரோக்கியமான செயற்பாடாகும்.
வில்லிசை ஆற்றுகையின் போது இயல் இசை நாடகம் என்ற முக்கூறுகளும் வெளிப்படுத்தப்படுகின்றன. இதனால் வெறுமனே இலக்கியக் கதைகளை மாத்திரம் கூறாமல் இன்றைய சமூகம் பெற வேண்டிய செய்திகளையும் கூற வேண்டும் -என்றார். (எ-11)

## தென்மராட்சியில் வாகனப் புகை பரிசோதனை

வரணி, ஜூலை 22
தென்மராட்சி கிழக்கு பிரதேச வாகன உரிமையாளர்களின் நன்மை கருதி வாகனப் புகைப் பரிசோதனை நடவடிக்கை ஒன்றை தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மேற்கொண்டுள்ளது.
டிறைங்கிறீன் நிறுவனத்துடன் இணைந்து கூட்டுறவுச் சங்க தலைமை வளாகத்தில் குறித்த நடவடிக்கை இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
எனவே வாகன உரிமையாளர்கள் தங்கள் பிரதேசத்தில் அமைந்துள்ள கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் தமது பெயர், முகவரி, வாகன வகை, வாகன இல. தொலைபேசி இல. என்பவற்றை முன் கூட்டியே பதிவு செய்யுமாறு சங்க பொது முகாமையாளர் ஸ்.தேவகுமார் கேட்டுள்ளார். (வ-122)

# மாகாணசபைத் தேர்தல்களில் இறுக்கமான நடைமுறைகள்

## கவனம் செலுத்துகிறார் மஹிந்த தேசப்பிரிய



கொழும்பு,ஜூலை 22
வடக்கு மற்றும் மத்திய, வடமேல் மாகாண சபைகளுக்கான வாக்களிப்புக்களின் போது இறுக்கமான நிதி, நிர்வாகம் மேற்கொள்ளப்படும்.
வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்ட தினத்தில் இருந்து வாக்களிப்புகள் முடிவுறும் வரை தேர்தல் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு கவனம் செலுத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர், தெரிவத் ஆட்சி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.
மாகாண சபைகளுக்கான வாக்களிப்புக்களின் போது வீண் விரயங்களைக் குறைத்துக் கொள்வதற்கு செயற்படுமாறு தேர்தல் ஆணையாளர் கூறியுள்ளார்.
வடமாகாண வாக்களிப்பு செலவுக்காக 850 மில்லியன் ரூபாவை தேர்தல்கள் திணைக்களம் பெற்றுள்ளது.
அதில் 100 மில்லியன் வரை வடமாகாண வாக்களிப்புக்கள் தொடர்பான அடிப்படைச் செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்டுள்ளது.
அதில் 750 மில்லியன் ரூபா வரை எஞ்சியுள்ளது என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டினார்.
எதிர்பாராத விதத்தில் மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைகளுக்கான தேர்தல்களையும் நடத்த வேண்டியநிலை உருவானது.
அதனால் 1,350 மில்லியன் ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதோடு, மூன்று மாகாண சபைகளின் தேர்தல் தொடர்பாக மேலும் 1,500 மில்லியன் ரூபா வழங்குமாறு திறைசேரியிடம் கோரப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-22)

### மாகாண சபைத் தேர்தல்களின்போது

# அரச சொத்துக்களை பாவிப்பதற்குத் தடை

கொழும்பு,ஜூலை 22
வடக்கு,வடமேல், மத்திய மாகாண சபைத் தேர்தல்களின்போது அரசுக்கு மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவால் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்தச் சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
அரச சேவைகள் ஆணைக் குழுவின் மற்றும் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் ஆதனங்களின் கீழ் முறைப்படியாக மேற்கொள்ளப்படும் ஆள் சேர்ப்புக்கள், நியமனங்கள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்களைத் தவிர்த்து, வாக்களிப்பு தொடர்பாக வேட்பு மனுக்கள் கோரப்பட்டுள்ள மத்திய, வடமேல் மற்றும் வடக்கு , மாகாணங்களில் உள்ள அரச நிறுவனங்களில் எந்த விதத்திலுமான நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகள் மேற்கொள்ளப்படுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
வாக்களிப்பு சம்பந்தமாக கட்சியொன்றுக்கு பணிபுரிய அரச அதிகாரிகள் அலுவலக நேரத்தில் கடமை நேர விடுமுறை பெற்று செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.
வாக்களிப்புகள் நடத்தப்படுவதற்கு உரிய மாகாண சபைகளின் அதிகாரப் பிரதேசங்களில் வாக்களிப்பு பணிகள் தொடர்பாக அமர்த்தப்படவுள்ள அரச பாடசாலைகளின் ஆசிரியர்கள், பாடசாலை அதிபர்கள் உள்ளடங்கும் அனைத்து அரச ஊழியர்களினதும் இடமாற்றங்களை ஜூலை மாதம் முதல் வாக்களிப்புகள் முடிவுற்று இரு வாரங்கள் கடக்கும் வரை இடைநிறுத்தி வைக்குமாறு ஏற்கனவே கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.
வாக்களிப்பு சம்பந்தப்பட்ட அரச பணிகள் தொடர்பாக ஈடுபடுத்தப்படாதுள்ள அரச அல்லது அரச கூட்டுத்தாபனங்களின் உத்தியோகத்தர்களோ வாக்களிப்பு இடம் பெறும் கால வரைக்குள் இடமாற்றங்களுக்கு உள்வாங்கப்படும்போது அரசியல் காரணங்கள் மீது இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைக்காதவாறு இடமாற்றங்களை மேற்கொள்வதற்கு அனைத்து அதிகாரிகளும் செயற்பட வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-22)



கிழக்கு மாகாண நீர்வழங்கல் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் வாகரை பிரதேச செயலர் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட கிராமிய நீர் வழங்கல் திட்டத்தை ஞாயிற்றுக்கிழமை கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் திறந்து வைத்துள்ளார்.
அருகில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன்,கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.உதயகுமார் உட்பட பலர் காணப்படுகின்றனர்.

## ஹோட்டலில் தாக்குதல்; வெளிநாட்டவர்கள் காயம்

திருகோணமலை,ஜூலை 22
திருகோணமலை உப்புவெளி பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றினுள் சனிக்கிழமை இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் இரண்டு வெளிநாட்டு பிரஜைகளும் காயமடைந்துள்ளனர்.
இந்தச் சம்பவத்தில் காயமடைந்த இருவரும் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## சாய்ந்தமருதில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

கல்முனை,ஜூலை 22
கல்முனை, சாய்ந்தமருது பிரதேசத்தில் ஓட்டோவில் கஞ்சா எடுத்துச் சென்ற நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
கைது செய்யப்பட்டவரிடமிருந்து 4 கிலோ 150 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.
கல்முனை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்தே குறித்த நபர் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பாக



பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

### மாகாண சபைத் தேர்தல்:

# பாதுகாப்பு கடமையில் மோப்ப நாய்களும்



> நாய்கள் வெடி பொருள்கள் மற்றும் குண்டுகளை கண்டு பிடிக்கும் பயிற்சிய ளிக்கப்பட் டவையாகும்.

கொழும்பு,ஜூலை 22
வடக்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாண சபை தேர்தல்களின் போது பாதுகாப்புக் கடமைகளில் மோப்ப நாய்களையும் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
இதற்கென 35 நாய்களை அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பி வைத்துள்ளதாக கண்டி பொலிஸ் மோப்ப நாய் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி சிசிர வீரகோன் தெரிவித்தார்.
இந்த நாய்கள் வெடி பொருள்கள் மற்றும் குண்டுகளைக் கண்டுபிடிக்கும் பயிற்சியளிக்கப்பட்டவையாகும் என்று அவர் கூறினார். (ச)

# நல்லிணக்கத்துடன் வாழ்வதற்கு மக்கள் ஒன்றிணைய வேண்டும்

## ரம்புக்கன்ஓயா நீர்த்தேக்க திறப்பு விழாவில் மஹிந்த



கொழும்பு,ஜூலை 22
அனைத்து இனங்களுக்கும், மதங்களுக்கும் மதிப்பளித்து நல்லிணக்கத்துடன் வாழ்வதற்கு நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணையவேண்டிய காலம் உருவாகியுள்ளது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.
ரம்புக்கன் ஓயா நீர்த்தேக்கத்தின் திறப்பு விழா சனிக்கிழமை அம்பாறை, மகா ஓயா பொல்லேபெத்தையில் இடம்பெற்றது.
இந்தநிகழ்வில் கலந்து கொண்டுஉரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
30 வருட காலப் போர் முடிவுக்கு வந்துள்ள நிலையில், இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்கள் மக்களுக்கு புதிய புத்துணர்வை ஊட்டுகின்றன.
பயங்கரவாதத்திலிருந்து நாடு விடுவிக்கப்பட்டதனைப் போன்று வறட்சி மற்றும் பட்டினியிலிருந்தும் நாட்டின் சந்ததி விடுவிக்கப்பட்டு தன்னிறைவு மிக்க நாடாக கட்டியெழுப்பப்படும்.
இந்த நாடு மஹிந்த சிந்தனையின் மூலமாக படிப்படியாக அபிவிருத்தியின் பால் தன்னிறைவு அடைகின்றது.
நீர்வளம் நமது நாட்டின் முக்கிய வளங்களில் ஒன்றாகும். அந்த உன்னதமான வளங்களின் உரிமை மக்கள் வசம் இருக்க வேண்டும். எனவே இன, மத பேதமின்றி மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு நாட்டினைக் கட்டியெழுப்ப முன்வர வேண்டும்.- என்றார். (ச)

## இலங்கைப் பெண் சுட்டுக் கொலை!

சைப்பிரஸில் இலங்கைப் பெண் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.
தனிப்பட்ட தகராறு காரணமாக சைப்பிரஸ் பிரஜை ஒருவரால் அந்தப் பெண் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் மங்கல ரந்தெனிய குறிப்பிட்டுள்ளார்.இதனையடுத்து சம்பந்தப்பட்ட நபரும் தன்னைத்தானே சுட்டுக் கொண்டார்.என பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் கூறியுள்ளார். (சி)

## விபத்தில் நால்வர் காயம்

சுன்னாகம், ஜூலை 22
இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியதில் மூவர் படுகாயமடைந்தனர். மற்றுமொருவர் சிறு காயங்களுக்கு இலக்காகினர்
இந்தச் சம்பவம் நேற்றிரவு 8.30 மணியளவில் சுன்னாகம் எரி பொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் இடம்பெற்றது.
இதில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த மாசியப்பிட்டியைச் சேர்ந்த தயாபரன்- சிந்துஜன் (வயது-20) சுன்னாகத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் சிவகுமார் (வயது-52) சின்னத்தம்பி- சந்திரசேகரன் (வயது-49) ஆகிய மூவருமே படுகாயமடைந்த நிலையில் தெலிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
இவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். சிறு காயங்களுக்கு இலக்கான ஒருவர் சிகிச்சையின் பின் வீடு சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.
சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.
(ஐ-400-36)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### உண்மையைக் கண்டறியும் குழுவினர் முள்ளிவாய்க்காலுக்கும் செல்வர்

ணக்க செயற்பாடுகள் தொடர்பிலும் மனித உரிமை நிலைவரங்கள் குறித்தும் ஆராயும் பொருட்டே இந்தக்குழு இலங்கைக்கு பயணத்தை மேற்கொண்டுள்ளது என லண்டன் தகவல்கள் தெரிவிக்கின்றன.
'கொன்சர்வேட்டிவ்' கட்சியின் எலேனர் லையிங், தொழிற்கட்சியின் சைமன் மடன்சுக், கெரி மக் கர்தி, சேய்க் பிரபு, பரோனஸ் ஹேய்ரர் ஆகியோரே இலங்கை வரும் லண்டன் நாடாளுமன்றக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.
எதிர்வரும் 26 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் மேற்படிக்குழுவினர் 24 அல்லது 25 ஆம் திகதியே வடக்கு பகுதிக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிடவுள்ளன.
அதேவேளை, நாளை மறுதினம் பிரிட்டன் நாடாளுமன்றக்குழு இலங்கை நாடாளுமன்றத்துக்கு சென்று சபை நடவடிக்கைகளையும் பார்வையிடவுள்ளது.
இந்த உண்மை கண்டறியும் பயணத்தை பொதுநலவுாய நாடாளுமன்றச் செயலகமும், கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதரகமும் ஒழுங்கு செய்துள்ளன.
இலங்கைப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பும் நாடாளுமன்றக் குழு பிரிட்டன் நாடாளுமன்றில் இலங்கை நிலைவரம் தொடர்பில் விசேட அறிக்கையொன்றை வெளியிடும் என்றும் அறியமுடிகின்றது. (ங-5)

### கூட்டமைப்பின் ஆசனப் பங்கீடு இறுதிமுடிவு இன்று எட்டப்படும்

களும், ஈ.பி.ஆர்.எல்.எவ் 4 ஆசனங்களும், ரெலோ 3 ஆசனங்களும், புளொட், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு தலா 2 ஆசனங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் இலங்கைச் தமிழரசுக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு தலா 3 ஆசனங்களும், ஈ.பி.ஆர்.எல்.எவ் ஓர் ஆசனமும் ஒதுக்கப்பட்டுள்ளன.
முல்லைத்தீவு மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சி, ரொலோ மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ் தலா 2 ஆசனங்களும் தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் புளொட்டுக்கு தலா ஓர் ஆசனமும் ஒதுக்கப்பட்டுள்ளன.
மன்னார் மாவட்டத்தில் ரெலோ 3 ஆசனங்களும், இலங்கை தமிழரசுக் கட்சி மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ் தலா 2 ஆசனங்களும் புளொட்டுக்கு ஓர் ஆசனமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் மன்னார் மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆசனம் ஒன்றைக் கேட்டதனால் இது தொடர்பில் இறுதிமுடிவு செய்யப்படவில்லை.
வவுனியா மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ ஆகிய கட்சிகள் தலா 3 ஆசனங்களைக் கோருவதால் இழுபறி நிலைமை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக இன்றைய தினம் இறுதி முடிவு எட்டப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (5)

### கூட்டமைப்பு வேட்பாளர்களில் சித்தார்த்தனும், சங்கரியும்

பார்க்கப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரஜைகள் குழுத் தலைவர் க.ரவிகரன் மற்றும் க.சிவநேசன் (பவான்) ஆகியோர் போட்டியிடவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
கூட்டமைப்பில் உள்ள கட்சிகளின் முழுமையான வேட்பாளர் பட்டியல் நாளை உத்தியோ பூர்வமாக வெளியிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ங-5)

### எப்போதும் நான் '13' க்கு எதிர்ப்பே

ராகவும் இடம்பிடித்திருந்தேன். அன்று முதல் இன்றுவரை அதே கட்சியில்தான் இருக்கின்றேன். நான்கு தடவைகள் சிறைவாசமும் அனுபவித்திருக்கின்றேன்.
குறிப்பாக, 13ஆவது திருத்தச்சட்டம் கைச்சாத்திடப்படும்போது அதற்கு எதிராகப் போராடியதால் சிறைக்குச் செல்லவேண்டிய நிலையும் எனக்கு ஏற்பட்டது. எனவே, 13இற்கு அன்றும் நான் எதிர்ப்புத்தான். இன்றும் அதே நிலைப்பாட்டில்தான் இருக்கின்றேன்.
''ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாப்பதற்கு அன்று முதல் இன்றுவரை என்னை நான் அர்ப்பணித்தேன். எனினும், அதிகாரத்தைக் கோரி பிரச்சினைகளில் ஈடுபட்ட நபர் நான் அல்லர். பிரதமர் பதவியைப் பலதடவைகள் பெற்றிருக்கலாம். ஆனால், அப்பதவியைக் கோரி நான் வற்புறுத்தல்களை மேற்கொள்ளவில்லை. தற்போது கூட ஜனாதிபதிதான் எனக்குப் பிரதமர் பதவியை வழங்கினார் - என்றும் பிரதமர் கூறினார்.
(ங-சி)

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்**

தோற்றம்
09.10.1936

மறைவு
22.06.2013



**திருமதி மங்கையர்க்கரசி குலசேகரம்பிள்ளை**
(புங்குடுதீவு-08)

கடந்த 22.06.2013 அன்று எம்மை விட்டுப் பிரிந்த எமது குடும்பத் தெய்வம் அவர்களின் செய்தி அறிந்து எமக்கு நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் தொலைபேசி மூலமும் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் நினைவாக இன்று (22.07.2013) திங்கட்கிழமை மு.ப 11 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

53/6, அன்னசத்திரலேன்,
கந்தர்மடம்,
பலாலி வீதி-யாழ்ப்பாணம். (3134) (6.7.11)

**குடும்பத்தினர்.**

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



அன்னையின் மடியில்
19.05.1958

இறைவனடியில்
02.08.2012

**மகேந்திரராஜா மாலினி**

திதி: (22.07.2013) ஆடி மாத பௌர்ணமி

*ஆண்டு ஒன்று சென்றதம்மா ஆறவில்லை எமது துயர்*
*நீங்கள் மறைந்தாலும் உம் நினைவுகள் மறைவதில்லை.*

504, உடையார் வீதி,
கொக்குவில் கிழக்கு,
T.P- 077 968 8021 (31155)(5.6.11)

**கணவர், மகன்.**

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**வீடு வாடகைக்கு**
யாழ்ப்பாணம் வேம்படி வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:-0777570400

**கணினி திருத்தம்**
உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா?உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.அழையுங்கள்.
0779086737 **GUNAA BEST PC**
52,Hospital Road,Jaffna.

**விற்பனைக்கு**
யாழ். நகரில் பாவித்த சோபா செற்றி, 42'' 3D TV, T.V Stand, மரக்கட்டில் (பெரிது), சாப்பாட்டுமேசை, வூபர், Juki தையல் மிசின் மற்றும் நல்ல நிலையிலுள்ள பல வீட்டு உபகரணங்கள்.
தொடர்பு:- 0772487845

**சங்கானை செங்கற்படை மகாதேவப் பிள்ளையார் தேவஸ்தானம் - 2013**



**பத்தாம் திருவிழா** தீர்த்தத் திருவிழா

தில்லை யம்பலத்தே தீயாடும் தீர்த்தன் தன் திருமகன்
தொல்லை வினை தீர்க்கும் எல்லையில்லா அருளாளன்
கல்லைக் கனியாக்கும் செங்கற்படையின் மகாதேவக் கணபதி
வல்லை வந்தளித்தான் அருள் வளர் தீர்த்தத் திருநாளில்

ஆக்கம்: சங்கை – சிவம்

சிறப்புற வாழ்த்துவோர் :
பொன்னுத்துரை இராசம்மா குடும்பத்தினர் (கனடா)
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.
(சி/9757)(2-6-7)

**பளையில் காணிகள் விற்பனைக்கு**

1. பளை A9 வீதிக்கு அருகில் (VMT மரக்காலைக் காணி) 19 பரப்பு உடன் விற்பனைக்கு உண்டு. தேவையேற்படின் பிரித்துக் கொடுக்கப்படும்.
2. மேற்குறித்த காணியின் பின்புறமாக (VMT அரிசி ஆலைக் காணி) A9 வீதியிலிருந்து 100 மீற்றர் உள்பக்கமாக 40 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. அரிசி ஆலை அல்லது வேறு தொழிற்சாலைகள் அமைப்பதற்கு ஏற்ற இடம்.

தொடர்புகளுக்கு:
077 9172 136, 077 4124 430 (31135) (10,16,14)

**அண்ணா உற்பத்திகளை**
மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
**"அண்ணா சுப்பர் சொப்"**
K.K.S வீதி, இணுவில்.

**அண்ணா உற்பத்திகளை**
500/= ரூபாவுக்கு மேல் வாங்குபவர்களுக்கு
'1 பைக்கற் அண்ணா ஜீவாகாரம்'
1000/= ரூபாவுக்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு
'1 பைக்கற் அண்ணா இடியப்பமா'
(C/10581)(10,6,3)

மட்டுவில் வளர்மதி கரப்பந்து தொடர்


# இறுதியாட்டங்கள் இன்று மின்னொளியில்

யாழ்ப்பாணம், ஜூலை 22
மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 48 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டங்கள் இன்று திங்கட்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.
இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ள 'பி' பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவக்கிரி ஜொலி பைற் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
இரவு 7.30 மணிக்கு இடம்பெறவுள்ள 'ஏ' பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
பிரதம விருந்தினராக தென்மராட்சி வர்த்தக சங்கத்தின் தலைவரும் குகஸ் ஸ்ரூடியோ உரிமையாளருமான வடிவேலு சிறிபிரகாஸ் கலந்து கொள்ளவுள்ளார்.
(ற-23)

# கிரிக்கெட் போட்டி இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 22
மானிப்பாய் சிற்றி லயன்ஸ், கொமர்ஷல் வங்கி யாழ். கிளை ஆகியவற்றின் அனுசரணையுடன் வடபிராந்திய வை.எம்.சி.ஏக்கள் இணைந்து நடத்தும் கிரிக்கெட் போட்டிகள் இன்று காலை 8.30 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன.
கிரிக்கெட் போட்டிகளைத் தொடர்ந்து பி.ப. 4 மணிக்கு பரிசளிப்பு விழா நடைபெறும்.
தேசமானி எஸ்.ஜே செல்வராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுகளுக்கு கௌரவ விருந்தினராக லயன் வைத்தியர் வி.தியாகராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக கொமர்ஷல் வங்கி மானிப்பாய் கிளை முகாமையாளர் எஸ்.வி.குருபாதம் மற்றும் யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி எம்.ஆர். மோகனதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.
(ற)

# நெல்லியடி மத்திய ம.வியை வீழ்த்தியது யாழ்.சென்றல்



குருநகர், ஜூலை 22
அகில இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் 17 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தி வரும் பிரிவு III கிரிக்கெட் சுற்றுத் தொடரின் ஆட்டமொன்றில் யாழ்.மத்திய கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தை 139 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.
கடந்த வாரம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியும் மோதிக் கொண்டன.
முதலில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் 48.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 253 ஓட்டங்களைப் பெற்றது.
யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பில் அலன்ராஜ் 54 ஓட்டங்களையும், ஜோய் அகாஸ் 33 ஓட்டங்களையும், கோமதீசன் 28 ஓட்டங்களையும், திரேஸன் 25 ஓட்டங்களையும், நிதுஸன் 24 ஓட்டங்களையும் ஆகக்கூடிய ஓட்டங்களாகப் பெற்றனர். உதிரிகளாக 68 ஓட்டங்கள் பெறப்பட்டன.
நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி சார்பில் பந்து வீசிய தனுஸன் 4 இலக்குகளையும், பஜாஸ் 3 இலக்குகளையும், நிரோஜன், சதிகரன், ரூபாகரன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
254 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி, யாழ். மத்திய கல்லூரி அணியின் துல்லியமான பந்து வீச்சு மற்றும் துடிப்பான களத்தடுப்பு காரணமாக 24.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 114 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது.
நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் சார்பில் துடுப்பெடுத்தாடிய கோகிலராஜ் 10 ஓட்டங்களையும், நிதுஸன் 15 ஓட்டங்களையும், டிலக்ஸன் 18 ஓட்டங்களையும் ஆகக்கூடிய ஓட்டங்களாகப் பெற்றனர். உதிரிகளாக 22 ஓட்டங்கள் கிடைத்தன.
யாழ்.மத்திய கல்லூரி அணியின் சார்பில் பந்து வீசிய மதுஷன் 4 இலக்குகளையும், நிரோஜன் 2 இலக்குகளையும், கோகுல வர்ணன், திரேஸன், அலன்ராஜ் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
(ற-51)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 22
மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் நடத்தும் பாலகிருஷ்ணன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண '20/20' கிரிக்கெட் சுற்றுத் தொடரில் இன்று திங்கட்கிழமை மானிப்பாய் இந்து கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
காலை 8 மணி
நியூஸ்ரார் அணி எதிர் யூனியன்ஸ் அணி
மு.ப. 11 மணி
ஸ்கந்தாஸ்ரார் அணி எதிர் திருநெல்வேலி சி.சி. அணி.
பி.ப. 2 மணி
மானிப்பாய் பரிஷ் அணி எதிர் விக்டோறி அணி. (ற-23)

★★★


யாழ்ப்பாணம், ஜூலை 22
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 48 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் இன்று திங்கட்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகள் விவரம்:
மாலை 4.45 மணி
மயிலங்காடு ஞான முருகன் வி.க. எதிர் நாவாந்துறை சென். நீக்கிலஸ் வி.க. (ற-23)

★★★


யாழ்ப்பாணம், ஜூலை 22
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ள லீக் முறையிலான ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப. 4 மணி
குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் எதிர் அராலி பாரதி விளையாட்டுக் கழகம்.
மாலை 5 மணி
அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் எதிர் வட்டுக்கோட்டை செனிஸ்ரார் விளையாட்டுக்கழகம். (ற-23)

## கிரிக்கெட் சுற்றுத்தொடரில் இன்று

பருத்தித்துறை, ஜூலை 22
பருத்தித்துறை குரும்பைகட்டி உதயசூரியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் 10 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுத் தொடரில் இன்று இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப. 2.30 மணி
அண்ணாசிலையடி வி.க. எதிர் வதிரி கலைமகள் வி.க.
பி.ப. 4 மணி
கரவெட்டி ஞானம்ஸ் வி.க. எதிர் இமையாணன் இ.வி.க. (ற-34)



கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டிகளில் 15 வயது பெண்கள் பிரிவுக்கான சதுரங்கப் போட்டிகளில் சம்பியனாகத் தெரிவாகிய ஐயன்கேணி தமிழ் வித்தியாலய அணியிருனரும் பொறுப்பாசிரியர்களும். (ற-400)





யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தின் விஞ்ஞான வார நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின. ஆரம்ப நிகழ்வில் விரிவுரையாளர் அணிக்கும், மாணவர் அணிக்கும் இடையிலான மென்பந்து கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இந்த நிகழ்வுகளில் யாழ்.பல்கலைக்கழக கணித,புள்ளி விபரவியற்றுறை விரிவுரையாளர் ஆர்.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

## டோனியின் கிண்ணமே சிறந்தது

எனது தலைமையில் 1983ஆம் ஆண்டு வென்ற உலகக் கிண்ணத்தை விட 2011ஆம் ஆண்டு டோனி தலைமையில் இந்திய அணி வென்ற உலகக் கிண்ணம் தான் மிகச் சிறந்தது என்று கபில்தேவ் பாராட்டியுள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

''உண்மையில் டோனி தலைமையிலான இந்திய அணி பெற்ற வெற்றி தான் பெரியது. காரணம், கடுமையான போட்டிகளைத் தாண்டி கிடைத்த வெற்றி இது.

இனி அடுத்த தலைமுறையின்போது ஆட்டங்கள் மேலும் கடுமையாகும்.

சம்பியன்ஸ் கிண்ண போட்டியின்போது இளம் வீரர்கள் மிகச் சிறப்பாக ஆடினர். சச்சின், யுவராஜ், கம்பீர், ஷேவாக் இல்லாமலேயே கலக்கி விட்டனர்.

இந்திய கிரிக்கெட்டில் அடுத்த தலைமுறை வந்து விட் டது. அத்தனை பேரும் சிறப்பாக ஆடுகின்றனர்.

டோனியின் அணித் தலைமை அபாரமாக இருக்கிறது. இந்தியாவின் மிகச் சிறந்த அணித் தலைவர் டோனி தான் என்பதில் சந்தேகமே இல்லை.

ஒரு வீரர்தான் ஒதுக்கப்படுவதாக நினைக்கும் போது மீண்டும் அணிக்குத் திரும்ப போராட வேண்டும். திறமையைக் காட்ட வேண்டும். அப்படி இல்லாவிட்டால் அவர் நல்ல வீரர் அல்ல என்றும் ஷேவாக், கம்பீருக்கும் இது பொருந்தும்'' என்று அவர் தெரிவித்தார். (ற)



இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும் இலங்கை அணிக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் இலங்கை அணி அதிரடியான வெற்றியைப் பெற்றுள்ளது. வெற்றியைக் கொண்டாடும் இலங்கை அணி வீரர்கள்

## உலகக் கிண்ண உதைபந்து: நுழைவுக் கட்டண விவரம் வெளியீடு

2014 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளுக்கான நுழைவுக் கட்டண விவரங்களை சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனம் (பீபா) வெளியிட்டுள்ளது.

ஆரம்பக் குழுநிலைப் போட்டிகளுக்கான நுழைவுக் கட்டணம் 90 அமெரிக்க டொலரும், இறுதிப்போட்டிக்கான கட்டணமாக 440 அமெரிக்க டொலரும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.


வெளிநாட்டு இரசிகர்களுக்கான இறுதியாட்ட நுழைவுக் கட்டணமாக 440 அமெரிக்க டொலர் அறவிடப்படவுள்ளது என்றும் பீபா தெரி வித்துள்ளதுடன், அதிசுடிய நுழைவுக் கட்டணமாக 990 அமெரிக்க டொலர் அறவிடப்படும்என்றும்தெரிவித்துள்ளது.

2014 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலக கிண்ண கால்பந்தாட்ட தொடரில் முதலாவது ஆட்டம் ஜுன் மாதம் 12 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதற்கான நுழைவுச் சீட்டு விற்பனை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி முதல் விற்பனைக்கு விடப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இம்முறை இரசிகர்களுக்காக மூன்று மில்லியன் நுழை வுச் சீட்டுக்கள் வழங்கப்படவுள்ளன என்று பீபா மேலும் குறிப்பிட்டுள்ளது. (ற)

# வெற்றியை நோக்கி இங்கிலாந்து

> “லண்டன் லோர்ட்ஸ் மைதா னத்தில் இடம்பெற்று வரும் இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப் பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 361 ஓட்டங்களையும் ஆஸ்திரேலிய அணி 128 ஓட்டங்களையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.



இங்கிலாந்து-ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான ஆஷஸ் தொடரின் 2ஆவது போட்டியின் 3ஆம் நாள் முடிவில் இங்கிலாந்து அணி வெற்றியை நோக்கி முன்னேறியுள்ளது.

3 இலக்குகளை இழந்து 31 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மூன்றாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த இங்கிலாந்து அணி, ஆட்ட நேர முடிவில், 5 இலக்குகளை இழந்து 333 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.


4ஆவது இலக்குக்காக 99 ஓட்டங்கள் பகிரப்பட்டதோடு, 5ஆவது இலக்குக்காக 153 ஓட்டங்கள் பகிரப்பட, இங்கிலாந்து அணி முழுமையான ஆதிக்கத்தைச் செலுத்தியுள்ளது.

இதன்படி, 4 இலக்குகள் கைவசமுள்ள நிலையில் இங்கிலாந்து அணி 566 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக ஜோறூட் ஆட்டமிழக்காமல் 178 ஓட்டங்களையும் இயன் பெல் 74 ஓட்டங்களையும் ரிம் பிரெஸ்னன் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக பீற்றர் சிடில் 3 இலக்குகளையும் ஜேம்ஸ் பற்றின்சன், ஸ்டீவன் ஸ்மித் இருவரும் தலா ஒவ்வொரு இலக்கையும் கைப்பற்றினர்.

லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் இடம்பெற்று வரும் இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப் பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 361 ஓட்டங்களையும் ஆஸ்திரேலிய அணி 128 ஓட்டங்களையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ங)



# பீற்றர்சனுக்கு காயம்




இங்கிலாந்து அணியின் நட்சத்திர வீரர் கெவின் பீற்றர்சன், தற்போது இடம்பெற்று வரும் ஆஷஸ் தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் அடுத்து வரும் நாள்களில் காயம் காரணமாக விளையாடமாட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாளன்று களத்தடுப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது கெவின் பீற்றர்சன் காயமடைந்திருந்தார். இதன்போது அவரது கெண்டைக்கால் பின்தசையில் உபாதை ஏற்பட்டிருந்தது.

மூன்றாவது நாள் பயிற்சியிலும் அவர் பங்கு பெறவில்லை. காயத்தின் வலி அதிகரித்ததால் அவர் ஸ்கான் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டிருந்தார். இதன்போது அவர் சில தினங்களுக்கு ஓய்வெடுக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது. இதனால் இரண்டாவது போட்டியின் அடுத்து வரும் நாள்களில் அவர் விளையாடமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

ஓகஸ்ட் முதலாம் திகதி ஆரம்பிக்கவுள்ள மூன்றாவது போட்டியிலும் கெவின் பீற்றர்சன் பங்குபற்றுவாரா இல்லையா என்பது குறித்தும் சந்தேக நிலையே ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே முழங்கால் உபாதைக்குள்ளாகியிருந்த கெவின் பீற்றர்சன், ஆஷஸ் தொடரிலேயே நீண்ட காலத்திற்குப் பின்னர் டெஸ்ட் போட்டியொன்றில் பங்குபற்றியிருந்தார்.

கெவின் பீற்றர்சன் மூன்றாவது போட்டியில் பங்குபற்ற முடியாது போனால், அவருக்குப் பதிலாக இயன் மோர்கன் இங்கிலாந்து அணியில் இடம்பிடிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ந)

**Bachelor of Information Technology (BIT)**
**External Degree**
**of**
**University of Moratuwa**

Now In Jaffna Only @ ESOFT Computer Studies (Pvt) Ltd

யாழ் மண்ணில் மொறட்டுவ பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு நிறுவனம் ESOFT
புதிய பிரிவுகளுக்கான
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

நுழைவுத்தகுதிகள்
- உயர்தரத்தில் எந்தத்துறையிலாவது ஒரே தடவையில் 3 பாடச்சித்தி மற்றும் சாதரணதரப்பரீட்சையில் கணித பாடத்தில் "C" தரச்சித்தி.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நாளன்று
- ✓ பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் (ஆங்கிலம்)
- ✓ கல்விச் சான்றிதழ்கள் (O/L,A/L)
- ✓ NIC பிரதி என்பவற்றை உறுதிப்படுத்தி ஒப்படைக்கவும்.

**இறுதி சந்தர்ப்பம்!!**

Application Closing Date
**24.07.2013**
புதன்கிழமை

அத்துடன்,
University of Moratuwa
Bank of Ceylon
A/C No 70993353 எனும் இலக்கத்திற்கு ரூபா 750
செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டையும் இணைத்து எமது கிளையில் ஒப்படைக்கவும்.

மேலதிக தொடர்புகளுக்கு : 077 372 8439

The Leader in Professional ICT Education
**ESOFT METRO CAMPUS -JAFFNA**
No.137, K.K.S Road, Jaffna | Tel : 021 750 1120
**HOTLINE : 077 309 9 308**

**வீடு வாடகைக்கு**

கடற்கரை வீதி, குருநகரில் விசாலமான வீடு வாடகைக்கு உண்டு. அலுவலகப் பாவனைக்கும் உகந்தது. 0776273867

**காணி குத்தகைக்கு**

யாழ்ப்பாணம், கண்டி வீதி, இல.346, (அரஸ்கோ கம்பனிக்கு முன்னால்) 9 பரப்பு வெற்றுக்காணி குத்தகைக்கு விடப்படும். தொடர்புகளுக்கு:-
0776365791- 021 222 7878

**வீடு வாடகைக்கு உண்டு**

கோண்டாவில் - இருபாலை வீதியின் சந்திக்கு மிக அண்மையில் இரண்டு குளிரூட்டிய அறைகள் உட்பட 5 அறைகள், 2 சாலைகள், வாகனத்தரிப்பிடம், இணைந்த குளியலறை, 2 கழிப்பறைகள் அடங்கியது வாடகைக்கு உண்டு. அலுவலகம் மற்றும் வசிப்பிடப் பாவனைக்கு உகந்தவை. தரகர் தேவையில்லை.
தொடர்பு: 0770554634

**பணிநிலை வேண்டுகை**




AQUA
CAR SHOWROOM
எமது காட்சியறைக்கு
வரவேற்பாளர் (பெண்)
பணிநிலைக்கு தகுதியுடையோர்
யூலை 22ம், 23ம் திகதிகளில்
காலை 9.30 – 4.00 மணிவரை
நேரில் வரவும்
e mail: contact@aquaholding.lk
ராஜா பிளாசா, 74, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு.

**BIT University of Colombo** BIT
புதிய கல்வியாண்டிற்கான பதிவுகள்
A/L 3 pass or O/L + Foundation in IT ( FIT )
திரு.இ.குமரன் - B.Sc.
கடந்த 12 வருடங்களாகக் BIT கணினிக் கற்கையில்.....
74, Sabapathy Lane, Jaffna - Near Kokuvil
0776577359

**AQUA**
CAR SHOWROOM
www.aquaholding.lk
Hotline: 0773 169433

ஜப்பானில் இருந்து நேரடியாக வாகனங்கள் இறக்குமதி செய்து தரப்படும்
(பெமிட் (Permit) வாகனங்கள் உட்பட)
பெமிட் விற்பனை செய்ய,
கொள்வனவு செய்ய விரும்புவோரும்
தொடர்பு கொள்ளலாம்



Raja Plaza, 74, Palaly Road, Kondavil East, Jaffna
You Too Can Have A Car

**A/L 2015 Technology Stream**
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Science for Technology ICT
திரு.இ.குமரன் - B.Sc.
கடந்த 12 வருடங்களாகக் கணினிக் கற்கையில்.....
74, Sabapathy Lane, Jaffna - Near Kokuvil
0776577359

**கொழும்பின் பிரபல வருகை விரிவுரையாளர்களின் பங்களிப்புடன்**
Diploma in
**AUTO CAD**
2D & 3D
**Dual Certificates**
1- NVQ Level 3 & 4 Government Certificate
2- INTEC ASIA Certificate

**Bachelor of Engineering**
in
**Civil Construction Technology**
**100% JOB TRAINING**
தொழில்நுட்பக் கல்லூரி, OUSL இல் NCT, Diploma பூர்த்தி செய்த மாணவர்கள் Degree Level தொடர்வதற்கு அரிய சந்தர்ப்பம். பயிற்சி முடிவில்
உடனடி தொழில்வாய்ப்பு
(C/10570)(10.6.3)

MCIS
INTEC ASIA - Regional Office
**Mind Vision**
Technology CAMPUS
No-4, Clock Tower Lane, Jaffna.
**077 933 9353**

**13ஆம் ஆண்டு நினைவலைகள்**

"நீத்தல்,
வாழ்வின்
முடிவு அல்ல;
புதியதொரு
புனித வாழ்வின்
தொடக்கம்."



அமரர்
**திரு. தம்பிப்பிள்ளை சிவஞானசுந்தரம்**
(இளைப்பாறிய பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)

தோற்றம்: 26.06.1941 மறைவு: 14.08.2000

பிள்ளையார் வீதி, திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி.
–குடும்பத்தினர்–

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.